விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது

Valampurii

சங்கு 12 வள்ளுவர் ஆண்டு 2042 பங்குனி 05 சனிக்கிழமை (19.03.2011) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 090

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

## 'போர்க் குற்றம்' ஆதாரம் கிடைத்தது ஐ.நா. விசாரணை நடத்தவேண்டும்

### நிபுணர் குழு பரிந்துரைத்துள்ளதாக தகவல்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் படைத்தரப்பினருக்கும் இடையில் வன்னியில் இடம்பெற்ற இறுதிக் கட்டப் போரின்போது இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்க்குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் விசாரிப்பதற்கு உரிய நடவடிக்கைகளை ஐக்கிய நாடுகள் சபை எடுக்கவேண்டும். இவ்வாறு பான் கீ மூனின் நிபுணர்கள் குழுவின் அறிக்கையில் பரிந்துரைத்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

போரின் போது இருதரப்பினராலும் போர்க்குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்களை மேற்கொண்டதிற்கான ஆதாரங்கள் ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கீ மூனால் நியமிக்கப்பட்ட நிபுணர்குழுவுக்கு கிடைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (20ஆம் பக்கம் பார்க்க)

## சோனியாவுக்கு எதிராக லண்டனில் ஆர்ப்பாட்டம்

இந்திய காங்கிரஸ் கட்சித்தலைவி சோனியா காந்தி லண்டனில் நேற்று முன்தினம் மாற்றத்தின் முகவர்களாக பெண்கள் எனும் தொனிப்பொருளில் 14ஆவது பொது நலவாய சொற்பொழிவை நிகழ்த்திய போது, அவ்வரங்கிற்கு வெளியே இலங் கைத் தமிழர்கள் பலர் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்திய அரசுக்கு எதிர்ப்பு கோஷங்களை எழுப்பிய ஆர்ப்பாட்டக்காரர்கள் இலங்கை தமிழர்களின் நலன்களை பாதுகாப்பதற்கு இந்திய அரசாங்கம் நடவடிக்கை மேற் கொள்ள வேண்டும் என வலியுறுத்தினர். (ந-5)

# போர்க்குற்ற விசாரணை நடத்தத் தவறின் பொருளாதாரத் தடை ஏற்படுத்தப்படும்

## இலங்கைக்கு பிரிட்டன் எச்சரிக்கை

(லண்டன்)

வன்னியில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின்போது அரச படைத்தரப்பால் மேற்கொள்ளப்பட்ட போர்க்குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் சுயாதீனமான சர்வதேச விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என பிரித்தானியா மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

இது குறித்து பிரித்தானிய அனைத்துக் கட்சி நாடாளுமன்றக் குழுவின் தலைவரும் இல்போர்ட் வடக்கு நாடாளுமன்ற உறுப்பினருமான லீ ஸ்கோர்ட் நேற்று வெளியிட் டுள்ள அறிக்கையில், இப் போர்க்குற்றங்கள் தொடர்பில் சுயாதீனமான சர்வதேச விசாரணைகள் மேற்கொள்ளப்படுவதே சர்வதேச சமூகத்தை திருப்திப்படுத்தும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இப் (20ஆம் பக்கம் பார்க்க)

## கடாபி மீது தாக்குதல் நடத்தலாம் ஐ.நா. பாதுகாப்புப் பேரவை அனுமதி



(நியூயோர்க்)

லிபிய ஜனாதிபதி கேணல் கடாபிக்கு ஆதரவான படைத்தரப்பினரின் தாக்குதல்களில் இருந்து பொதுமக்களைக் காப்பாற்றுவதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்வதற்கு ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புப் பேரவை நேற்று அனுமதி வழங்கியுள்ளது.

கேணல் கடாபியின் (02ஆம் பக்கம் பார்க்க)

## அரசு- த.தே.கூட்டமைப்பு நேற்று சந்தித்துப் பேசின

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கும் இலங்கை அரசாங்கத்திற்கும் இடையிலான மற்றுமொரு சுற்றுப் பேச்சுவார்த்தை நேற்று மாலை கொழும்பில் இடம்பெற்றது.

அரசாங்கத்திற்கும், கூட்டமைப்பிற்கும் இடையே இடம்பெறும் மூன்றாம் சுற்றுப் பேச்சுவார்த்தை இதுவாகும்.

இதில் நாடாளுமன்ற உறுப்பினர்கான மாவை சேனாதிராசா, சுரேஷ் பிரேமச்சந்திரன், எம்.சுமந்திரன் மற்றும் கனகேஸ்வரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்தப் பேச்சுவார்த்தையில் கடந்த மூன்று முறை பேசப்பட்ட உடனடிப் பிரச்சினை குறித்து கலந்துரையாடப்பட்டதாக சுரேஷ் பிரேமச்சந்திரன் குறிப்பிட்டார். அங்கு பேசப்பட்ட விடயங்கள் குறித்து அவர் மேலதிக விபரங்கள் தருகையில், (02ஆம் பக்கம் பார்க்க)

## கடாபி பயந்தார்; பணிந்தார் யுத்தநிறுத்தமும் செய்தார்

(திரிபோலி)

லிபியாவில் கிளர்ச்சியாளர்களுக்கு எதிரான கடும் யுத்தத்தில் ஈடுபட்டுவந்த கேணல் கடாபி தலைமையிலான அரசாங்கம் நேற்று வெள்ளிக்கிழமை ஒருதலைபட்சமாக போர் நிறுத்த பிரகடனம் செய்துள்ளது.

லிபிய தலைவர் கேணல் கடாபியை பதவி விலகக் கோரி போராட்டம் நடத்திய கிளர்ச்சியாளர்களுக்கு எதிராக கடாபிக்கு ஆதரவான அரச படைகள் கடும் தாக்குதல்களை நடத்தி வந்தன.

இந்நிலையில் லிபிய பொதுமக்களை பாதுகாப்பதற்காக லிபியா மீதான வான், கடல் மார்க்கமான தாக்குதல்கள் உட்பட தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்வதற்கு ஐ.நா.பாதுகாப்புச் சபை நேற்று அங்கீகாரம் வழங்கியது.

ஐ.நா.பாதுகாப்புச் சபையின் தீர்மானத்திற்கு சில மணித்தியாலங்களுக்கு முன்னர் கிளர்ச்சியாளர் (20ஆம் பக்கம் பார்க்க)

## மன்னிப்புச் சபைக்கு இலங்கை கடிதம்

சர்வதேச மன்னிப்புச் சபைக்கான நியூயோர்க் இயக்குநர் ஜேம்ஸ் மெக்டெனால்டிற்கு அமெரிக் காவுக்கான இலங்கைத் தூதுவர் ஜாலிய விக்கிரமசூரிய கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளார். அதில் கற்றுக் கெண்டபாடங்கள் மற்றும் நல்லிணக்கத்திற்கான ஜனாதிபதி ஆணைக் குழு உட்பட பல விடயங்கள் குறித்து விபரிக்கப்பட்டுள்ளது. இலங்கையின் நல்லிணக்கம், மீள் கட்டுமானம் மற்றும் பாதிப்படைந்த மக்களின் துயர்துடைக்கும் பணிகளுக்கு இலங்கை அரசாங்கத்திற்கு சர்வதேச சமூகத்தின் உதவி அவசியம் என அவர் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். (ந-5)

## உள்ளூராட்சி சபைத் தேர்தல் அரசுக்கு- 205; த.தே.கூ- 12

### ஐ.தே.க, ஜே.வி.பி. படுதோல்வி

(கொழும்பு)

நடைபெற்ற உள்ளூராட்சி சபைத் தேர்தல்களில் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அமோக வெற்றி பெற்றுள்ளது.

இம்முறை 234 உள்ளூராட்சி சபைகளுக்கு நடத்தப்பட்ட தேர்தலில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான கட்சி 205 சபைகளை கைப்பற்றியுள்ளது.

வடக்கு கிழக்கில் தேர்தல் நடத்தப்பட்ட பிரதேசங்களில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சின்னத்தில் போட்டியிட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 12 உள்ளூராட்சி சபைகளைக் கைப்பற்றியுள்ளன.

நாட்டின் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி 9 சபைகளில் மட்டுமே வெற்றி பெற்றுள்ளது.

கடந்த தடவை ஐக்கிய தேசியக் கட்சி கைப்பற்றியிருந்த பல உள்ளூராட்சி சபைகளை அந்தக் கட்சி இம்முறை இழந்துள்ளது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ்4 உள்ளூராட்சி சபைகளிலும் தேசிய காங்கிரஸ் 2லும் வெற்றி பெற்றுள்ளன.

ஜே.வி.பியின் வசமிருந்த ஒரேயொரு உள்ளூராட்சி (20ஆம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Study & Work in UK and Canada**

*Intake Get Register Now*
*Collecting the application until March 31st 2011*
*start the academic on August 2011*
இறுதிச் சந்தர்ப்பம் IELTS தேவையில்லை
*Administration & Documentation*
என்பன வெற்றிகரமான முறையில் எங்களால் செய்து தரப்படும்.
ஐரோப்பிய நாடுகளுக்கான விஸா பெறுவதற்கான Sponsorship பிரச்சினையா? உடனடியாக ஏற்பாடு செய்து தரப்படும்.
சகல தொடர்புகளுக்கும்: 0729994777
London City College
No.01, Deanston House, Deanston Place, Colombo-03
(C-2291)

## நல்லூரில் திருடியவர்கள் கொடிகாமத்தில் அகப்பட்டனர்

நல்லூர் வீதியில் நேற்று முன்தினம் பெண்ணொருவரிடமிருந்து தங்க நகைகளை அபகரித்துச் சென்ற திருடர்கள் கொடிகாமம் பொலிஸாரால் பிடிக்கப்பட்டனர்.இது பற்றித் தெரியவருவதாவது,

மோட்டார் சைக்கிளில் பயணித்த பெண்ணொருவரை இடைமறித்த இனந்தெரியாத நபர்கள், பெண் அணிந்திருந்த தாலிக்கொடி மற்றும் சங்கிலி என்பவற்றை அபகரித்னர்.மேற்படி சம்பவம் தொடர்பாக யாழ்.மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நெவில் பத்தேவாவிற்கு கிடைத்த தொலை பேசி தகவலையடுத்து மேற்கொள்ளப்பட்ட வீதிச்சோதனை நடவடிக்கை மூலமே இந்த திருடர்கள் பிடிக்கப்பட்டுள்ளனர்.

பல்வேறு திருட்டுச் சம்பவங்களுடன் இவர்களுக்கு தொடர்பு இருப்பதாக விசாரணை மூலம் தெரியவந்துள்ளது.அத்துடன் கைது செய்யப்பட்ட இந்த இரண்டு திருடர்களும் நீதிமன்றில் ஆஜர் படுத்தப்பட்டு தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். (ந-6)

**வர்த்தகப் பெருமக்களே...**

பெறுமதிமிக்க உங்கள் வியாபார நிறுவனங்களை இலகுவாகப் பதிவு செய்து, அதற்குரிய கௌரவத்தையும் உத்தரவாதத்தையும் பெற்றுக் கொள்ளுங்கள்.
தொடர்புகளுக்கு:-0729994777
(C-2290)

## கடாபி மீது தாக்குதல் நடத்...

படைத்தரப்பினருக்கு எதிராக கடல் மற்றும் வான் வழித்தாக்குதல்களை மேற்கொள்ளவும் ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புப் பேரவை அனுமதி வழங்கியது.

கேணல் கடாபியின் படைத்தரப்பினரின் வான்தாக்குதல்களை நிறுத்தும் முகமாக லிபியாவில் விமானப் பறப்புத் தடை வலயத்தை ஏற்படுத்துவதற்கு அமெரிக்கா, பிரித்தானியா மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகளின் ஆதரவுடன் கொண்டுவரப்பட்ட தீர்மானத்தை ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புப் பேரவை அங்கீகரித்துள்ளது.

தனக்கு எதிராக ஆர்ப்பாட்டங்களை மேற்கொள்பவர்கள் மீது பாரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளப் போவதாக கேணல் கடாபி அறிவித்த சில மணித்தியாலங்களில் ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புப் பேரவை இத்தீர்மானத்தை அங்கீகரித்துள்ளது.

கிளர்ச்சியாளர்களின் ஆர்ப்பாட்டங்கள் இடம்பெறும் பெங்ஹாசி நகரிலுள்ள மக்களை தான் மீட்கப் போவதாகவும் இதன்போது கிளர்ச்சியாளர்கள் மீது இரக்கமோ, கருணையோ காட்டப்படமாட்டாது எனவும் கேணல் கடாபி நேற்று அந்நாட்டின் தேசியத் தொலைக்காட்சியில் அறிவித்திருந்தார்.

இந்நிலையில் ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புப் பேரவையின் அங்கீகாரத்தை அடுத்து கேணல் கடாபியின் படைத்தரப்பினருக்கு எதிராக தாக்குதல் நடவடிக்கையை மேற்கொள்ள மேற்குலக நாடுகள் தயாராகி வருவதாக செய்திகள் தெரிவித்துள்ளன. (ந-5)

### தவறிவிட்டது

நவாலி வடக்கு, மானிப்பாய் எனும் முகவரியினையுடைய செந்தினி- தருமசீலன் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (575464424V) மற்றும் சாரதி அனுமதிப்பத்திரம், மோட்டார் சைக்கிள் இன்சூரன்ஸ், ரைக்ஸ் என்பன மானிப்பாய் ஆலடிச் சந்திக்கு அண்மையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுடன் தொடர்பு கொள்ளவும்.
சீலன் வெதுப்பகம்
நவாலி
T.P: 0773288761
(சி-2726)

## அரசு– த.தே.கூட்டமைப்பு...

இராணுவத்தின் கட்டுப்பாட்டிலுள்ள இளைஞர், யுவதிகளின் பெயர் விபரம் இன்னும் வெளியிடப்படவில்லை என்பது சுட்டிக் காட்டப்பட்டதாகவும் அதற்குத் தாங்கள் உடனடியான நடவடிக்கை எடுத்து மிக விரைவில் பெற்றோரோ அல்லது உறவினர்களோ சென்று அவர்களை சந்திப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்படும் எனவும் அரச தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இவர்களது பெயர் விபரங்களை பாதுகாப்பு அமைச்சிலும், சம்பந்தப்பட்டவர்களுடனும் பேசப்பட்டதன் பின்னர் வெளிப்படையாக வெளியிடுவதாகவும் தெரிவித்துள்ளனர்.

இரண்டாவது மீள் குடியேற்றம் தொடர்பாகப் பேசப்பட்டது. முக்கியமாக சம்பூரில் 05 வருடங்களாக மீள் குடியேற்றப்படவில்லை. வலிகாமம் வடக்கில் 25 வருடங்களாக மீள் குடியேற்றப்படவில்லை. இதேவேளை இராணுவம் பல இடங்களில் தற்போது மீள் குடியேற்றத்திற்கு அனுமதிக்கவில்லை. முள்ளிவாய்க்கால் கிழக்கு, மேற்கு திருமுருகண்டி போன்ற இடங்களில் மக்கள் குடியேறவிடாமல் இராணுவம் மறுத்து வருகிறது.

ஆகவே அந்த மக்கள் மீள் குடியேற்றப்படவேண்டும் எனவும் எடுத்துக் கூறப்பட்டது. இவை தவிர வட மாகாணத்தின் மக்களைப் புகைப்படம் எடுத்து மக்களைப் பதிவு செய்யும் நடவடிக்கைகளை உயர் நீதிமன்றத்தினால் நிறுத்தப்பட்டபோதும் அவ்வாறான நிகழ்வுகள் பூநகரி, கிளிநொச்சி போன்ற இடங்களில் இடம்பெறுவதை சுட்டிக்காட்டப்பட்டது. அதனை உடனடியாக நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அரசாங்கத் தரப்பினர் தெரிவித்தனர். அத்துடன் நீண்ட காலமாக சிறையிலுள்ள கைதிகள் தொடர்பாகவும் பேசப்பட்டது.

அது தொடர்பான தகவல்கள் திரட்டப்படுவதாகவும் எதிர்வரும் சந்திப்புக்களின் போது இது தொடர்பாக தெரிவிக்கப்படும் எனவும் கூறப்பட்டது.

அரசியல் தீர்வு தொடர்பில் எவ்வாறு பேச்சுவார்த்தை மேற் கொள்ளப்படுவது, அதிகாரப் பரவல் தொடர்பில் எவ்வாறு பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்துச் செல்வது என்பது குறித்தும் என்னென்ன விடயங்கள் உள்ளடக்கப்பட வேண்டும் என்பது குறித்தும் நாங்கள் தெளிவாக எடுத்துக் கூறினோம். அடுத்த கூட்டத்தில் முக்கிய கலந்துரையாடல்கள் இடம்பெறும் எனவும் சுரேஷ் பிரேமச்சந்திரன் மேலும் குறிப்பிட்டார். (ந-5)

### 19/03/2011 இன்று நடைபெறுகின்ற கரைச்சி புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலய ஆண்டுற்சவப் பொங்கல் ஒழுங்குகள்

1) 18/03/2011 நேற்று மீசாலை பண்டமரவடியில் இருந்து புறப்பட்ட பண்டம் இன்று அதிகாலை பரந்தனை வந்தடைந்துள்ளது. இன்று பரந்தன்-முல்லைத்தீவு வீதி வழியூடாக கண்டாவளையை நண்பகல் சென்றடையும் பண்டஊர்வலம் மாலை ஆலயத்தை வந்தடையும்.
2) சகல பாதுகாப்பு ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளதுடன் விசேட போக்குவரத்து வசதிகளும் செய்யப்பட்டுள்ளன.
3) ஆலயத்திற்கு வருகை தரும் அனைத்து வாகனங்களும் புளியம்பொக்கணை சந்தியூடாகவே உள்வருவதற்கு அனுமதிக்கப்படும். ஆலயத்திலிருந்து புறப்படும் அனைத்து வாகனங்களும் தருமபுரம் வீதியூடாகவே வெளிச்செல்ல அனுமதிக்கப்படும்.
4) விசேட அனுமதி பெற்ற வாகனங்கள் மட்டும் ஆலயச் சூழலுக்குள் பிரவேசிக்கமுடியும். ஏனைய வாகனங்கள் உரிய தரிப்பிடங்களில் நிறுத்தப்படல் வேண்டும்.
5) பெண்கள் ஆபரணங்கள் அணிவதைத் தவிர்த்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.
6) ஆலயத்திற்கு வருகை தரும் அடியார்கள் பாரம்பரிய பண்பாட்டு ஆடைகள் அணிவது விரும்பத்தக்கது.

மேற்குறிப்பிட்ட ஒழுங்குகளை அனுசரித்து கடைப்பிடிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

ஆலய பரிபாலனசபை,
கரைச்சி புளியம்பொக்கணை,
நாகதம்பிரான் ஆலயம்.
(சி-2730)

**Computer Mega Sale**

2011 மார்ச் 19,20,21 ஆம் திகதிகளில் யாழ்.மத்திய கல்லூரியில், 22,23ஆம் திகதிகளில் கிளிநொச்சி மத்திய கல்லூரி யில் இடம்பெறும்.அரச உத்தி யோகத்தர்கள், மாணவர்களு க்கு விசேட விலை.
மேலதிக தொடர்பு: 0718570609,0759997700.
(1058)

## மரண அறிவித்தல்

### திருமதி மாணிக்கவாசகர் பார்வதிப்பிள்ளை



கும்பிட்டான் பிள்ளையார் கோவிலடி, வரணி வடக்கு, வரணியைச் சேர்ந்த திருமதி மாணிக்கவாசகர் பார்வதிப்பிள்ளை அவர்கள் 18-03-2011 வெள்ளிக்கிழமை நேற்றைய தினம் காலை 9.45 மணியளவில் காலமானார்.

அன்னார் நமசிவாயக்குருக்கள் மாணிக்கவாசகர் அவர்களின் அன்பு மனைவியும், கோபால கிருஷ்ணன் ஐயர் (கண்ணன்), வரணி, திருமதி மகேஸ்வரன் அனுஷா (லண்டன்), புஷ்பலதா, சுசீலா (வரணி) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 18-03-2011 நேற்று மாலை அவரது இல்லத்திலிருந்து எடுத்துச்செல்லப்பட்டு முள்ளி இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்
குடும்பத்தினர்
கும்பிட்டான் பிள்ளையார் கோவிலடி,
வரணி வடக்கு,
வரணி.
(சி-2729)

## மானிட மாண்புக்கான 50வது முழுநிலா ஒன்றுகூடல் அழைப்பு

**விழா அமைப்பு :** பாரதி நிறுவனம், 19, சம்பியன்லேன், கொக்குவில்.

**அனுசரணை :** வளர்மதி முன்னேற்றக் கழகம், கொக்குவில்.

**காலம் :** 19 – 03 – 2011 சனிக்கிழமை பிற்பகல் 2.00 மணி,

**இடம் :** வளர்மதி முன்னேற்றக் கழக மண்டபம்,
சம்பியன் லேன், கொக்குவில்.

**தலைவர் :** பேராசிரியர் S.சின்னத்தம்பி

**ஆசிவழங்கல் :** பிரம்மஸ்ரீ N.பாலசுப்பிரமணிய குருக்கள்

**பிரதம விருந்தினர் :** திரு. P. லோகநாதன் (M.Phil)
(நிறைவேற்றுப் பணிப்பாளர், இலங்கை பனைவள அபிவிருத்திச்சபை)

இவ்விழாவில் கலந்து சிறப்பிக்குமாறு சமூக மற்றும் கலை ஆர்வலர்கள், அன்பர்கள், நண்பர்கள் யாவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

– விழாக்குழு. (4080)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகக் கிண்ண கிரிக்கெட் திருவிழா 2011

பெப்ரவரி 19 - ஏப்ரல் 02

ICC Cricket World Cup 2011

## வாழ்வா... சாவா போட்டியில் பங்களாதேஷ் இன்று தென்னாபிரிக்காவுடன் மோதல்

(மிர்பூர்)

உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரின் இன்றைய முக்கிய லீக் போட்டியில் தென்னாபிரிக்கா பங்களாதேஷ் அணிகள் மோதுகின்றன.

இதில் வென்றால் மட்டுமே காலிறுதிக்கு முன்னேறும் என்ற வாழ்வா சாவா நிலையில் பங்களாதேஷ் அணி களமிறங்குகின்றது.

உலகக்கிண்ண கிரிக்கெட் தொடர் இந்திய துணை கண்டத்தில் நடக்கிறது. இதில் பங்களாதேஷ் அணியின் நிலைமை பரிதாபமாக உள்ளது. தொடர் ஆரம்பமாகுமுன் எப்படியும் காலிறுதிக்கு முன்னேறி விடலாம் என்றிருந்த நிலையில் மேற்கிந்தியத்தீவுகள் அணிக்கு எதிரான மோசமான தோல்வி அணியை வெகுவாக பாதித்தது.

பின் இங்கிலாந்துக்கு எதிராக கிடைத்த கடைசி நேர வெற்றியால் மீண்டும் உற்சாகமடைந்தது.

இந் நிலையில் தனது கடைசி லீக் போட்டியில் இன்று தென்னாபிரிக்காவை சந்திக்கிறது.

### இம்ருல் நம்பிக்கை

இம்முறை கட்டாய வெற்றியை நோக்கி களமிறங்கும் பங்களாதேஷ் அணிக்கு தொடர்ந்து உறுதியான ஆட்டத்தை வெளிப்படுத்தும் ஆரம்ப வீரர் இம்ருல் கெய்ஸ் (184 ஓட்டங்கள்), தமிம் இக்பால் (152 ஓட்டங்கள்) இன்றும் கைகொடுக்கவேண்டும். தவிர தலா 112 ஓட்டங்கள் எடுத்துள்ள அணித்தலைவர் ஷகிப் அல் ஹசன், சித்திக்கும் ஓட்ட எண்ணிக்கையை உயர்த்தினால் நல்லது.

இங்கிலாந்துக்கு எதிராக கடைசி நேரத்தில் வெற்றிக்கு உதவிய மகமதுல்லா, சபியுல் இஸ்லாம் இன்றும் உதவுவார்கள் என்று தெரிகிறது.

### சுழல் பலம்

அணியின் வேகப்பந்துவீச்சாளர்கள் சபியுல் இஸ்லாம், ரூபல் ஹுசைன் ஓரளவுக்கு ஆறுதல் தருகின்றனர். மற்றப்படி அணியின் மிகப் பெரும் பலமாக சுழற்பந்து வீச்சு உள்ளது.

அணித்தலைவர் ஷகிப் அல் ஹசன் நயீம் இஸ்லாம், அப்துர் ரஷாக் ஆகியோரது கூட்டணியில் தென்னாபிரிக்கா தடுமாறுவது உறுதி.

### டி வில்லியர்ஸ் அபாரம்

தென்னாபிரிக்க அணி ஏற்கெனவே காலிறுதிக்கு முன்னேறிவிட்டது. இதனால் சில முக்கிய வீரர்களுக்கு ஓய்வு அளிக்கப்படலாம். கடந்த போட் டியில் பங்கேற்காத டி வில்லியர்ஸ் (318 ஓட்டங்கள்) மீண்டும் களமிறங்குவார் என்று தெரிகிறது. இவருடன் சேர்ந்து அம்லா (248), டுமினி (204), சிமித் (110), அசத்தலாம். கலிஸ் (109) மீண்டும் எழுச்சிபெற முயற்சிக்கலாம்.

### தாகீர் வருவாரா

வேகப்பந்துவீச்சில் ஸ்ரையன் (10 விக்கெட்), மோர்க்கல் பங்களாதேஷ் அணியை சிதைக்க காத்திருக்கின்றனர். சுழற்பந்து வீச்சில் ரொபின் பீற்றர்சனின் எழுச்சி அணி நிர்வாகத்துக்கு தன் நம்பிக்கையை அதிகரித்துள்ளது.

காயம் காரணமாக இந்தியாவுக்கு எதிரான போட்டியில் களம்காணாத இம்ரான் தாகீர் இன்று மீண்டும் வருகைதரலாம். தவிர ஜொகன் போத்தாவும் கைகொடுப்பார்.

### கட்டாய வெற்றி

பங்களாதேஷ் அணியை பொறுத்தவரையில் 6 புள்ளிகள் பெற்றிருந்தாலும் ரன்ரேட் மிகவும் மோசமாக (-0.765) உள்ளது. இதனால் இன்று வென்றால் மட்டுமே காலிறுதிக்கு செல்ல முடியும் இல்லை எனில் தென்னாபிரிக்காவுடன் சேர்ந்து இந்தியா, இங்கிலாந்து, மேற்கிந்தியத் தீவுகள் அணிகள் காலிறுதிக்குச் சென்று விடும்.

### பழி தீர்க்குமா?

கடந்த 2007 உலகக்கிண்ணத் தொடரின் சுப்பர் 8 போட்டியில் பங்களாதேஷ் அணி (251/8) தென்னாபிரிக்காவை (184 ஓட்டங்கள்) 67 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வீழ்த்தி அதிர்ச்சி கொடுத்தது. இதற்கு இன்று தென்னாபிரிக்க அணி பழிதீர்க்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## முதலிடத்திற்கு போட்டி பாக்.-ஆஸி. இன்று சந்திப்பு

உலக்கிண்ணத் தொடரில் இன்று நடக்கும் லீக் போட்டியில் அவுஸ்திரேலியா - பாகிஸ்தான் அணிகள் மோதுகின்றன. இதில் வெற்றிபெறும் பட்சத்தில் அவுஸ்திரேலியா அணி ஏ முதலிடம் பிடித்து அசத்தலாம்.

பத்தாவது உலகக்கிண்ணத் தொடர் விறு விறுப்பான கட்டத்தை எட்டியுள்ளது. இன்று பி பிரிவில் நடக்கும் கடைசி லீக் போட்டியில் நடப்புச்சம்பியன் அவுஸ்திரேலியா அணி பாகிஸ்தானை எதிர்கொள்கிறது.

அவுஸ்திரேலியா அணி கடந்த 2003, 2007 இல் ஒரு போட்டியில் கூட தோல்வியடையாமல் உலகக் கிண்ணத்தை கைப்பற்றி அசத்தியது.

இம்முறையும் அந்த அணியின் வெற்றி நடை தொடர்கிறது. இதுவரை நடந்த போட்டிகளில் சிம்பாவே, நியூசிலாந்து, கனடா, கென்யா அணிகளை வீழ்த்தி தனது பலத்தை நிரூபித்துள்ளது.

இலங்கையுடனான போட்டி மழையால் பாதிக்கப்பட்டது. மற்றபடி அணியின் முன்னணி துடுப்பாட்ட வீரர்கள் அனைவரும் நல்ல போர்மில் உள்ளனர். ஆரம்ப வீரர்கள் வோட்சன் (256 ஓட்டங்கள்), பிரெட் ஹடின் (237 ஓட்டங்கள்) இருவரும் தலா 3 அரைச் சதம் அடித்துள்ளனர்.

மைக்கெல் ஹசியின் வருகையால் நடுத்தரவரிசை பலம் பெற்றுள்ளது. துணைத் தலைவர் மைக்கெல் கிளார்க்கும் (191) அணியின் ஓட்டங்கள் குவிப்புக்கு உதவுகிறார். அணித்தலைவர் பொண்டிங் (83) இன்னும் போர்முக்கு திரும்பாதது கவலைதான்.

### பந்து வீச்சு நம்பிக்கை

அணியின் வேகப்பந்து வீச்சை பொறுத்தவரை முதல் மூன்று போட்டிகளில் சிறப்பாக இருந்தது. ஆனால் கென்யா அணிக்கு எதிராக சற்றுப்பலவீனம் அடைந்த தைட் (10 விக் கெட்டுக்கள்), மிட்சல் ஜோன்சன் (09), பிரெட் லீ (08) கூட்டணி கனடாவுக்கு எதிராகவும் ஆட்டம் கண்டது. இதனால் இன்று இவர்கள் சாதிக்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர். சுழலில் கிரெஜ்ஜாவுடன் இணைந்து ஸ்ரீபன் சிமித் மீண்டும் விக்கெட் வீழ்த்த முயற்சிக்கலாம்.

### சொதப்பல் ஆரம்பம்

பாகிஸ்தான் அணிக்கு ஆரம்ப வீரர்கள் முகமெட் ஹபீஸ், அகமெட் ஷெசாத் இருவரும் தொடர்ந்து சொதப்புகின்றனர். இதில் 5 போட்டிகளில் பங்கேற்றுள்ள ஹபீஸ் 106 ஓட்டங்களும், ஷெசாத் 44 ஓட்டங்கள் மட்டுமே எடுத்துள்ளனர். இன்று வலிமையான அவுஸ்திரேலியாவுக்கு எதிராக எழுச்சி காணவேண்டும்.

அணித்தலைவர் அப்ரிடியின் (63) துடுப்பாட்டம் சொல்லிக் கொள்ளும் படியில்லை.

மிஷ்பா உல்ஹக் (192), உமர் அக்மல் (167), யூனிஸ்கான் (141), கம்ரான் அக்மல் (114) ஆகியோர் ஆறுதல் தருகின்றனர்.

### அப்ரிடி மிரட்டல்

வேகப்பந்துவீச்சில் உமர் குல் (10 விக்கெட்டுக்கள்) மட்டும் நம்பிக்கை தருகிறார். பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட அக்தர் (3 விக்கெட்) சோபிக்கவில்லை. வகாப் ரியாசும் (2) ஏமாற்றுகிறார். சுழல் பந்துவீச்சை பொறுத்தவரையில் அப்ரிடி தான் அசத்துகிறார். இதுவரை 16 விக்கெட் வீழ்த்தி முதலிடத்தில் உள்ளார். இன்று அவுஸ்திரேலிய அணிக்கு நெருக்கடி கொடுப்பார் என தெரிகிறது.

### முதலிடத்துக்குப் போட்டி

அவுஸ்திரேலியா (9 புள்ளி) பாகிஸ்தான், (8 புள்ளி) ஆகிய இரு அணிகளும் ஏற்கெனவே காலிறுதிக்கு முன்னேறிவிட்டன. இன்றைய போட்டியில் அவுஸ்திரேலியா வெல்லும் பட்சத்தில் 11 புள்ளிகள் பெற்று பட்டியலில் முதலிடத்தை பெறலாம். மாறாக பாகிஸ்தான் வென்றால் தற்போதைய நிலையில் மாற்றம் வரலாம்.


கிரிக்கெட் ரசிகர்களுக்கு ஓர் நற்செய்தி!

MCS இன் ஒரு மில்லியன் ரூபா பரிசை வெற்றிகொள்ள உங்களுக்கு அரிய சந்தர்ப்பம்

தினமும் 5 பேருக்கு

50ஆயிரம் ரூபா வீதம் 100 பேருக்கு

ஒரு மில்லியன் வெற்றிகொள்ளும் வாய்ப்பு

வலம்புரியில் கேட்கப்படும்

உலகக்கிண்ண கேள்விகளுக்கு

சரியான பதிலை அனுப்பி உங்கள் உயர்கல்வி வாய்ப்பை பெற்றுக்கொள்ளுங்கள்

கூப்பனை வென்பவர் அல்லது அவரால் வழங்கப்படும் ஒருவர் பின்வரும் கற்கை நெறிகளுக்கு இப் பரிசுக் கூப்பனை பயன்படுத்த முடியும்

1. கொழும்பு பல்கலைக்கழக தகவல் தொழில்நுட்ப பட்டக் கற்கை நெறி
2. சீமா (லண்டன்) CIMA_UK
3. மைக்கிரோசொப்ற் நிறுவன கணினிப் பொறியியலாளர் கற்கை நெறி
4. அடோப் நிறுவனத்தின் மல்ரிமீடியா கற்கை நெறி

அரையிறுதிச் சுற்றுக்கு தெரிவாகும் அணிகள் ?

1. ................ 2. ................
2. ................ 4. ................

பெயர்: ................
முகவரி: ................
................
தொ.பே: ................
தே.அ.அ.இல: ................

சரியான விடையை எழுதி கூப்பனை பூரணப்படுத்தி 22.03.2011 இற்கு முன்னர் அனுப்புபவர்களில் குலுக்கல் மூலம் தெரிவாகும் வெற்றியாளர் ஒருவருக்கு ஒலிம்பியா ஸ்போட்ஸ் வழங்கும் பெறுமதியான பரிசு காத்திருக்கிறது.

அனுப்ப வேண்டிய முகவரி
'உலகக் கிண்ணம்'
வலம்புரி
இல.3,2 -ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி, யாழ்ப்பாணம்.

ஒலிம்பியா ஸ்போட்ஸ்
இல06,ஜும்மா பள்ளிவாசல் லேன்
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 222 3490

இன்றைய கேள்வி ?

பத்தாவது உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரில் முதலாவது விக்கெட் இணைப்பாட்டமாக அதிக ஓட்டங்களைப் பகிர்ந்த ஜோடி ?

................

சரியான விடையை எழுதி கீழுள்ள கூப்பனை பூரணப்படுத்தி 21.03.2011 இற்கு முன்னர் அனுப்புபவர்களில் குலுக்கல் மூலம் தெரிவாகும் வெற்றியாளர்களுக்கு M.C.S வழங்கும் பரிசுக் கூப்பன்.

பெயர்:- ................
முகவரி:- ................
................
தொ.பே:- ................
தே.அ.அ.இல:- ................

அனுப்ப வேண்டிய முகவரி
'உலகக் கிண்ணம்'
வலம்புரி
இல.3,2 -ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி, யாழ்ப்பாணம்.

உலகக்கிண்ண கிரிக்கெட்-2011

சம்பியனாகும் நாடு?................

தொடர் நாயகன் விருது யாருக்கு?................

சரியான விடையை எழுதி கீழுள்ள கூப்பனை பூரணப்படுத்தி 20.03.2011 இற்கு முன்னர் அனுப்புபவர்களில் குலுக்கல் மூலம் தெரிவாகும் வெற்றியாளர்களுக்கு பெறுமதி வாய்ந்த பரிசில்கள் வழங்கப்படும்.

பெயர்................
முகவரி................
தொலைபேசி................
தே.அ.அ.இல................

'உலகக்கிண்ணம்'
வலம்புரி
இல.3, 2-ம் ஒழுங்கை
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

இன்னும் பல பரிசுகள்

Midea Electro Mart
No:1-1, 1-H, STANLEY ROAD, JAFFNA.

ESPN
இ.ச.பே. நாகரத்தினம் சக நிறுவனம்
52.54, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

JAFFNA ELECTRICAL
94(6), Stanley Road, Jaffna.
Tel: 021 222 2353
Fax: 021 222 4302
E-mail:matheesan16@yahoo.com

SINGER-Manipay
Alady Junction, Manipay.
T.P.:021 225 5343
077 6139592

PC SOLUTIONS TECHNOLOGIES (PVT) LTD
305 Kasthuriyar Road, Jaffna.
T.P:021 2221101,021 2229644
email:- pcsjaffna@sltnet.lk


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விண்ணப்பம் கோரல்

ஆயுர்வேத சேவைக்கான ஆட்சேர்ப்பு

ஆயுர்வேத திணைக்களத்தின் மருத்துவ உத்தியோகத்தர் பிரிவின் ஆரம்ப தரத்தைச் சேர்ந்த மருத்துவ உத்தியோகத்தர் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரி அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் ஆயுர்வேத, சித்த அல்லது யுனானி மருத்துவம் பற்றிய ஐந்தாண்டுப் பயிற்சிநெறியைப் பயின்று பெற்ற பட்டத்துக்குப் பின்னர் ஒரு வருட உள்ளகப் பயிற்சியை நிறைவுசெய்து ஆயுர்வேத மருத்துவ மன்றத்தில் பதிவு செய்துள்ள மருத்துவராக இருத்தல் வேண்டும்.

அத்துடன் 15.04.2011 அன்று 40 வயதிற்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும்.

விண்ணப்பப் படிவங்கள் மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைவாகத் தயாரிக்கப்பட்டு அடுத்த மாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் "ஆயுர்வேத ஆணையாளர், ஆயுர்வேத திணைக்களம், பழைய கொட்டாவ வீதி, நாவின்ன, மகரகம" என்னும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

இது தொடர்பான மேலதிக விபரங்களை நேற்று வெளியான வர்த்தமானியிலோ அல்லது வலம்புரி காரியாலயத்திற்கு நேரில் வந்தோ பார்வையிடலாம். (ஶ்ரீ-6)

# அ'புரம் விமானத்தளத் தாக்குதல் சந்தேக நபர்களுக்கு எதிராக வழக்கு

(கொழும்பு)

அநுராதபுர விமானத் தளத்தின் மீது தாக்குதல் நடத்தப்பட்ட சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள சந்தேக நபர்களுக்கு எதிராக வழக்குத் தொடருமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

தாக்குதல் சம்பவம் தொடர்பில் நான்கு ஆண்டுகளுக்கு முன்னர் நீதிமன்றில் அறிவிக்கப்பட்ட போதிலும் இன்னமும் வழக்குத் தொடரப்படவில்லை என நீதவான் தர்ஷிக்கா விமலசிறி தெரிவித்துள்ளார்.

குறித்த தாக்குதல் சம்பவம் தொடர்பில் புலனாய்வுப் பிரிவினர் மந்த கதியில் செயற்பட்டு வருவதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

சட்டமா அதிபரின் ஆலோசனையைப் பெற்றுக் கொள்ள உள்ளதாக அறிவித்த போதிலும் நீண்ட காலமாக உரிய முறையில் விசாரணைகள் நடத்தப்படவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள அப்துல் குத்தூஸ் பீ. அரவிந்தன் மற்றும் எஸ். சுதாஹரன் ஆகியோரை எதிர்வரும் 23 ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (ஶ்ரீ-2)

# விடுதலைப்புலி உறுப்பினர்கள் மூவர் உட்பட நால்வருக்கு 10 வருட சிறை

இலங்கையிலிருந்து கடல் மார்க்கமாக வெடிபொருட்களுடன் வந்த விடுதலைப்புலி உறுப்பினர்கள் மூவர் உட்பட நான்கு பேருக்கு 10 வருட சிறைத்தண்டனை விதித்து தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2007 ஆம் ஆண்டு சென்னை துறைமுகம் அருகே தமிழகக் கடல் எல்லையில் வந்து கொண்டிருந்த படகை இந்திய கடற்படை வழிமறித்து அதிலிருந்த 5 பேரை துறைமுகப் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

இலங்கையைச் சேர்ந்த ஆறுமுகம் ,சிவபத்மநாபன் ,சகாயம், புருஷோத்தமன் ஆகிய நால்வரும் மற்றும் இராமநாதபுரத்தைச் சேர்ந்த ராமர் ஆகிய ஐவருமே கைது செய்யப்பட்டவர்களாவர்.

இலங்கையிலிருந்து கடல் மார்க்கமாக வந்தபோது படகு பழுதடைந்ததால் சென்னைக்கு திசை மாறி வந்துள்ளனர். இவர்களது படகிலிருந்து ஏகே -56 ரக துப்பாக்கிகள் மற்றும் ஏராளமான வெடி பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இவர்களில் ஆறுமுகம் என்பவர் கடந்த ஆண்டு உடல் நலக் குறைவால் இறந்துள்ளார். இதே வேளை சகாயம், சிவபத்மநாபன், புருஷோத்தமன், ராமர் ஆகிய நால்வருக்கும் 10 ஆண்டு சிறைத் தண்டனை விதித்து நீதிபதி வணங்காமுடி நேற்று முன்தினம் தீர்ப்பளித்துள்ளார். (ஶ்ரீ-2)

# பொலிஸார் கனரக ஆயுதங்களை பயன்படுத்த தடை விதிக்கப்படவுள்ளது

## பொலிஸ்மா அதிபர் தெரிவிப்பு

(கொழும்பு)

பொலிஸார் கனரக ஆயுதங்களைப் பயன்படுத்துவதற்குத் தடை விதிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மக்களுடன் நெருங்குவதற்கான ஓர் அணுகுமுறையாக கனரக ஆயுத பயன்பாட்டுக்குத் தடை விதிக்கப்படவுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

வழமையான கடமைகளின் போது பொலிஸாருக்கு எதிர்காலத்தில் கனரக ஆயுதங்கள் வழங்கப்படமாட்டாது என பொலிஸ்மா அதிபர் மஹிந்த பாலசூரிய தெரிவித்துள்ளார்.

புதிய நடைமுறையின் பிரகாரம் ரி56 துப்பாக்கி போன்ற கனரக ஆயுதங்களை பொலிஸார் பயன்படுத்தமாட்டார்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது. பாதாள உலகச் செயற்பாடுகள், ஆயுத கொள்ளைச் சம்பவங்கள் உள்ளிட்ட குற்றச் செயல்களின் எண்ணிக்கையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது. மக்கள் பாதுகாப்பை உணர வேண்டும் என்பதே தமது நோக்கம் என பொலிஸ்மா அதிபர் குறிப்பிட்டுள்ளார். (ஶ்ரீ-2)

# நல்லூர் கோட்ட மட்ட பாடசாலைகளுக்கு இடையிலான விளையாட்டுப் போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கோட்டமட்ட பாடசாலைகளுக்கு இடையிலான விளையாட்டுப் போட்டி முடிவுகள் நல்லூர் கோட்டக் கல்விப் பணிப்பாளர் எஸ். மாணிக்கராசாவினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதில் முதல் 3 இடங்களைப் பெற்ற மாணவர்களின் பெயர் விபரங்கள் வருமாறு,

**11 வயதின் கீழ் பெண்கள்**

*75 மீற்றர்*

ஜே.பிரியதர்சினி (யா/இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை), ஆர். கேதுஷா (யா/இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை), எம்.பிரியலக்ஜியா, (நல்லூர் ஞானோதய வித்தி.

*100 மீற்றர்*

ஜே.பிரியதர்சினி (யா/இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை), எம்.பிரியலக்ஜியா,(நல்லூர் ஞானோதய வித்தி), ரி.தேனுசா (நல்லூர் சென்.பெனடிக்ற் வித்தி.

*நீளம் பாய்தல்*

கே.சிஜானி (கோண்டாவில் சி.சி. ரி.எம்.எஸ்), எஸ்.மதுஷாஜினி (கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை), எஸ்.அகிஷாலினி (யா/இந்து ஆரம்ப பாடசாலை).

*உயரம் பாய்தல்*

கே.தர்ஷனா (யா/இந்து ஆரம்ப பாடசாலை), ஜே.பிரியதர்சினி (யா/ இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை), எஸ்.சன்சிகா(நல்லூர் சென்.பெனடிக்ற் வித்தி)

**13 வயதின் கீழ் பெண்கள்**

*100 மீற்றர்*

என்.டிலுக்ஷனா (யா/இந்து மகளிர் கல்லூரி), ரி.பத்மினி (யா/கனகரட்ணம் ம.ம.வி), பி.கஸ்தூரி (யா/ இந்து மகளிர் கல்லூரி)

*நீளம் பாய்தல்*

எ.நர்மதா (யா/இந்து மகளிர் கல்லூரி), வி.தஸ்யகி (கொக்குவில் இந்துக் கல்லூரி), பி.குகன்யா (பெரியபுலம் ம.வி)

*4 x 100 மீற்றர் அஞ்சல்*

செங்குந்தா இந்து கல்லூரி, யாழ்.இந்துக் கல்லூரி, கனகரட்ணம் ம.ம.வி

**15 வயதின் கீழ் பெண்கள்**

*100 மீற்றர்*

ஏ.நாகலோஜினி (கனகரட்ணம் ம.ம.வி), எஸ்.நிதர்சனா (இந்து மகளிர் கல்லூரி), கே. நிஷாந்தினி (நாயன் மார்க்கட்டு மகேஸ்வரி)

*உயரம் பாய்தல்*

வி.ஜிந்துஜா (யா/இந்து மகளிர் கல்லூரி), ஆர்.கலக்சலா (முத்துத் தம்பி ம.வி), ரி.சாம்பவி (கொக்குவில் இந்துக் கல்லூரி)

*குண்டு போடுதல்*

ஆர்.ஜெனரஞ்சனி (கொக்குவில் இந்துக் கல்லூரி), கே.சரண்யா (உயரப்புலம் மெ.மி.த.க), கெ.டயானா (யா/இந்து மகளிர் கல்லூரி)

*4 x 100 மீற்றர் அஞ்சல்*

யா/இந்துக் கல்லூரி, கொக்குவில் இந்துக் கல்லூரி, கொக்குவில் ஞானபண்டிதா வித்தி

**17 வயதின் கீழ் பெண்கள்**

*100 மீற்றர்*

எஸ்.சாம்பவி (யா/இந்து மகளிர் கல்லூரி), எஸ்.மதுஜா (யா/இந்து மகளிர் கல்லூரி), வி.தறுசிகா (கொக்குவில் இந்துக் கல்லூரி)

*800 மீற்றர்*

ரி.சுதர்சினி (யா/இந்து மகளிர் கல்லூரி), ஜே.மரீனா (கோண்டாவில் பரம்சோதி வித்தி), ரி.ஜவனிதா (முத்துத்தம்பி வித்தி)

*1500 மீற்றர்*

ஜே.மரீனா (கோண்டாவில் பரம்சோதி வித்தி), வி.ஶ்ரீரங்கநாயகி (யா/ இந்து மகளிர் கல்லூரி), எஸ்.மிதுலா (கொக்குவில் இந்துக் கல்லூரி)

*குண்டு போடுதல்*

ரி.சங்கீதா, ஆர்.விதுஷா, ஆர். நிரோஜா

*தட்டெறிதல்*

கே.சுரேக்கா, எஸ்.நாகலோஜினி

---

**11 வயதின் கீழ் ஆண்கள்**

*75 மீற்றர்*

என்.கனிஸ்ரன் (கோண்டாவில் பரஞ்சோதி வித்தி,ஈ.கேதுசன் (கொக்குவில் ஸ்தான சி.சி), பி.புரட்சிகன் (கொக்குவில் ஞானபண்டிதா)

*100 மீற்றர்*

ஆர்.துஷாந் (சென்பெனடிக்ற் வித்தி. கே.கீர்த்தினன் (ஆனைப்பந்தி மெ.மி.த.க.பா), எஸ்.டெனிசன் (கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை)

*நீளம் பாய்தல்*

எஸ்.டிலக்சன் (யா/இந்து ஆரம்பப் பாடசாலை), எஸ்.கபஸ்கர் (வண்ணை ஶ்ரீ வைத்திலிங்கம்), பி.ரயூதன் (ஆனைப்பந்தி மெ.மி.த.க.பா)

*உயரம் பாய்தல்*

டி.சிறீதரன் ( யா/இந்து ஆரம்ப பாடசாலை), எஸ்.புவிதரன் (கோண்டாவில் இராமகிருஷ்ண வித்தி, எஸ். செல்வவாசன் (சென்.பெடிக்ற் வித்தி

**13 வயதின் கீழ் ஆண்கள்**

*100 மீற்றர்*

எஸ்.சரமிலன் (யா/இந்துக் கல்லூரி), கே.டிலக்ஷன் (கோண்டாவில் இ.ம.வி), கே.விதுஷன் (கொக்குவில் இந்துக் கல்லூரி)

*நீளம் பாய்தல்*

கே. டிலக்ஷன் (கோண்டாவில் இ.ம.வி), எஸ்.துஷ்யந்தன் (யா/இந்துக் கல்லூரி), எஸ்.சரமிலன் (யா/ இந்து மகளிர் கல்லூரி)

*உயரம் பாய்தல்*

கே. டிலக்ஷன் (கோண்டாவில் இ.ம.வி), எஸ்.துஷ்யந்தன் (யா/ இந்துக் கல்லூரி), எஸ்.தர்சிகன் (யா/ இந்துக் கல்லூரி)

(தொடரும்)

மீண்டும் அச்சுவேலியில்!

கலைப்பேரரசன், கலைத்தென்றல்
திண்டுக்கல்
ஐ.லியோனியின்
நகைச்சுவை பட்டிமன்றமும்,
கருத்தாழம் மிக்க வழக்காடு மன்றமும்

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட தாய், தந்தையரை இழந்த சிறார்களின் கல்விவளர்ச்சிக்கான நிதி உதவிக்காக, திண்டுக்கல் ஐ.லியோனி தலைமையில் புதிய அணுகுமுறையில் முதல்முறையாக மாலை 6.30 மணிக்கு

மக்கள் மனதில் இடம்பெறுவது
பழைய பாடலா? புதிய பாடலா?
(150 நிமிடங்கள்)

இரவு 9.00 மணிக்கு முதன்முறையாக உலகின் எப்பாகத்திலும் நடத்தப்படாத கருத்தாழம் மிக்க வழக்காடு மன்றம்

மனைவி மக்களா? நாட்டு மக்களா?
(90 நிமிடங்கள்)

இவ்விரு நிகழ்ச்சிகளும் வேறு எங்கும் நடைபெறமாட்டாது.
அச்சுவேலியில் மட்டுமே இடம்பெறும். குறிப்பிட்ட நேரத்தில் காட்சிகள் ஆரம்பமாகும். தாய், தந்தையரை இழந்த சிறார்களுக்கு மேடையில் நீங்கள் கொடுக்கும் வசதி செய்யப்பட்டுள்ளது. கருணை உள்ளங்களே ஆதரவு தாருங்கள்!

(4069)



இடம்: இராஜமாணிக்கம் கல்யாண மண்டபம், அச்சுவேலி.
காலம்: 20.03.2011 (ஞாயிற்றுக்கிழமை) மாலை 6.30 மணி
அன்பளிப்பு: 300/- 200/-
சிறுவர்களுக்கு: 100/-

நிகழ்வுகள் வீடியோவில் எடுக்கப்படமாட்டாது!
அனைவரும் வருக! ஆதரவு தருக!

மார்ச் 20 நாளை மாலை- யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபம் மாலை 3 மணிக்கு
இராஜமாணிக்கம் கல்யாணமண்டபம்- மாலை 6.30மணிக்கு
மார்ச் 21 யா/உடுப்பிட்டி அமெரிக்கன்மிஷன் கல்லூரி மாலை 6.30 மணிக்கு
மார்ச் 22 சாவகச்சேரி இந்துக் கல்லூரி மைதானம் மாலை 6.30 மணிக்கு
மார்ச் 23 மானிப்பாய் இந்துக்கல்லூரி மைதானம் மாலை 6.30 மணிக்கு

வாருங்கள்! வந்துபாருங்கள்! ஆதரவு தாருங்கள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







513 ஆவது படைப்பிரிவின் ஏற்பாட்டில் வலி.தென்மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட பிரிவுகளில் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மக்களுக்கு வாழ்வாதார உதவிகளும் முன்பள்ளி சிறார்களுக்கு பாடசாலை உடையும் மாணவர்களுக்குப் புலமைப் பரிசிலும் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் இராமநாதன் கல்லூரி மாணவிகளின் வரவேற்பு நடனத்தினையும் இந்து குருமார் ஒன்றியத் தலைவர் மகேஸ்வரக் குருக்கள் மங்கல விளக்கேற்றுவதனையும் பாடசாலை மாணவி ஒருவருக்கு யாழ்.மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துருசிங்க புலமைப் பரிசில் வழங்குவதனையும் படங்களில் காணலாம்.

(படங்கள்: எஸ்.கரன்)

## மீசாலை கொலையுடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் தொடர்ந்து விளக்கமறியலில்

மீசாலை கிழக்கில் கடந்த 6ஆம் திகதி கணவனால் கடத்தப்பட்டு மறுநாள் காலை சடலமாக மீட்கப்பட்ட சாந்தினி குகதாசனின் கொலை தொடர்பாக கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களுக்கெதிரான வழக்கு விசாரணை சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றில் நேற்றைய தினம் நீதிபதி மாணிக்கவாசகம் கணேசராசா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

குறித்த சந்தேக நபர்களை எதிர்வரும் 31ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார். (ஸ்ரீ-3-29-24)

## சைக்கிளில் சமாந்தரமாக பயணித்தோருக்கு அபராதம்

(சாவகச்சேரி)

சைக்கிளில் சமாந்தரமாகச் சென்ற மூன்று பேருக்கெதிராக நேற்றைய தினம் கொடிகாமப் பொலிஸாரினால் சாவகச்சேரி நீதிவான் நீதி மன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இவ் வழக்கை விசாரித்த நீதிவான் மேற்படி சம்பவத்துடன் தொடர்புடைய இருவர் குற்றத்தை ஒப்புக்கொண்டமையால் குற்றவாளியாகக் கண்டு இருவருக்கும் தலா ஆயிரம் ரூபாய் அபராதம் விதித்ததுடன் செலுத்தத் தவறின் 3 மாத சாதாரண சிறைத் தண்டனையும் வழங்கி உத்தரவிட்டார். (ஸ்ரீ-3-29-24)

## முச்சக்கரவண்டி தடம் புரண்டதில் தாயும் கைக்குழந்தையும் படுகாயம்

கரவெட்டி விக்னேஸ்வரா பாடசாலைக்கு அருகில் நேற்று நண்பகல் முச்சக்கரவண்டி தடம்புரண்டதில் தாயும் கைக்குழந்தையும் படுகாயமடைந்து பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வரணி கரம்பன் குறிச்சிலிருந்து நெல்லியடி நகரப் பகுதிக்கு குடும்பத்துடன் முச்சக்கர வண்டியில் வந்து கொண்டிருக்கையில் கரவெட்டி விக்னேஸ்வரா கல்லூரிக்கு அருகாமையில் பிற்பகல் 12.45 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. இச்சம்பவத்தில் வரணி கரம்பன் குறிச்சியைச் சேர்ந்த துசிகரன் ஊர்வசி (வயது 25) என்பவரும் அவரது கைக் குழந்தையும் படுகாயமடைந்ததுடன் வாகனத்தைச் செலுத்திய அவரது கணவர் சிறு காயங்களுக்குள்ளானார். (ஸ்ரீ-3-24)

## கழகங்களுக்கிடையிலான குழுநிலைப் போட்டிகள்

(கரவெட்டி)

மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக்கழகத்தின் வருடாந்த விளையாட்டு விழாவில் வடமராட்சிக்குட்பட்ட அழைக்கப்பட்ட கழகங்களுக்கிடையிலான முதலாம் கட்ட குழுநிலைப் போட்டிகள் இம்மாத இறுதிக்குள் நடைபெறவுள்ளதென்று மைக்கல் விளையாட்டுக்கழகச் செயலாளர் தங்கவடிவேல் வேணுகானன் தெரிவித்துள்ளார்.

வடமராட்சிக்குட்பட்ட கழகங்களுக்கிடையில் வருடாவருடம் நடைபெறும் குழுநிலைப் போட்டிகளில் இம்முறை ஆண்களுக்கான 5 ஓவர், 10 ஓவர், இருபது-20 ஆகிய போட்டிகளும் ஆண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டியும் முதற்கட்டமாக நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஏனைய போட்டிகள் பற்றிய விபரங்கள் பின்னர் அறிவிக்கப்படுமென அவர் தெரிவித்தார். (ஸ்ரீ-3-24)

## யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியில் ஆங்கில பாடநெறிக்கு தெரிவானோர்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் ஆங்கிலப் பாடநெறிக்கு ஆசிரியப் பயிலுநர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான வகுப்புக்கள் எதிர்வரும் 28 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளதாகவும் இதற்கான கடிதங்கள் உரிய முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன் அறிவித்துள்ளார்.

தெரிவு செய்யப்பட்டவர்களின் பெயர் விபரம் வருமாறு,

**யாழ்ப்பாணம்**

ரி.ஜெனநாதராஜன் (கோண்டாவில் வடக்கு), ரி.தர்மிகா (புத்தூர்), என். கேதீஸ்வரன் (பருத்தித்துறை), பி.பரம்சோதி (குப்பிளான்), கே.ராஜேந்திரம் (யாழ்ப்பாணம்), கே.கெங்காதரன் (யாழ்ப்பாணம்), ஜி.கிருத்திகா (தாவடி வடக்கு), எஸ்.அனிஸ்ரன் (அளவெட்டி கிழக்கு), வி.பான்சியா (மானிப்பாய்), ஆர்.ரவிச்சந்திரன் (உடுப்பிட்டி), பி.சோமசுந்தரம் (குடத்தனை), எம்.ஆர். ஏ.வலன்ரீன் (இளவாலை), ஏ. அருள்குமரன் (யாழ்ப்பாணம்), ரி.நிவேதிகா (நயினாதீவு), ஜெ.நடராஜ் (சுன்னாகம்), எஸ்.பத்மநாதன் (யாழ்ப்பாணம்).

**மட்டக்களப்பு**

வி.குகானந்தி (மட்டக்களப்பு), பி.கிஷோ குமார் (மட்டக்களப்பு), எஸ்.நாகலிங்கம் (ஆரையம்பதி), ஏ.ஆர்.எஸ்.பானு (காத்தான் குடி), எம்.எம்.எவ்.நுஸ்ரா (காத்தான் குடி), எஸ். ராமச்சந்திரன் (மட்டக்களப்பு), ஏ.எல்.என். நூறி (புதிய காத்தான்குடி), என்.ஏ.இசற்.நூர் மொகமட் (வாழைச்சேனை), பி.பேரின்பராஜ் (மட்டக்களப்பு), எஸ்.முத்துலிங்கம் (மட்டக்களப்பு), ஆர்.டி. தாருண்யா (மட்டக்களப்பு), றி.சிவஞானசெல்வம் (மட்டக்களப்பு).

**மன்னார்**

ரி.ஜெ.குலாஸ் (பேசாலை), எவ்.ஜெ.ஏ. மார்க் (மன்னார்), எம்.எம்.எம்.சுஹ்றி (கிண்ணியா), எம்.எஸ்.எம்.சபீர் (கிண்ணியா), கே.துவாரகன் (புத்தளம்). (ஸ்ரீ-3)

## கணனிப் பயிற்சி ஆரம்ப விழா

(அல்வாய்)

நெல்லியடி இ-சொப்ற் நிறுவன அனுசரணையுடன் புலோலி கிழக்கு ஞானசம்பந்தர் கலைமன்ற பாலர் பாடசாலை மாணவர்களுக்கான கணனிப் பயிற்சி ஆரம்ப விழா நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 11 மணிக்கு மன்ற முகாமைத்துவ ஆலோசகர் க.இராசரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் இ.வரதீஸ்வரன் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக வடமராட்சி வலய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் சி.தில்லைநாதன், நெல்லியடி இ-சொப்ற் கணனி கற்கை நிலைய இணைப்பாளர் எஸ்.கலீபன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ஸ்ரீ-3-19)


தில்லையம்பதியாள் துணை

சீர்மேவு யாழ்ப்பாணம்
கோண்டாவில் தில்லையம்பதி
அருள்மிகு ஸ்ரீ சிவகாமி அம்பாள் திருக்கோயில்
பங்குனி உத்தர நவோத்திர
சகஸ்ர 1008 சங்காபிஷேகம்



ராகம்: கல்யாணி

ஆலரசு மரத்தின் அருள்மிகு பொந்தினூடே
ஆனந்தக் கலசம் காட்டும் அம்பிகே சிவகாமி
பாலாபிஷேகம் செய்தோம் பங்குனித் திருநாளில்
பௌர்ணமித் திருவிளக்கின் ஜோதியே கல்யாணி

(19.03.2011) சனி காலை 8.00மணிக்கு அம்பாளுக்கும் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் சங்காபிஷேகமும் விசேட பூசையும், நண்பகல் மகேஸ்வரபூசை(அன்னதானம்)நடைபெறும்.

பிற்பகல் 3.00மணிக்கு விசேட பூசை 4.00மணிக்கு வசந்த மண்டபப்பூசை, 5.00 மணிக்கு பௌர்ணமித் திருவிளக்குப் பூசை,திருவூஞ்சல் நடைபெற்று மாலை 6.00 மணிக்கு ஸ்ரீ விநாயகப் பெருமான், ஸ்ரீ சிவகாமி அம்பாள், வள்ளி தெய்வயானை சமேத ஸ்ரீ முருகப்பெருமான் பூத்தண்டிகையில் தெருவீதி உலாவரும் அருட்காட்சியும் இடம்பெறும்.

சங்காபிஷேகம் உபயம்-அரச ஊழியர்களும்
ஓய்வூதியம் பெறுவோரும் (கோண்டாவில்)
"தில்லையம்பதியாளே சிவகாமசுந்தரியே சரணம்"

தில்லையம்பதி கோண்டாவில்

இங்ஙனம்
பரிபாலனசபை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## மாதங்கள் பிறந்த விதம்

அந்தக்காலத்தில் ரோமானியர்களின் கணக்கின்படி வருடத்தில் பத்து மாதங்கள்தான் இருந்தன. மார்ச்தான் முதல் மாதம். உரோமாபுரியை உருவாக்கியதாக கூறப்படும் ரோமுலஸ் என்பவன் போர்க்கடவுளாகிய மார்ச்சின் வழிவந்தவன் என்ற நம்பிக்கையில் முதல் மாதத்திற்கு இந்தப் பெயரை வைத்தார்கள்.

ஏப்ரிலிஸ் (Aprilis)என்றால் இரண்டாவது என்று அர்த்தம். அதை இரண்டாவது மாதத்திற்கு வைத் தார்கள். மெர்க்குறி என்ற கடவுளின் தாயாகிய மல்யாவின் பெயரால் மே அழைக்கப்பட்டது.

ஜுபிடர் கடவுளின் மனைவி ஜுனோவின் பெயரால் நான்காம் மாதத்திற்கு ஜுன் என்ற பெயர்வந்தது.

ஏனைய மாதங்களை அவற்றின் வரிசையைக் குறிக்கும் லத்தீன் எண்ணின் பெயரின்படி குறிப்பிட்டார்கள்.

ஐந்தாம் மாதம் – குவின்கீவே(Quinque)
குவின்டிலிஸ்(Quintilis)
ஆறாம் மாதம்– செக்ஸ்(Sex)
செக்ஸ்டிலிஸ்(Sextilis)
ஏழாம் மாதம்– செப்தெம்(Septem)
செப்தெம்பர்
எட்டாம் மாதம் – அக்டோ(Octo)
அக்டோபர்
ஒன்பதாம் மாதம் – நவெம்(Novem)
நவெம்பர்
பத்தா வது மாதம் – தெசம்(Decem)
அதன்படி டிசம்பர் என்று அழைக்கப்பட்டது.

பிற்காலத்தில் இன்னும் இரண்டு மாதங்களைச் சேர்த்தார்களாம்.ஜேனுஸ் என்ற காவல் தெய்வத்தின் பெயர் சூட்டப்பட்ட பதினொராம் மாதம் ஜேனுவாரியுஸ்(Januarius)

பெப்ருவாரியஸ் என்ற இறப்புக்கடவுளின் பெயரால் 12 ஆம் மாதத்திற்கு பெப்ரவரியுஸ் (februarius) என்று பெயர் வைத்தார்கள்.

இந்த இரண்டையும் ஆண்டின் தொடக்கத்திற்கு கொண்டு போனவர் ஜுலியஸ் சீசர்.

இதனால் ஏழாம் மாதம் என்று பொருள்படும் செப்டம்பர் மாதம் 9 ஆம் இடத்திற்கு போய் விட்டது.

அதேபோல் மற்ற மாதங்களுக்கும் பெயர் பொருந்தாமல் போய்விட்டது.

ஜுலியஸ்சீசர் இறந்த பின் அவருடைய நினைவை போற்றும் வகையில் அவர் பிறந்த குவிண்டிலிஸ் என்ற மாதத்தின் பெயரை ஜுலை என்று மாற்றினார்கள்.

அவருக்குப்பின் ரோமானிய் மா மன்னராக ஆட்சி புரிந்தவர் அவருடைய உறவினர் அகஸ்டஸ் இவருடைய பெயர் 'செக்ஸ்டிலிஸ்' மாதத்திற்கு சூட்டப்பட்டது. அதுதான் ஆகஸ்ட் சீசறின் மாதத்திற்கு 31 நாள் இருந்தமையால் அவருக்கு இணையானவர் ஆகஸ்டஸ் என்பதை எடுத்துக்காட்டுவதற்காக பெப்ரவரியில் இருந்து ஒரு நாளை எடுத்து ஆகஸ்டில் சேர்த்து அதற்கும் 31 நாள் என்று ஆக்கிவிட்டார்கள். அதனால் ஜுலை, ஆகஸ்ட்மாதங்கள் அடுத்தடுத்து இருந்தாலும் 31,ஆம் நாள் என்று ஆகிவிட்டது. ஆக இப்படிக்காலம் தான் மாறிக் கொண்டிருக்கிறது என்றில்லை. கலண்டரும் மாறிக் கொண்டு தான் இருக்கிறது . நம்ம ஆள் ஒருத்தன் ஒரு ஆட்டுக்குட்டியைப்பிடித்து வந்தான்.

அவன் சொன்னான் "நீங்கள் சொல்வதைப்பார்த்தால் மனிதர்கள்தான் மாதத்தை மாற்றிக் கொண்டிருக்கிறார்கள். என் ஆட்டுக்குட்டி அப்படியில்லை. எப்பொழுது கேட்டாலும் மாற்றாமல் மாதப் பெயரை சொல்கிறது" என்றான்.

"அது எப்படி?" என்றேன்.

''கொஞ்சம் பொறுங்க. நான் சொல்கிறேன்'' என்றான்.

அந்த ஆட்டுக் குட்டியின் காதோரமாய் போய் "ஏப்ரலுக்கு அடுத்த மாதம் என்ன?" என்று கேட்டான்.

அது "மே..." என்று கத்தியது.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# இந்திய அரசாங்கத்தின் நிதியுதவியுடன் யாழ்ப்பாணத்தில் கலாசார மண்டபம்

## 5 கோடி ரூபா செலவில் நிர்மாணம்

(யாழ்ப்பாணம்)

இந்திய அரசாங்கத்தின் நிதியுதவியுடன் யாழ்.பொது நுலகத்திற்கு அருகாமையில் 5 கோடி ரூபா செலவில் கலாசார மண்டபம் ஒன்று அமைக்கப்படவுள்ளது.

மேற்படி கலாசார மண்டப அமைவிடத்தை இந்தியாவின் சர்வதேச கலாசார செயற்பாட்டுக்கான பணிப்பாளர் நாயகம் உள்ளிட்ட இந்தியப்பிரதிநிதிகள் நேற்று பார்வையிட்டனர்.

ஏப்ரல் மாதமளவில் இம்மண்டபம் அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

திராவிட கலைமரபுடன் அமைக்கப்படவுள்ள இந்த மண்டபத்திற்கான வடிவமைப்புக்களும் ஒப்பீடு செய்யப்படுவதாகவும் பிரதிநிதிகளால் தெரிவிக் கப்பட்டது. அத்துடன் இம் மண்டபமானது இங்குள்ள மக்களின் விருப்பத்திற்கு அமைவாக இங்குள்ளவர்களைக் கொண்டு அமைக்கப்படவுள்ளது என அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர். (ஸ்ரீ-6)

# வினைத்திறமைகாண் தடைப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

2009 ஆம் ஆண்டு அங்கீகரிக்கப்பட்ட. புதிய சேவைப் பிரமாணக் குறிப்பிற்கு அமைவாக, கடந்த 1999 மற்றும் 2005 ஆம் ஆண்டுகளில் பட்டதாரிகள் ஆட்சேர்ப்புத் திட்டங்களின் ஊடாக மாகாண அரசசேவைக்கு இணைத்துக் கொள்ளப்பட்ட பட்டதாரி அலுவலர்களுக்கான 2 ஆவது வினைத்திறமைகாண் தடைப்பரீட்சையானது எதிர்வரும் 26 , 27 ஆம் திகதிகளில் நடாத்தப்படவுள்ளது.

இப்பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் கிடைக்கப்பெறாத உத்தியோகத்தர்கள் 021 3215543 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளர் கேட்டுள்ளார். (ஸ்ரீ-2)

# கட்டட ஒப்பந்தகாரர்களுடனான கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டப் பாடசாலைகளில் நடப்பாண்டில் கட்டட நிர்மாண/திருத்த வேலைகளில் ஈடுபட்டுள்ள கட்டட ஒப்பந்தகாரர்கள் மற்றும் பாடசாலை அபிவிருத்திச் சங்கப் பிரதிநிதிகளுடனான சந்திப்பு எதிர்வரும் 22 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு வட மாகாணக் கல்வியமைச்சின் செயலாளர் எல்.இளங்கோவன் தலைமையில் யாழ்.பொதுசன நூலக மண்டபத்தில் இடம்பெறும்.

இச்சந்திப்பிற்கு கட்டட ஒப்பந்தகாரர்கள் மற்றும் பாடசாலை அபிவிருத்திச் சங்கப் பிரதிநிதிகளைத் தவறாது கலந்து கொள்ளுமாறு யாழ்.மேலதிக மாகாணக் கல்விப் பணிமனையின் பாடசாலை வேலைப்பகுதி பொறியியலாளர் கு.சிவபாலன் கேட்டுள்ளார். (ஸ்ரீ-2)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 50 | 100 |
| உருளைக்கிழங்கு | 65 | 70 | 70 |
| பச்சைமிளகாய் | 100 | 150 | 150 |
| தக்காளி | 60 | 80 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 50 | 60 |
| கோவா | 70 | 80 | 100 |
| கரட் | 120 | 180 | 180 |
| பூசணி | 60 | 60 | 80 |
| புடோல் | 60 | 80 | 100 |
| வாழைக்காய் | 40 | 60 | 70 |
| சின்ன வெங்காயம் | 60-90 | 100 | 90 |
| பெரிய வெங்காயம் | 55-60 | 70 | 70 |
| பாகற்காய் | 120 | 130 | 150 |
| வெண்டிக்காய் | 100 | 80 | 120 |
| கருணைக் கிழங்கு | - | 70 | 120 |
| பயற்றங்காய் | 110 | 100 | 140 |
| லீக்ஸ் | 120 | 150 | 140 |
| பீற்றூட் | 60 | 50 | 80 |
| கறிமிளகாய் | - | 130 | 180 |
| முருங்கைக்காய் | 350 | 500 | 500 |
| போஞ்சி | 120 | 130 | 140 |
| கத்தரிதம்புள்ள | - | 50 | 80 |
| கீரை - 1 பிடி | 5-10 | 20 | 20 |
| தேசிக்காய் | 50 | 50 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 30-60 | 50 | 60 |

# இராசி பலன்

*19.03.2011*
*(பங்குனி 05,சனிக்கிழமை)*
*சூரிய உதயம் காலை 6.18 மணிக்கு*
*பூரணை பின்னிரவு 12.27மணிவரை*
*பூரம் முற்பகல் 10.43மணிவரை*
*இராகு காலம் 9.18-10.48 மணிவரை*
*சுபநேரம் 3.18-4.48 மணிவரை*
*பங்குனி உத்தரம்,பூரணைவிரதம்*
*திருக்கோணேஸ்வரர் கொடியேற்றம்*

**மேடம்** தொட்டகாரியங்கள் வெற்றி பெறும், வருங்கால நலன் கருதி சேமித்து வைக்க நினைப்பீர்கள், திருமணப் பேச்சுக்கள் நல்ல முடிவைத்தரும், பிள்ளைகள் வழியில் பெருமை அடைவீர்கள்.

**இடபம்** தனவரவில் இருந்து வந்த தடைகள் விலகும், எந்தக்காரியத்தையும் எளிதில் செய்து வெற்றிகாண்பீர்கள், வாகனயோகமுண்டு, சுகங்களும் சந்தோஷங்களும் அதிகரிக்கும்.

**மிதுனம்** பொதுநல ஈடுபாடு அதிகரிக்கும், சகோதர ஒற்றுமையால் உற்சாகமடைவீர்கள், நேற்றைய பிரச்சினை இன்று நல்ல முடிவுக்கு வரும், தொழில் நன்மையுண்டு.

**கடகம்** குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை அமையும், பணத்தேவைகள் பூர்த்தியாகும், கொடுத்த வாக்கை காப்பாற்றி மகிழ்வீர்கள், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.

**சிங்கம்** அடுத்தவர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், கற்பனை மிகுதி உண்டு, புகழ்மிக்கவர்களின் சந்திப்பு இடம் பெறலாம், போசன சுகமுண்டு.

**கன்னி** சில காரியங்களுக்காக சற்று அலைச்சல்கள் ஏற்படலாம், சுப செலவுக்காக ஒரு தொகை செலவு செய்யவேண்டி வரலாம், மனச் சஞ்சலமான நாள்,

**துலாம்** இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள்,திடீர் பணவரவுகள் மகிழ்ச்சியை தரும், ஆடம்பரப்பொருட்கள் வாங்கும் எண்ணம் மேலோங்கி விடும்.

**விருச்சிகம்** இனிய சம்பவங்கள் நடைபெறும் நாள், உறவினர்கள் இல்லம் தேடி வரலாம், தொலைபேசி வழித் தகவல்கள் மகிழ்ச்சி தரும் , அந்நியர் உதவிகள் வந்து சேரும்.

**தனுசு** புத்திசாதுரியமாகப் பேசி சாதனை படைக்கும் நாள், பூர்வீக சொத்து சம்பந்தமான பிணக்குகள் சுமுகமாக முடியும், தொழில் ரீதியாக நல்ல முடிவு எடுப்பீர்கள்.

**மகரம்** வழிபாடுகளால் திருப்தி காணவேண்டிய நாள், எந்தக்காரியத்தையும் பல முறை யோசித்து செயற்படுவது நல்லது, உடல் நலம் சீராக சிறு செலவுகள் செய்ய வேண்டிவரலாம்.

**கும்பம்** எடுத்த கருமங்கள் எளிதில் நிறைவேறும், விருந்துபசாரத்தில் கலந்து மகிழும் நாள், கோயில் வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், பொருட்சேர்க்கையுண்டு.

**மீனம்** நல்லவர்களின் தொடர்பால் நன்மை அடைவீர்கள், அலுவலகப்பணிகளில் ஆர்வம் கூடும், மாற்று மருத்துவத்தால் ஆரோக்கியம் சீராகும், சுவாரஸ்யமான நாள்.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழையில் பீடைகளும் அவற்றின் முகாமைத்துவமும்



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

## வாழையில் வைரசு நோய்கள்

வாருங்கள் எம்மினிய உறவுகளே!


எங்களூர் வாழைச் செய்கையாளர்களுக்கு தென்னிலங்கை வியாபாரிகளின் வருகையினால் ஓரளவுக்கு நல்ல விலையை தமது வாழைக்குலைகளுக்கு பெறக்கூடியதாயிருப்பினும் வாழைக்குலையின் தரத்திலேயே இவ்விலை நிர்ணயிக்கப்படுவதனால் எப்பாடுபட்டாலாவது சிறந்த தரமான வாழைக்குலைகளை பெறுவதிலேயே கண்ணுங்கருத்துமாயிருக்கிறார்கள். ஆயினும் வாழையினைத் தாக்கும் பூச்சி பீடைகள், சிற்றுண்ணிகள், விலாங்குப்புழு இவற்றுடன் பூஞ்சண மற்றும் பக்ரீறியாக்களும் நோயைத் தோற்றுவிப்பதன்மூலம் தரமுள்ள வாழைக்குலையைப் பெறுவது கேள்விக்குறியாகியுள்ளது. இவையனைத்திற்கும் மேலாக வாழையில் ஏற்படும் வைரசு நோய்கள் மேலும் இப்பிரச்சினையை பெரிதாக்கி விடுவதுடன் வாழைச்செய்கையாளர்களுக்கு பாரிய இழப்பையும் ஏற்படுத்தி விடுகின்றன.

எமது நாட்டில் நான்கு வைரசு நோய்கள் வாழையில் இனங்காணப்பட்டுள்ளன. அவையாவன, வாழைகுருத்தடைப்புநோய்(Bunchytop of banana), வாழைப் பொத்தி சித்திரவடிவு நோய் (banana bract mosaic virus), வாழையில் கீறல் கள் நோய் (banana streak virus) மற்றும் வாழை சித்திரவடிவு நோய் (banana mosaic virus) ஆகும். இவ்வைரசு நோய்களினால் வாழையினுற்பத்தி வெகுவாகப் பாதிக்கப்படுவதுடன் வாழைக் குலையில் உள்ள வாழைப் பழத்தின் தரமும் பாதிக்கப்பட்டுவிடும்.

## இனியொரு பசுமைப் புரட்சிக்கு...

வாழையில் கீறல்கள் வைரசுவினை பிளனோகொக்கசு சிற்றிறி மற்றும் சக்காரி கொக்கசு சக்காரி ஆகிய மாவுப்பூச்சி(mealy bugs) வகைகள் காவுவதாக ஆய்வாளர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். இந்நோயினால் பாதிப்புற்ற வாழையின் குறிப்பிட்ட நடுப்பகுதி இலைகளைத் தவிர ஏனைய இலைகள் வாடியபடி வாழையிலிருந்து தொங்கிக் கொண்டிருக்கும்.

இலைப்பரப்பில் மஞ்சள் நிறமான கீறல்கள் வாழையிலையிலுள்ள நரம்புகளுக்கு சமாந்தரமானதாக காணப்படும். இவ்வாறு உருவாகும் மஞ்சள் நிறத்திலான கீறல்கள் நாளடைவில் மண்ணிறமாக மாறி இறுதியில் கரியநிறமாகிவிடும். உட்பக்க இலைப்பகுதியில் உள்ள இழையங்கள் காய்ந்தும் இலைப்பகுதியில் வெடிப்புகள் ஏற்பட்டும் காணப்படும்.



இவ்வெடிப்புக்கள் பெரிதாகும்போது இலைகளின் அடிப்பகுதியில் முறிவு ஏற்பட்டு போலித்தண்டைச் சுற்றி இலைகள் தொங்கும்.

வாழைப் பொத்தி சித்திரவடிவு வைரசு (Banana bract mosaic virus) அழுக்கணவன் மூலம் காவப்பட்டு பரவப்படுகின்றது. ஏபிசு கொசிப்பி, பென்ரலோனியா நைகிறோநேர்வோசா மற்றும் றொபலோசைபியம் மெய்டிசு ஆகிய அழுக்கணவன்கள் (aphids) இவ்வைரசுவை காவுவதாக இனங்காணப்பட்டுள்ளன. இந்நோயுள்ள வாழைப் பொத்திகளில் சிவப்பு டயமண்ட் வடிவிலான புள்ளிகள் போலித்தண்டிலும் இலைகளின் நடு நரம்பிலும் காணப்பட்டு பின்பு நோய் தீவிரமடையும் போது வாழைப் பொத்தியின் உறையில் கரிய நிறமுடைய பரந்த புள்ளிகளாக காணப்படும். இவ்வைரசு தாக்கத்திற்குட்பட்ட வாழைகளின் போலித்தண்டின் (pseudostem) அடியில் பிளவுகள் ஏற்படுவதனையும் அவதானிக்கலாம். வெகுவாக இவ்வைரசுவினால் பாதிக்கப்பட்ட வாழையில் வீரியமற்ற சுருங்கிய வாழைச்சீப்புகள் உருவாகும்.

13-XIV

வாழைக்குலையில் பாரியளவிலான பாதிப்பு இருப்பதனை இவ்வைரசு உறுதி செய்து கொள்ளும்.

வாழை சித்திரவடிவு வைரசு நோய் குக்குமோ வைரசு இனத்தைச் சார்ந்த வைரசுவினால் ஏற்படுத்தப்படுகின்றது. இவ்வைரசுவிற்கு ஏறக்குறைய 800 தாவரங்கள் விருந்து வழங்கிகளாக இருக்கின்றன என அறியப்பட்டுள்ளது. இன்னும் அதிசயிக்கவைக்கும் செய்தியென்னவெனில், 60க்கும் அதிகமான அழுக்கணவன் இனங்கள் இவ்வைரசு வினை காவுகின்றன என்பதுதான்.

இவ் வைரசுவின் தொற்றுதலினால் வாழையின் இலைகளில் சித்திரவடிவு அறிகுறிகள்



தென்படும். ஆனால் நோய் தொற்றுதலேற்பட்ட காலங்களில் வளிமண்டல வெப்பநிலை குறைவடையும் போது அது நடுக்குருத்தில் அழுகலை ஊக்குவித்து இறுதியில் வாழை மரமே இறந்து போய்விடும். (தொடரும்)


# மரண அறிவித்தல்



## நாகலிங்கம் பத்மநாதன் (B.Sc. Hons)

(முன்னாள் மானிப்பாய் இந்துக் கல்லூரி பிரதி அதிபர், பிரபல பௌதிகவியல் ஆசிரியர் (யாழ்ப்பாணம், கொழும்பு), வெள்ளவத்தை சைவமங்கையர் வித்தியாலய பகுதிநேர பௌதிகவியல் ஆசிரியர்)

*சுழிபுரத்தைப் பிறப்பிடமாகவும், திருநெல்வேலி, வெள்ளவத்தையை வசிப்பிடங்களாகவும் கொண்ட நாகலிங்கம் பத்மநாதன் 12.03.2011 அன்று இறைபதம் அடைந்துவிட்டார்.*

*அன்னார் காலஞ்சென்ற ம.நாகலிங்கம் (முன்னாள் கல்விப் பணிப்பாளர்)-மனோன்மணி தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும், காலஞ்சென்ற இரத்தின ஐயா-ஜெகதாம்பாள் தம்பதியரின் அன்பு மருமகனும், சந்திராதேவியின் (B.Com, ஆசிரியை, சைவமங்கையர் வித்தியாலயம், வெள்ளவத்தை) அன்புக் கணவரும், ரேவதியின் (ரேவதா, கனடா) பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற பத்மாவதி மற்றும் கமலாவதி (பவா), இந்திராவதி (பாபு), கமல்நாதன், சோதிநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற சுப்பிரமணியம் மற்றும் முத்தையா, செல்வரட்ணம், ஜெயராணி, நிர்மலா, இராமகிருஷ்ணன், வாசுதேவன், சியாமளாதேவி, சுமங்கலாதேவி, லம்போதரன், சுஜாதாதேவி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.*

*அன்னாரின் பூதவுடல் இன்று (19.03.2011) சனிக்கிழமை பொறளை ஜெயரத்ன மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, நாளை (20.03.2011) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00க்குப் பொறளை ஜெயரத்ன மலர்ச்சாலையில் இறுதிக் கிரியைகள் நடைபெற்று கனத்தை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.*

*இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.*

**தகவல்:-**

**திருமதி சந்திராதேவி பத்மநாதன்**
**78A, 37ஆவது ஒழுங்கை,**
**வெள்ளவத்தை.**
**011 2506206**

*(சி-2617)*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# க.பொ.த (சா/த) பரீட்சை முன்னணிப் பெறுபேறுகள்

*யா/யூனியன்கல்லூரி*

பா.துர்க்கா (9ஏ), இ.துர்க்காயினி (8ஏ, பி), ஜெ.சாரங்கன் (7ஏ, பி, சி),நா.கீர்த்தனன் (6 ஏ, 2 பி, சி), ஜெ.பிறிணியா(6ஏ,2பி, சி), இ.கீர்த்தனா (5ஏ, 2பி, 2சி), சி.கோபிநாத் (5ஏ, 2பி, சி, எஸ்), சே.அபிமன் (4ஏ, 5பி), மோ.சித்திராங்கன் (5ஏ, 3பி,2சி), சி.ஜசிகரன் (4ஏ, 2பி,3சி), ச.கஜன் (4ஏ,3பி,2சி), ப.அபியங்கா (4ஏ, 3 பி, 2சி), சி.ருகல்யா (4ஏ, 4பி,சி), ப.பிரசாந் (4ஏ, பி, 2சி, எஸ்), நி.பர்மினா (4ஏ, 3பி, சி), ப.பிரசன்னா (3ஏ, 3பி, 2சி, எஸ்), கு.கீர்த்திகா (3 ஏ, 3பி, 2சி, எஸ்), ற.தேனுஜா(3ஏ, 3பி, 2 சி, எஸ்), கு.சாயிசங்கர் (3ஏ, 2பி, 3சி), இ.கேந்திரன் (3ஏ, பி4, சி, எஸ்), வ.ஜெருசன் (3ஏ, 6சி), வ.அஜிக்கா (3ஏ, 4சி, எஸ்), வி.தர்மதா (3ஏ, 3சி, 3எஸ்), பா.விஜித் (3ஏ, 5சி).

*யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி*

பா.சுகன்யா (8ஏ,பி), நா.பிறின்சிகா (6ஏ, 2பி, சி), றா.மேகலா (6ஏ, 2பி, சி), ர. மிரு ஷானி(5ஏ, 3பி, சி,) ஜோ.ஜீபிகா(5ஏ,2பி,சி,எஸ்), ஸ்ரீ.லக்சனா(5ஏ,பி,3சி),பி.நிஜானா (4ஏ,2பி, 2சி, எஸ்),ச.மதிவாணி (4 ஏ, 2பி,2சி, எஸ்), ர.ரேக்கா (4ஏ,பி, 4 சி), நே.சோபனா (3ஏ, 3பி, 3சி), ஜெ.சாம்பவி (3ஏ,3பி,3சி), க.வித்தியா (3ஏ, பி, 4சி, எஸ்), ந.சஸ்மிதா (3ஏ, 5சி, எஸ்), கி.கஜானனி (3ஏ, பி, சி, 4எஸ்), ப.சக்தி (3ஏ, 2பி, 3சி), வி.சர்மிளா (3ஏ, 3சி, 2எஸ்).

*யா/ இந்துக்கல்லூரி*

ச.ராம்ராஜ்(8ஏ, பி)

*யா/சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி*

வி.சர்மிளி(9ஏ), கி.யுலக்சினி (9ஏ),யோ.எழிலன்(7ஏ,2பி), நா.கஜேந்தினி(7ஏ,பி,சி), அ.சோதிராஸ்(5ஏ,3பி),இ.தனுசா (4ஏ,3பி, 2சி),த.விதுசா(,4ஏ,3பி,2சி), ச.சயோறன்(4ஏ,3பி,சி,எஸ்), ட.சுகன்யா(4ஏ,பி,3சி,எஸ்), த.தர்சிகா(3ஏ,4பி,சி,எஸ்), லோ.கமில்டன்(3ஏ,3பி,3சி), ச.விதுனன்( 3ஏ,3பி,3சி,எஸ்), ம.டினேசன்(3ஏ,2பி,3சி), த.தர்மதனிதவன்(3ஏ,2பி,3சி,எஸ்),

*யா/விக்ரோறியாக்கல்லூரி*

ஸ்ரீ.காருண்யா(8ஏ,பி), தெ.தர்சிகா(8ஏ,பி), எ.கார்த்திகா(7ஏ,2பி), சு.சுதர்சன்(5ஏ,4பி), ஸ்ரீ.நிரோஜனா(5ஏ,2பி,2சி), ப.சிவப்பிரியா (5ஏ,பி,3சி),வி.சூரியப்பிரகாஸ் (4ஏ,பி,4சி), பா.டெசிந்தா (4ஏ,பி, 3சி,எஸ்), ச.குகதர்சினி (3ஏ,4பி ,2சி), க.காயத்திரி(3ஏ,3பி,3சி), யோ.பிரியங்கா(3ஏ,பி,4சி)

*யா/வல்லை மகளிர்மகாவித்தியாலயம்*

செ.அனுசிகா(9ஏ), யோ.நிசாந்தினி(8ஏ,பி), த.கௌரி (4ஏ,3பி, 2சி), ம.நிருத்திகா(4ஏ,3சி,2எஸ்), பா.அபினயா(4ஏ,பி,4சி), ம.சலுமினா(2ஏ,2பி,4சி,எஸ்), இ.பிரியங்கா(2ஏ,2பி,4சி,எஸ்), ச.அனுஜா (2ஏ,2பி,5சி), க.செல்வி (2ஏ,4பி, 3சி), ந.சிவசக்தி(2ஏ,பி,3சி,2எஸ்), தி.தனுஜா(2ஏ,2பி,4சி,எஸ்), கு.விந்துஜா(2ஏ,பி,2சி,4எஸ்), ச.நித்திஜா(2ஏ,2பி,3சி,எஸ்)

# இடம்பெயர் முஸ்லிம்கள் வாக்களிக்க வசதிகள் செய்து கொடுக்கப்படவில்லை

## முஸ்லிம் காங்கிரஸ் கட்சி தெரிவிப்பு

(கொழும்பு)

இடம்பெயர் முஸ்லிம் மக்கள் வாக்களிப்பதற்கு உரிய வசதிகள் செய்து கொடுக்கப்படவில்லை என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி அறிவித்துள்ளது.

புத்தளம் மாவட்டத்தில் இடம்பெயர்ந்து வாழும் வன்னி முஸ்லிம்கள் தமது சொந்த இடங்களில் வாக்களிப்பதற்கு உரிய ஏற்பாடுகள் செய்யப்படவில்லை என அக் கட்சி தெரிவித்துள்ளது.

மன்னார் மாவட்டத்தில் வாக்களிப்பதற்கு சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை என கட்சியின் பொதுச் செயலாளர் ஹசன் அலி தெரிவித்துள்ளார்.

வாக்களிப்பதற்கு தேவையான போக்குவரத்து வசதிகளை வழக்குமாறு தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்கவே நேரடியாக உத்தரவிட்ட போதிலும் இடம் பெயர் முஸ்லிம்களுக்கு உரிய போக்குவரத்து வசதி ஏற்படுத்தப் படவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இடம்பெயர் மக்களை ஏற்றிச் சென்ற சில பஸ்கள் பிரதான பாதையில் செல்வதற்கு அனுமதிக் கப்படவில்லை என அவர் சுட்டிக் காட்டியுள்ளார். மாறாக மாற்று வழிகள் பயன் படுத்தப்பட்டதாகவும் இதனால் நீண்ட நேரம் வாக்காளர்கள் பயணிப்பதற்கு நேரிட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# சட்டவிழிப்புணர்வுக் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

மனித உரிமை நிலையமும் பிரதேச செயலகங்களும் இணைந்து நடத்தும் சட்ட விழிப்புணர்வுக் கருத்தரங்கு இன்று சனிக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் மாலை 4.00 வரை வலி. தெற்கு உடுவில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும்.

இக்கருத்தரங்கில் வீட்டு வன்முறை, சிறுவர் உரிமை, சிறுவர் துஷ்பிரயோகம், பெண்களது உரிமைகள், நீதி மன்றப்பதவணி ஆகிய விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடப்படுவதால் வலி தெற்கு, வலி. வடக்கு, வலி.தென் கிழக்கு ஆகிய மகளிர் கிராம அபிவிருத்தி சங்க உத்தியோகத்தர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப் படுகின்றனர்.

அத்துடன் இக்கருத்தரங்கு நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 தொடக்கம் மதியம் 12.30 மணிவரை நல்லூர் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும்.

இந் நிகழ்வில் வீட்டு வன்முறை, சிறுவர் உரிமை, சிறுவர் துஷ்பிரயோகம், பெண்களது உரிமைகள், நீதி மன்றப்பதவணி ஆகியவை கலந்துரையாடப்படவுள்ளதால் நல்லூர் பிரதேச மாதர் சங்கப் பிரதிநிதிகளை கலந்து கொள்ளுமாறு ஊரெழு மனித உரிமைகள் நிலைய மேற்பார்வையாளர் த.சண்முகநாதன் கேட்டுள்ளார். (ஸ்ரீ-2)

# கிளி. வைத்தியசாலை நூலகத்திற்கு மருத்துவ புத்தகங்கள் அன்பளிப்பு



(கொழும்பு)

மஹிந்த சிந்தனைத் திட்டத்தின் கீழ் வடமாகாண வைத்தியசாலைகளின் வசதிகளை மேம்படுத்தும் நோக்கத்தின் அடிப்படையில், மருத்துவத்துறை தொடர் பான பெறுமதிமிக்க புத்தகங்கள் கிளிநொச்சி வைத்தி யசாலை நூலகத்திற்கு அண்மையில் வட மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ சந்திரசிறியால் அன்பளிப் பாக வழங்கப்பட்டது.

இப் புத்தகங்களை கிளிநொச்சி பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி கார்த்தியிடம் வடமா காண ஆளுநர் பத்திரமுல்லவில் உள்ள தனது உப அலுவலகத்தில் வைத்து கடந்த 15 ஆம் திகதி வழங்கினார். (ஸ்ரீ-2)

# ஜப்பான் அனர்த்தம் தொடர்பில் பாராளுமன்றில் இரங்கல்

(கொழும்பு)

ஜப்பானில் ஏற்பட்ட பாரிய அனர்த்தம் தொடர்பில் பாராளுமன்றில் இரங்கல் தெரிவிக்கப்பட வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க கோரிக்கை விடுத்துள்ளார்.

குறித்த இரங்கல் கூட்டத்திற்கு நேரம் ஒதுக்கித் தருமாறு சபாநாயகர் சமல் ராஜபக்ஷவிடம் எதிர்க்கட்சித்தலைவர் எழுத்துமூலம் கோரியுள்ளார்.

ஜப்பானில் ஏற்பட்ட பாரிய நில அதிர்வு மற்றும் சுனாமியால் உயிரிழந்த மற்றும் நெருக்கடிகளை எதிர்நோக்கியவர்களின் குடும்பங்களுக்கு ரணில் விக்ரமசிங்க தமது ஆழ்ந்த அனுதாபங் களை வெளியிட்டுள்ளார். இலங்கைக்கான ஜப்பானிய தூதுவரிடம் இந்த அனுதாபங்களை தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் ஏப்ரல் மாதம் 22 ஆம் திகதி பாராளுமன்றம் மீளவும் கூடவுள்ளமை குறிப்பிடத்தக்கது. கட்சித்தலைவர்கள் இரங்கல் உரையாற்றுவதற்கு போதியளவு கால அவகாசம் வழங்கப்பட வேண்டுமென ரணில் விக்ரமசிங்க மேலும் கோரியுள்ளார். (ஸ்ரீ-2)

# சீமெட் வைத்திய சேவை நிறுவனத்தின் யாழ்ப்பாணக்கிளை திறப்பு

(யாழ்ப்பாணம்)

சீமெட் வைத்திய சேவை நிறுவனத்தின் யாழ்ப்பாணக்கிளை நேற்று முன்தினம் இல.514 ஆஸ்பத்திரிவீதியில் திறந்து வைக்கப் பட்டது.

கொழும்பு சீமெட் வைத்திய சேவை நிறுவனத்தின் இப் புதிய கிளையானது அதி நவீன வசதியுடன் கூடிய முழுமையான தன்னியக்க பரிசோதனைக்கூட வசதியுடன் அமையப் பெற்றுள்ளது.


இந் நிகழ்வில் யாழ். மாவட்ட கட்டளைத்தளபதி மஹூந்த ஹத்துரு சிங்க பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்டு கட்டிடத்திற்கான நாடாவெட்டி திறந்து வைத்தர். (ஸ்ரீ-2-6)

# ஸ்ரீ முனீஸ்வர ஆலய பங்குனி உத்தரம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.கோட்டை ஸ்ரீ முனிஸ்வரன் தேவஸ்தான பங்குனி உத்தரத்தை முன்னிட்டு இன்று சனிக் கிழமை காலை 9.30 மணிக்கு அஷ்டோதரசங்காபிஷேகமும் (108) நண்பகல் 12 மணிக்கு விசேட பூசையும் அதனைத் தொடர்ந்து 12.30 மணிக்கு மகேஸ்வர பூசையும் இடம் பெறும். (ஸ்ரீ-2)






வவுனியா சுந்தரபுரம் சரஸ்வதி வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி அண்மையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் பாண்ட் வாத்திய சகிதம் அழைத்து வரப்படுவதையும் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட வவுனியா நகரசபையின் உபதலைவர் எம். எம்.ரதன் மங்கல விளக்கேற்றுவதையும் அருகில் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் நிற்பதையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கள்ளிக்காட்டு இதிகாசம்



68



கவிப்பேரரசு வைரமுத்து

எழுபத்திரண்டடி அணையில முப்பத்திரண்டடி தண்ணி ஏறுனப்பவே ஏழெட்டு ஊருக கிணத்துக்குள்ள விழுந்த முக்காத்துட்டுக மாதிரி முங்கிப் போயிருச்சுக. ஆடு மாடு மேய்க்கப்போன பயகளும் பொண்ணுகளும் கள்ளிப்பட்டிக்குள்ள ஓடிவந்து அன்னாடம் அன்னாடம் ஆளுக்கொரு தகவல் சொல்றாக.

"பன்னியான்வீடு முங்கிப்போச்சு... பன்னியான் வீட்டுக்கு மேற்க இருந்த பனமரமும் முங்கிப்போச்சு. பனமரத்து உச்சியில பச்சஓலயும் தூக்கணாங் குருவிக்கூடும்தான் தெரியுது."

"காமக்காபட்டிக் கம்மா ஓரம் இருந்த மொட்டையன் பாறையத் தண்ணி முழுங்கிருச்சுய்யா. அஞ்சாள்மட்டம் உயரம் மொட்டையன் பாறை. இப்பத் தண்ணிக்குள்ள படுத்திருக்கிற யான மாதிரி முதுகுமட்டுந்தான் தெரியுது."

"வடமலநாயக்கன்பட்டி 'கொண்டம்மா கரடு' என்னா உயரம்! அதுல ஆளேறவும் முடியாது; மேய ஆடேறவும் முடியாது. அந்தக் கரட்டையே- உச்சியிலிருக்கிற இச்சிமரம் தவிர- மொழுக்குன்னு முழுங்கிருச்சப்பா தண்ணி."

வகுத்துல புளியக் கரைக்கிற தகவல் வரவர, கதிகலங்கிப்போச்சு கள்ளிப்பட்டி.

"இதுக்குமேலயும் தண்ணி புடிக்காது தண்ணி புடிக்காதுன்னு நெனச்சுக்கிட்டிருந்தா ஒட்டுக் கோவணத்தையும் விட்டுட்டு ஊரவிட்டு ஓட வேண்டியதுதான்."

ஆடுமாடு கோழியக் கையில புடிச்சு, சட்டி பொட்டியத் தூக்கித் தயாராயிருச்சு கள்ளிப்பட்டி.

தெக்குத்தோட்டம்
வெளஞ்சுநிக்குது கம்பங்காடு.
கடைசி அறுவடை.
பேயத்தேவரு; கண்ணுல கண்ணீரு.
நடுங்குது ஈரக்கொல; ஒடுங்குது உசுரு.

கம்பங்காட்டுப் பாறையில நின்னு பாத்தா- தூரத்துல அணக்கட்டுத்தண்ணி விறுவிறுவிறுன்னு ஏறி வராது தெரியுது. என்னமோ கொடை ஆடு புடிக்க ஓநாய் ஓடிவாரமாதிரி இருக்கு.

அந்த வைரவனையும் சீலக்காரியையும் நெனச்சு, கன்னத்துல சாரை சாரையா ஒழுகுன கண்ணீர்ல நெஞ்சுல மொளைச்ச நரை முடியெல்லாம் நனஞ்சுபோக, ஊதுபத்திசூடம் கொளுத்திவச்சுக் கடைசி அறுவடைக்குச் சாமி கும்பிடுறாரு பேயத்தேவர்.

கையில பண்ணருவாளோட கலங்குன கண்ணோட தாத்தாவையே பாத்து நிக்கிறான் மொக்கராசு.

கம்பங்காட்டப் பாக்குறாரு; பூமியப் பாக்குறாரு; அழுத கண்ணோட தலயத்தூக்கி ஆகாயம் பாக்குறாரு. உள்ளங்கையில கொளுத்திவச்ச சூடம் சுடுறதும் தெரியாம அது அமந்து போறவரைக்கும் கையிலேயே ஏந்தி ஆவேசமா நிக்கிறாரு. பெறகு உருமால அவுத்து இடுப்பில இறுக்கிக்கட்டி, பண்ணருவாள எடுத்துக் கம்பங்காட்ட நெறபுடிச்சு ஒரு சூறாவளிக்காத்து சுத்துற மாதிரி கரகரகரன்னு கருதறுத்துப் போறாரு. ஒரு அருளும் ஆவேசமும் கூடிவந்து, உடுக்கடிக்காத கோடாங்கிமாதிரி உச்சக்குரல்ல ஒப்புச்சொல்லி அவரா அழுது பாடுறாரு.

பொன்விளையுங் காடு
பூர்வீகப் பெருங்காடு
நல்ல பொலிகாடு
நாளைக்கு என்னதில்ல

வெளியில இருக்கிற களத்துல கொட்டிட்டு அந்தி மசங்க ஊருக்குள்ள போனா-ஊரே அல்லோகல்லோலப்பட்டு நிக்கிது. பாதிச்சனம் ஊரவிட்டுப் போயிருச்சு; மீதிச்சனம் போயிக்கிட்டிருக்கு. வண்டிகள்ல சாமான்சட்ட ஏத்திக்கிட்டு அழுது பொலம்பிப் போறாக ஆளுக. வளத்த கோழிகளயெல்லாம் ஒரே கயித்துல காலுகளக் கட்டித் தோள்ல கோழித்தோரணம் போட்டு மூக்கத் தொடச்சுக்கிட்டே போறா முத்துக்காளி பொண்டாட்டி. அவ பின்னாலயே முந்தானையப் புடிச்சுக்கிட்டு 'என் ஓலைப்பெட்டியைக் காணோம்; என் ஓலப்பொட்டியக் காணோம்'ன்னு அனத்திக்கிட்டே போறா கண்ணும் மூக்கும் ஒழுகிக்கிட்டே அவ பேத்தி.

மறந்துவிட்டுப்போன வெளக்கமாத்தையும் ஒலக்கையையும் ஓடிப்போயி எடுத்துட்டு வந்து வெளக்கமாத்துல புருசன ஒரு போடு போட்டா பித்துக்காலன் பெண்டாட்டி.

"கூருகெட்ட ஆளு! வெளக்கமாத்த மறந்துட்டு வந்துட்டியே. வெளங்குவியா? நானும் ஒன்னியமாதிரி புத்தியப் பொடனியில வச்ச பொம்பளையா இருந்திருந்தா வெளக்கமாறு தண்ணியில போயிருக்குமா இல்லையா?"

காடையெல்லாம் எரபெறக்கக்
கதுவாலி முட்டையிட
நாலுபோகம் வெளைஞ்சகாடு
நாளைக்கு என்னதில்ல

சடைசடையாத் தானியங்க
சரஞ்சரமாத் தட்டாங்கா
நச்சுன்னு புடிச்சகாடு
நாளைக்கு என்னதில்ல

கடைசி அறுவடைக்குக்
கையோட தெம்புமில்ல
கருதறுக்கும் பண்ணருவா
கழுத்தறுத்தாத் தும்பமில்ல

நெஞ்சமுட்டும் கண்ணீரு
நில்லுன்னா நிக்குதில்ல
புடிச்சுவச்ச என்னுசுரு
போன்னாப் போகுதில்ல

உசுரையும் கண்ணீரையும் வார்த்தைகளையும் போட்டுக் கொழச்சுக் கொழச்சுக் கரகரத்த அடித்தொண்டையில கெழவன் பாடிப்பாடிக் கருதறுக்க விக்கிவிக்கி அழுது பின்னாலயே போறான் மொக்கராசு. கொம்புல கயிறுசுத்திவிட்ட வண்டி மாடுக ரெண்டும் கெழவன் குரலக்கேட்டு அறுகம் புல் மேயுறத விட்டுட்டு அண்ணாந்து பாக்குதுக. மொழி புரியாத சீவாத்திகளுக்கு வலிபுரிஞ்சிருக்கும் போலிருக்கு.

கம்பங்கருதுகள வண்டியில ஏத்தி ஊருக்கு

வெளக்கமாத்து அடியும் அவ வெத்தல எச்சியும் சேந்து விழுந்துச்சு பித்துக்காலுப் பெருமாளு மூஞ்சியில.

'நல்லவேள! ஒலக்கையை மறந்துவச்சதுக்கு ஒலக்கையால போடாம விட்டாளே'ன்னு பெருங்கொண்ட சந்தோசப் பட்டான் பெருமாளு.

"வீடுபோச்சே... வாசல் போச்சே... நெலகதவு போச்சே... நெலம் போச்சே..."ன்னு ஆசாரி அழுது பொலம்பி வாரப்ப, 'பொடிமட்ட டப்பாவ விட்டுட்டு வந்துட்டேன் போலிருக்கே'ன்னு யான மாதிரி முழு ஒடம்பையும் பின்பக்கமாகத் திருப்பிப் 'பொடி' நடையாப் போயிட்டு வந்திரலாமான்னு யோசிக்குது பின்னத்தேவன்பட்டிப் பெருசு.

அம்பலக்கல்லு ஓரமாக் கட்டவண்டிய நிறுத்தி மளார்ன்னு தரையில தவ்வி வெளி யேறுன ஆளுகள வழிமறிச்சாரு பேயத்தேவர்.

"என்னாப்பா! இன்னைக்கே உரவிட்டுப்போறீக?"

"என்னாப்பா! பண்ணச் சொல்ற? தண்ணியில சாக வேணாம். எங்கயாச்சும் போயித் தரையில சாகலாம்ன்னு போறோம்."

"கள்ளிப்பட்டி மேட்டுல இருக்கப்பா, காடு கரை நாடு நகரமெல்லாம் முங்குனாலும் கள்ளிப்பட்டி முங்காதப்பா."

"நேத்துவரைக்கும் அப்படித்தான் நெனச்சோம். விதி விடுதா? முப்பத்திரண்டடி தண்ணி வந்ததுக்கே பன்னியான்வீட்டுப் பனமரத்தக் காணமாம். மொட்டையன் பாறை முக்கலே அரைக்கா முங்கிப்போச்சாம்.

*(வளரும்)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பங்குனி மாத இராசி பலன்கள்




(மகரம், பூரம், உத்தரம் 1ஆம் பாதம்)

**வாய்ப்புகள் வாயில் தேடி வரும்!**

***நல்ல பேச்சுத்திறனும், செயல்திறனும் ஒன்றாக இணைந்திருக்கும் சிம்ம ராசி நேயர்களே!***

உதவிக்கரம் நீட்டும் எண்ணம் இயற்கையிலேயே உங்களுக்கு உண்டு. தனக்கு பிடிக்காத காரியத்தில் தலையிடாமல் விலகி விடுவீர்கள். பொதுவாழ்வில் முழுமையாக ஈடுபடும் வாய்ப்பு உங்களுக்கு அதிகம் கிடைக்கும். அடிக்கடி கொள்கைகளை மாற்றிக் கொள்வதால்தான் உங்களை யாராலும் புரிந்து கொள்ள முடியாது. அறிவுரை கூறுவதில் வல்லவர்களாக விளங்குவீர்கள்.

உங்களுக்கு இம்மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, திடீர் மாற்றங்களால் வாழ்வில் தித்திக்கும் சூழ்நிலை அமையுமென்றே சொல்ல வேண்டும். இராசிநாதன் அஷ்டமத்தில் சஞ்சரித்தாலும், குருவுடன் இணைந்திருப்பதால் குழப்பங்களில் இருந்து விடுபடுவீர்கள். குடும்பத்தில் அமைதி கூடும்.

பார்க்கும் செவ்வாயால் பதவிகளும், புதிய பொறுப்புகளும் ஒருசிலருக்கு வந்து சேரலாம். சேர்ந்த தொகை செலவழிந்து போனதே என்ற கவலை இனி அகலும். புதிய தொழில் தொடங்கும் திட்டங்களை சனி விலகுவதற்கு முன்னதாகவே, செயற்படுத்தும் அமைப்பை உருவாக்கி கொடுப்பார். இனிய சம்பவங்களை மாதத் தொடக்கத்திலேயே சந்திக்கப் போகிறீர்கள்.

உங்கள் இராசிக்கு பதினொராமிடமான இலாப ஸ்தானத்தில் விரயாதிபதி சந்திரன் சஞ்சரித்து மாதம் தொடங்குவதால், சுபவிரயங்கள் பலவும் ஏற்படலாம். விலை உயர்ந்த பொருட்களை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள்.

தொழில் பங்குதாரர்களுக்கு தொகையைக் கொடுத்து விட்டு, தனித்தியங்கலாமா? என்று சிந்திப்பீர்கள். உடல் ஆரோக்கியத்தில் மட்டும் கொஞ்சம் கூடுதல் கவனம் தேவை. அன்னதானம், வஸ்திரதானம் போன்றவற்றில் ஆர்வம் காட்டுவதோடு, சனீஸ்வர வழிபாட்டையும் மேற்கொள்வது நல்லது.

இம்மாதம் 23ஆம் திகதி கும்ப இராசியில் சுக்ரன் சஞ்சரிக்கப்போகிறார். சப்தம ஸ்தானத்தில் சுக்ரன் சஞ்சரித்து, உங்கள் இராசியைப் பார்க்கும் பொழுது, உடன்பிறப்புகளின் ஒத்துழைப்பு கிடைக்கும்.

உற்சாகத்தோடு பணி புரிவீர்கள். கடன் சுமை குறையும். காலம் காலமாக நடைபெறாத காரியங்கள் கூட திடீரென முடிவுக்கு வரலாம். தொழிலில் புதிய பங்குதாரர்களை இணைத்துக் கொள்ள முன்வருவீர்கள். சொத்துக்களால் ஆதாயம் கிடைக்கும்.

மீன இராசியில் இம்மாதம் 24ஆம் திகதி செவ்வாய் சஞ்சரிக்கப்போகிறார். அஷ்டமத்தில் செவ்வாய் சஞ்சரிப்பது அவ்வளவு நல்லதல்ல. உடல் ஆரோக்கியத்தில் கூடுதல் கவனம் செலுத்தும் சூழ்நிலையும், உற்சாகம் குறையும் சூழ்நிலையும் ஏற்படலாம்.

எதையும் ஒருமுறைக்கு பலமுறை யோசித்துச் செய்வதன் மூலம் இனிய பலன்களை வரவழைத்துக் கொள்ளலாம். வாங்கிய பூமியை விற்க வேண்டிய சூழ்நிலை, ஒருசிலருக்கு உருவாகலாம். அரசு வழித் தொல்லைகளைச் சந்திக்காமல் இருக்கவும், அன்றாட வாழ்க்கை நன்றாக அமையவும் முருகப் பெருமான் வழிபாட்டில் முறையாக கவனம் செலுத்துவது நல்லது.

இம்மாதம் சனிக்கிழமை அனுமன் வழிபாடும், சுயஜாதகத்தில் தொழில் ஸ்தானாதிபதியின் பலமறிந்து அதற்குரிய வழிபாடும் மேற்கொண்டால், எண்ணங்கள் எளிதில் நிறைவேறும்.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

இம்மாதம் முற்பகுதி வரவும், பிற்பகுதி செலவும் அதிகரிக்கும். முன்னேற்றப் பாதையை நோக்கி நீங்கள் அடியெடுத்து வைப்பீர்கள். முத்தாய்ப்பாக குருப்பெயர்ச்சிக்குப் பின்னர் நீங்கள் கொடிகட்டி பறக்கும் வாய்ப்பு உண்டு. அடிப்படை தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்ள, அருகில் இருப்பவர்களை அனுசரித்துச் செல்வது நல்லது. விட்டுக் கொடுத்துச் செல்வதன் மூலம் கணவன் - மனைவி உறவில் இருந்த விரிசல் அகலும். குலதெய்வ வழிபாடும் வலம்புரி விநாயகர் வழிபாடும் வளர்ச்சியைக் கூட்டும்.




(உத்தரம் 2, 3, 4ஆம் பாதங்கள், அத்தம், சித்திரை 1, 2ஆம் பாதங்கள்)

**விரயங்கள் குறைய விழிப்புணர்ச்சி தேவை!**

***இருபத்தி நான்கு மணிநேரமும் மகிழ்ச்சியுடன் வாழ வேண்டும் என்று நினைக்கும் கன்னி இராசி நேயர்களே!***

நீங்கள் கடுமையாக உழைக்காமலேயே காசு பணத்தைப் பெறுபவர்கள். பேச வேண்டிய இடத்தில் கவர்ச்சிகரமாகப் பேசிக் காரியத்தை முடித்துவிடுவீர்கள். சாமர்த்தியசாலிகள் என்று உங்களை வர்ணிப்பார்கள். உங்கள் மூளை மின்னல் வேகத்தில் வேலை செய்வதால்தான் முன்னேற்றங்கள் வந்து கொண்டே இருக்கின்றன. மனதில் உள்ளதை மறைக்காமல் சொல்வதால் மற்றவர்கள் உங்களைப் போற்றுவர்.

பங்குனி மாத கிரகநிலைகளை ஆராய்ந்து பார்க்கும்பொழுது, விரயாதிபதி சூரியனும், குருவும் உங்கள் இராசியை இணைந்து பார்க்கிறார்கள். எனவே குரு பார்வையில் ஏற்படும் வரவை, விரயாதிபதி சூரியன் விரயமாக மாற்றிவிடலாம். எனவே செலவு நடைகள் கூடும். குடும்பச்சுமை அதிகரிக்கும். விழிப்புணர்ச்சியுடன் நீங்கள் செயற்படுவதன்மூலம் விரயங்களில் இருந்து தப்பித்துக் கொள்ள இயலும்.

செவ்வாய் பெயர்ச்சிக்குப் பின்னர் மேலும் கவனமாக இருக்க வேண்டும். உடன்பிறப்புகள் வழியில் அனுசரித்துச் செல்வது நல்லது. அதுமட்டுமல்லாமல் தொழில் பங்குதாரர்களிடமும் விழிப்புணர்ச்சியோடு இருந்தால்தான், வரும் வருமானம் ஏட்டில் மட்டும் இல்லாமல் எதிரிலும் இருக்கும். கூட்டு முயற்சிகளில் இருப்பவர்கள் கொள்கைப் பிடிப்பைக் கொஞ்சம் தளர்த்திக் கொள்ளும் சூழ்நிலை உருவாகும்.

5க்கு அதிபதி வக்ர கதியில் இருப்பதால், பிள்ளைகளால் தொல்லைகள் உருவாகலாம். உங்களைக் கேட்காமலேயே குழந்தைகள் சுயமுடிவு எடுக்கலாம். எனவே அன்பு காட்டி அரவணைத்து அதன் மனநிலையை அறிந்து செயற்பட்டால், வம்பு வழக்குகள் இல்லாமல் வாரிசுகளால் நன்மைகள் ஏற்படும். அதே சமயம் வழிபாட்டிலும் நீங்கள் ஆர்வம் காட்ட வேண்டும். தெசாபுத்திக்கேற்ற தெய்வங்களைத் தேர்ந்தெடுத்து வழிபடுவதோடு ஆதியந்தப் பிரபுவையும் வழிபட்டு வாருங்கள்.

இம்மாதம் 23ஆம் திகதி 2, 9க்கு அதிபதியான சுக்ரன் கும்ப இராசியில் சஞ்சரிக்கப் போகிறார். தனாதிபதி 6இல் சஞ்சரிக்கும் பொழுது, உத்தியோகத்தில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். வங்கிகளில் கடனுதவி பெற நினைத்தவர்களுக்கு அது கைகூடும். நீண்ட இடைவெளிக்குப் பின்னர் வீடு கட்டும் பணியைத் தொடரக் கூடிய வாய்ப்பு ஒரு சிலருக்கு வந்து சேரும். விருந்து, விழாக்களில் கலந்து கொண்டு மகிழ்ச்சியடைவீர்கள். நட்பு வட்டம் விரிவடையும். மாற்று மருத்துவத்தால் உடல் நலம் குணமாகும்.

செவ்வாய், சனி இரண்டும் ஒன்றை ஒன்று பார்த்தாலும், ஒன்றுடன் ஒன்று சேர்ந்தாலும் அவ்வளவு நல்லதல்ல. ஆனால், எப்படியும் சில சமயங்களில் அது சேர்ந்திருக்கும் சூழ்நிலையும் உருவாகும். பார்க்கும் சூழ்நிலையும் அமையும்.

அந்த அமைப்பு இம்மாதம் 24ஆம் திகதி முதல் உங்கள் இராசியைப் பொறுத்தவரை ஏற்படுகிறது. மீனத்தில் சஞ்சரிக்கும் செவ்வாய் உங்கள் இராசியில் இருக்கும் சனியைப் பார்க்கப் போவதால், மிகமிக கவனத்துடன் செயற்பட வேண்டும். ஆலய வழிபாட்டை ஜாதக ரீதியாகத் தேர்ந்தெடுத்து அமைத்துக் கொண்டால் அமைதி கிடைக்கும்.


இம்மாதம் மாருதி வழிபாட்டையும், கந்தன் வழிபாட்டையும் மேற்கொண்டால், மனக்குழப்பங்கள் மாறி மகிழ்ச்சி ஏற்படும்.

**சிவல்புரி சிங்காரம்**

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

இம்மாதம் செவ்வாய், சனி பார்வையால் சில எதிர்பாராத மாற்றங்களைச் சந்திப்பீர்கள். திடீரென உடன் இருப்பவர்களால் பிரச்சினைகள் உருவாகலாம். பக்கத்து வீட்டாரிடம் பாசமழை பொழிவதன் மூலமும், பக்குவமாக நடந்து கொள்வதன் மூலமும் சச்சரவுகளை விலக்கிக்கொள்ள இயலும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. ஆகாரத்தில் கட்டுப்பாட்டை மேற்கொள்வதன் மூலம் ஆரோக்கியத்தைச் சீராக்கிக் கொள்ளலாம். சுயஜாதகத்தில் சனி மற்றும் செவ்வாய் இருக்கும் நிலையறிந்து பரிகாரம் செய்தால் நற்பலன் கிடைக்கும்.

*(தொடரும்)*



வடமாகாண முன்பள்ளிக்கான முகாமைத்துவத் திட்ட கால்கோள் விழா அண்மையில் வவுனியா நகரசபை கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் வடமாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் எல்.இளங்கோவன் உரை நிகழ்த்துவதையும் முன்பள்ளி ஆசிரியர்களுக்கான நூலகப் புத்தகங்களை கைத்தொழில், வாணிப அலுவல்கள் அமைச்சர் ரிஷாத் பதியுதீன் ஆசிரியர் ஒருவருக்கு வழங்குவதையும் படங்களில் காணலாம்.

*(படங்கள்: என்.குமார்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காசநோய் சமூக அணுகுமுறை

## (10) காசநோயினை ஆய்வுகூடங்களில் கண்டறிதல்

V. நுணுக்குக்காட்டியில் ஏற்படும் பிரச்சினைகள்

| இல | பிரச்சினை | காரணம் | தீர்வு |
|---|---|---|---|
| 01 | பார்வைப்புலம் மங்கலாக இருத்தல் | கொன்டென்சர் கீழே காணப்படலாம்.கொன்டென்சர் மூடி இருக்கலாம் | கொன்டென்சரை உயர்த்தவும். திறக்கவும். |
| 02 | பார்வைப்புலத்தில் கடுமையான நிழல் கண்துண்டினை அசைக்கும் போது | கண்துண்டு அசுத்தமாக இருக்கலாம்.கண்துண்டில் பங்கசு தொற்றல். கண்துண்டில் கீறல் | சுத்தம் செய்யவும் திருத்தல் புதிய கண்துண்டு. |
| 03 | விம்பம் தெளிவு இல்லை | சளிப்படலம் தலைகீழாக உள்ளமை.எண்ணெயில் காற்றுக்குமிழ் எண்ணெய்த் தடிப்பு அதிகம். | சளிப்படலம் திருப்பவும் X100 வில்லை ஒரு பக்கத்தில் இருந்து மறுபக்கத்திற்கு அசைக்கவும். நல்ல தரமான எண்ணெயை உபயோகிக்கவும். |
| 04 | தாழ்வலுவில் விம்பம் தெளிவில்லை | வில்லையில் எண்ணெய் காணப்படலாம். வில்லை மேற்பகுதியில் தூசு காணப்படலாம். வில்லை உடைந்து காணப்படலாம். | சுத்தப்படுத்தவும். புதிய வில்லை தேவை. |

### VI. சாயங்கள் தயாரித்தல்

ஒரு வீதம் காபோல்பியூசன், (பேசிக்பியூசன் 10 கிராம், தூய அற்ககோல் 100 மில்லிலீற்றர், பீனோல் 50 கிராம், கொதித்து வடிகட்டிய நீர் 900 மில்லிலீற்றர்)

பேசிக்பியூசனை தூய அற்ககோலில் கரைத்து, உருகிய பீனோலை அதனுள் சேர்த்த பின் வடிகட்டிய நீரை விடவும். வடிகட்டி போத்தலில் சேமிக்கவும். த்யாரித்த திகதி உட்பட விபரத்தை போத்தலில் எழுதி ஒட்டவும்.

25% சல்பூரிக்கமிலம்

சல்பூரிக்கமிலம்-100மில்லிலீற்றர், கொதித்து வடிகட்டிய நீர்-300 மில்லிலீற்றர்

கொதித்து வடிகட்டிய நீருக்குள் மெதுவாக சல்பூரிக்கமிலத்தை விடவும் (ஒரு போதும் சல்பூரிக்கமிலத்தினுள் நீரை விடக் கூடாது).

ஒரு வீதம் மெதலீன் நீலம் (மெதலீன் நீலம் 0.5% கொதித்து வடிகட்டிய நீர்-500 மில்லி லீற்றர்)

மெதலீன் நீலத்தை கொதித்து வடிகட்டிய நீரில் கரைத்து வடிகட்டவும், கண்ணாடிப் போத்தலில் சேர்க்கவும், விபரத்தையும் தயாரித்த திகதியையும் ஒட்டவும்.கரைசல் மீது சூரிய ஒளிபடக்கூடாது. நுண் துணிக்கைகள் தோன்ற ஆரம்பிப்பின் அதனை பாவிக்கக் கூடாது.

### VII. சளியினை சேகரித்தல்

இடம்

நோயாளி இருமும் போது கிருமி தொற்றல் அதிகம், ஆதலால் சளி எடுக்கும் போது திறந்த வெளியிலும், ஏனையவர்களில் இருந்து விலகியும் எடுக்க வேண்டும். அல்லது காற்றோட்டமான அறையில் சளி எடுத்தல் வேண்டும்.

*அ.சளி எடுக்கும் பாத்திரம்*

1. அழிக்கக்கூடியவையாக இருத்தல் வேண்டும்.
2. தூயதாக இருத்தல் வேண்டும்.
3. அகன்ற வாயுடைதாக இருத்தல் வேண்டும்.
4. உடையக்கூடாது
5. வழிந்தோடக் கூடாது
6. சரியாக பொருந்தக்கூடிய மூடி இருத்தல் வேண்டும்.
7. இலகுவில் எரியக்கூடியதாக இருத்தல் வேண்டும்.

*ஆ. சளியை சேகரிக்கும் முறை*

1.நோயாளியின் ஆய்வுகூட பத்திரத்தை பெறல்

2. ஆய்வுகூட பத்திரம் சரியானதா என்பது ஆய்வுகூடம் பரிசீலித்தல்

3.ஆய்வுகூட பத்திரத்திலும், சளி சேகரித்த பத்திரத்திலும் ஆய்வுகூடத் தொடரிலக்கத்தை குறிப்பிடல் (பத்திரத்தின் ஓரத்தில் தொடரிலக்கம் குறிப்பிடப்படல் வேண்டும்).

*இ. ஆய்வு கூட தொடரிலக்கம்*

நோயாளி நோய்க்கிருமித் தொற்றல் உடையவரா என அறியவரும் போது முதல் 3 சளிச்சோதனைகளுக்கும் ஒரே இலக்கம் உபயோக்கிக்கப்படும். 2 ஆம் மாதத்தில் மீளவும் இரு தடவை செய்யும் போது புதிய இலக்கம் வழங்கப்படும். சளி சேகரித்த பாத்திரத்தில் எழுத வேண்டும். மூடியில் ஒட்டக்கூடாது/எழுதக்கூடாது.

*ஈ.சளியை சேகரிப்பதற்கான முறை*

1.நோயாளிக்கு சளியை பரிசோதிப்பதற்கான காரணத்தைக் கூறவும்.



Dr,சி.யமுனானந்தா, MBBS,DTCD
மாவட்ட காசநோய்க் கட்டுப்பாட்டு அதிகாரி,
மார்புநோய் சிகிச்சை நிலையம்,
பண்ணை,யாழ்ப்பாணம்.

2.எத்தனை மாதிரி தேவை எனக் கூறவும்

3.சளியை எவ்வாறு எடுப்பது எனக் கூறவும்

4.அடையாளம் இட்ட சளி சேகரிப்பு பாத்திரத்தை நோயாளிக்கு கொடுத்து எவ்வாறு திறந்து மூடுவது எனச் செய்து காட்டவும்.

5.எழுதிய பகுதியை அகற்றாமல் இருக்க விளக்கவும்.

6.எச்சிலுக்கும், சளிக்கும் உள்ள வித்தியாசத்தை கூறவும். சளி நுரையீரலில் இருந்து வர வேண்டும்.

7.சளி எடுக்க சிரமப்படுபவர்களுக்கு 2 மில்லிலீற்றர் சேலைன் ஆவியில் சுவாசிக்க வைப்பதால் சளியை இலகுவாக எடுக்கலாம்.

*(தொடரும்)*

# விமானநிலையத்தில் கதிர்வீச்சு தாக்கம் குறித்து பரிசோதனை

ஜப்பானில் இருந்து இலங்கைக்கு வருபவர்களிடம் கதிர்வீச்சுத் தொடர்பாக கட்டாய சோதனை மேற்கொள்ளப்படுவதாக வெளியான தகவல்களை இலங்கை அணுசக்தி முகவரகத்தின் தலைவர் பேராசிரியர் விமலதர்ம அபேவிக்ரம நிராகரித்துள்ளார்.

எனினும், ஜப்பானிலிருந்து வரும் பயணிகள் விரும்பினால் அணுக்கதிர்வீச்சினால் தமக்குப் பாதிப்பு ஏற்பட்டுள்ளதா என்பதை அவர்கள் சோதித்துக் கொள்வதற்கு பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

பயணிகள் விமான நிலையத்தில் உடற்பரிசோதனை நடத்தக் கோருவதற்கும் ஏனைய தகவல்களைப் பெறவும் 011 2547332 எனும் தொலைபேசி மூலம் அழைக்கலாம் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# புலிகளுடன் தொடர்புடைய நபர் மும்பையில் கைது

(மும்பை)

விடுதலைப்புலிகளுடன் தொடர்புடைய நபரொருவர் இந்தியாவின் மும்பையில் மறைந்து வாழ்ந்த நிலையில் இந்தியப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கார்த்திக் எனும் இயற்பெயர் கொண்ட அவர் ராஜன் சிலிதுரியா எனும் புனைபெயரில் இந்தியப் பிரஜை போன்று கடந்த நான்கு வருடகாலமாக மும்பையில் அடிக்கடி இடம் மாறி வசித்து வந்துள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

கடைசியாக அவர் மும்பையின் நவி மும்பை பிரதேசத்தில் வசித்த நிலையில் மகாராஷ்டிரா மாநிலத்தின் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

அத்துடன் போதை மருந்து கடத்தல் சம்பவம் தொடர்பாகவும் அவர் மீது பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்ட நிலையில் பொலிஸாரால் தேடப்பட்டு வந்துள்ளதாகவும் மும்பை பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கைதுசெய்யப்பட்டுள்ள கார்த்திக்கிற்கு இந்தியப் பயங்கரவாத இயக்கங்களுடனும் தொடர்புகள் உண்டா என்பது குறித்து தற்போது மகாராஷ்டிரா பயங்கரவாதத் தடுப்புப் பிரிவின் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஸ்ரீ-2)

# படகு மூலம் அவுஸ்திரேலியா செல்ல முயன்றவர்கள் பிணையில் விடுதலை

தெய்வேந்திர முனையிலிருந்து அவுஸ்திரேலியாவுக்கு படகு மூலம் செல்ல முயன்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் பிணையில் செல்ல கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது. இரண்டு சரீரப் பிணை மற்றும் ஒரு மில்லியன் ரூபா பெறுமதியான ரொக்கப் பிணையில் இவர்களை விடுவிக்க நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்தது.

சம்பவத்துடன் தொடர்புடையதான 18 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட நிலையில் அவர்களில் 3 ஆவது மற்றும் 18 ஆவது சந்தேக நபாகளாக இனங்காணப்பட்டவர்களே மேற்படி சட்டவிரோத பயணத்தை ஏற்பாடு செய்துள்ளார்கள் என தெரியவந்துள்ளது.

இந்நிலையில் சந்தேக நபர்கள் சார்பில் நீதிமன்றில் ஆஜரான சட்டத்தரணி 3 ஆவது மற்றும் 18 ஆவது சந்தேக நபர்கள் இருவர் தவிர்ந்த ஏனையோர் போதிய வருமானம் இன்மை காரணமாகவே வேலை தேடி அவுஸ்திரேலியா பயணிக்க முயன்றார்கள் என்று தெரிவித்தார்.

அத்துடன் இவர்கள் பெருமளவு பணத்தை பயண ஒழுங்கமைப்பாளர்களுக்கு செலுத்தியுள்ளதாகவும் சட்டவிரோத செயல்களில் சம்பந்தப்படாதவர்கள் எனவும் நீதிமன்றில் கூறினார்.

இதனையடுத்து பயண ஒழுங்கை மேற்கொண்ட இரு சந்தேக நபர்களையும் எதிர்வரும் 30 ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்க உத்[illegible] 16 சந்தேக நபர்களை[illegible] செல்ல அனுமதி வழங்கினார். (ஸ்ரீ)

# சன் சீ கப்பலில் சென்ற மற்றொரு தமிழ் அகதி நாடுகடத்தப்படவுள்ளார்

(கொழும்பு)

சன்சீ கப்பல் மூலம் கனடா சென்ற மற்றுமொரு தமிழ் அகதியை நாடு கடத்த கனேடிய நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

குறித்த அகதி தமிழீழ விடுதலைப் புலிகளிடம் சுமார் ஒரு வருடத்துக்கும் மேலாக பயிற்சி பெற்றதாக அவரது சட்டத்தரணி செபாட் மோஸ் நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

இலங்கையில் இறுதி யுத்தம் இடம்பெற்ற காலப்பகுதியில் விடுதலைப் புலிகளின் கட்[illegible] இருந்து வெளியேறு[illegible]பாதுகாப்பு வழங்கும் பணியில் ஈடுபடுத்தப்பட்டிருந்ததாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனினும், அவர் யுத்தங்கள் எதனிலும் பங்கு கொண்டிருக்கவில்லை எனவும் அவர் வாதாடினார்.


இதனையடுத்து அவர் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் தொடர்புடையவர் என உறுதியானதைத் தொடர்ந்து சட்ட ரீதியாக அவரை நாடு கடத்த உத்தரவிடுமாறு கனேடிய குடிவரவுத் திணைக்கள அதிகாரி கோரியிருந்தார்.

இதனையடுத்து நீதிமன்றம் இந்த உத்தரவை பிறப்பித்ததாகக் கனேடிய ஊடகங்கள் தெரிவிக்கின்றன. (ஸ்ரீ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்கள் ஆசையை நீங்கள் செலுத்துங்கள்!

உங்களுக்கு மிகச் சிறந்த சாம்ராஜ்யம் கிடைத்தாலும், முழுமையான திருப்தி இல்லாமல் உள்ளுக்குள் ஒரு ஏக்கம் இருப்பதை உணர்ந்திருக்கிறீர்களா? என்ன கிடைத்தாலும் .சரி, இன்னும் கொஞ்சம்... இன்னும் ஏதாவது என்று எப்போதுமே ஒரு ஆசைத் தீ உங்களுக்குள் எரிந்து கொண்டே இருப்பதை கவனித்திருக்கிறீர்களா? ஏன் இப்படி? அளந்து பார்க்கக்கூடிய எதைக்கொடுத்தாலும்,



உங்களுக்குத் திருப்தி வரப்போவதில்லை. உண்மையில் உங்கள் தவிப்பு, கிடைப்பதையெல்லாம் கைவசப் படுத்திக் கொள்வதற்காக எழுந் ததல்ல!

எல்லையில்லாத பிரபஞ்சத்தின் அங்கமாகிய நீங்கள், கவனமில்லாமல் உங்களை ஓர் எல்லைக்குள் அடையாளப்படுத்தி அடக்கப் பார்த்ததால் வந்த விளைவு இது. விரிவடைந்து விரிவடைந்து எல்லையில்லாததுடன் கலந்து விடத்துடிப்பதனால்தான், வேறு எதைக் கொடுத்தாலும் உங்கள் ஆசை முழுத் திருப்தி வராமல் குறைபட்டுக் கொள்கிறது. இந்த அடிப்படையைக் கவனமாகப் புரிந்து கொண்டால், துன்பத்திற்கு வாய்ப்பில்லை.

இந்தப்பிரபஞ்சமும் நீங்களும் ஒன்றே என்பதை அனுபவபூர்வமாக உணர்ந்ததும், ஆசை சட்டென்று அதன் தவிப்பை விட்டு விடும். அதன்பின், ஆசை என்பது வெளியில் இருந்து வரும் ஒரு வற்புறுத்தலாக இல்லாமல், உள்ளார்ந்த விருப்பமாக மட்டுமே இருக்கும். ஆசை உங்களைச் செலுத்தாது. நீங்கள் ஆசையைச் செலுத்துவீர்கள் எப்படி?

கிரிக்கெற் ஆட வேண்டும் என்று முடிவு செய்கிறீர்களா? அதற்கான ஆசையை முழுமையாகப் பயன்படுத்துவீர்கள். வியாபாரத்தில் வெற்றி பெற விரும்புகிறீர்களா? அதற்கான ஆசையைப் பயன்படுத்துவீர்கள். எதைச் செய்தாலும், அதனுடன் இருக்கும் நிமிடங்களில் உங்கள் வாழ்க்கையே அதுதான் என்பது போல், பூரணமான ஆசையுடன் இயங்குவீர்கள். அந்தந்த ஆட்டம் முடிந்ததும், அதற்கான ஆசையைச் சுருட்டி வைத்து விடுவீர்கள்.

வண்டியை குதிரைக்குப் பின்னால் கட்டினால், பிரச்சினை இல்லாமல் இழுத்துப்போகும். மாறாக வண்டியை குதிரைக்குமுன்னால் வைத்துக் கட்டி இழுக்கச்சொன்னால்...? குதிரையின் திறமையும் வீணாகும்... வண்டியும் தடம் புரண்டு போகும்!

சந்தோசமும் ஆசையும் கூட குதிரையும் வண்டியும் போலத்தான்! ஆசையினால் சந்தோசம் கிடைக்கும் என்று நினைக்காமல், உங்கள் சந்தோசத்தின் ஒரு வெளிப்பாடாக ஆசையை பயன்படுத்திப் பாருங்கள்.

சங்கரன்பிள்ளை கடுமையான இதயவலியால் தாக்கப்பட்டார்.

"காலைவரை தாக்குப்பிடித்தாலே ஆச்சரியம்" என்று டாக்டர் சொல்லி விட்டார். சங்கரன் பிள்ளையின் மனைவி கொஞ்சநேரம் அழுதாள். தன் கணவருக்கு கரட் அல்வா என்றால் பிரியம் என்பது அவள் நினைவுக்கு வந்தது. மறுநாள் அதற்கெல்லாம் நேரமிருக்காது. அவர் போட்டோவின் முன் படைப்பதற்காக இரவே அதைத் தயார்செய்து ஃபிரிஜ்ஜில் வைத்தாள். பின்பு, அழுது அழுது களைப்புடன் படுத்து உறங்கிவிட்டாள்.

சங்கரன் பிள்ளைக்கு இரவு விழிப்பு வந்தது. ஃபிரிஜ்ஜைத் திறந்தார். கரட் அல்வா கண்களில் பட்டதும். நாக்கில் எச்சில் ஊறியது.

அல்வாவை ஆசையுடன் ஒரு ஸ்பூனில் எடுத்தார். பொட்டென்று அவர் கையில் ஒரு அடி விழுந்தது. திரும்பினால் மனைவி கோபத்துடன் நின்றிருந்தாள்.

"உங்களுக்குப் படைப்பதற்கென்று வைத்திருப்பதை இப்போதே எடுத்துத்



## ஆன்மீகம் 49

தின்றால் என்ன அர்த்தம்?" என்று உறுமினாள்.

விரும்பியதை நோக்கிச் செயலாற்றும் போதே ஆனந்தத்தை அனுபவிக்காமல், அதன் முடிவில்தான் ஆனந்தம் கிடைக்கும் என்று காத்திருப்பது, உயிரோடு இருக்கும் போது சாப்பிட விடாமல், படையலுக்காக வைத்திருப்பது போலத்தான்!

முடிவுக்கு ஆசைப்படுவதை விடுத்து, செயலாற்றுவதற்கே ஆசைப் பட்டுப்பாருங்கள். ஆனந்தத்தின் வெளிப்பாடாக ஆசையை வளர்த்துக் கொண்டு கவனியுங்கள். துன்பம் என்ற பேச்சுக்கே இடம் இருக்காது. உங்கள் சந்தோசமென்பது அப்புறம் வெற்றியா, தோல்வியா என்கிற முடிவுக்காகக் காத்திருக்காது!

**சத்குரு ஜக்கி வாசுதேவ்**

# தமிழ் நாவல்கள் சில நோக்கங்கள்

**14**



யாழ்ப்பாணத்தின் பகைப்புலமும் ஒடுக்கப்பட்ட மக்கள் படும் சிறுமைகள் சாதிக்கட்டுப்பாடுகள் முதலான துயரங்களையும் இந்த நாவலில் அற்புதமாகக் காட்டியுள்ளார். பாத்திரங்கள்

**"கொழும்பில் நடைபெற்ற சர்வ தேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக்கட்டுரை"**

கூடியவரை பேச்சு வழக்கினை தம் உரையாடல்களில் கையாளுகின்றன. பாவனைப் பொருட்களின் பெயர்கள் சரிவர ஆங்காங்கு வருகின்றன. ஆசிரியரின் சிறப்பான அவதானிப்பை இந்த நாவலில் காணமுடிகிறது. சாதியக் கொடுமைகள் இன்றும் உள்ளபோதிலும் 'நீண்டபயணத்'தில் வருவது போன்ற சம்பவங்கள் இன்று இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இனி1970-1980 பத்தாண்டுகளில் பெருமை சேர்த்த நாவல்களைப் பார்ப்போம்.

1970-1980 காலகட்டத்தில் செங்கை ஆழியானின் பிரளயம், சித்திரா பௌர்ணமி,முற்றத்து ஒற்றைப்பனை, வாடைக்காற்று, இரவின்முடிவு, காட்டாறு, யானை, கொத்தியின்காதல் ஆகிய ஒன்பது நாவல்கள் வெளிவந்துள்ளன. இவற்றில் சித்திரா பௌர்ணமி, யானை என்பன தவிர்ந்த ஏனைய அனைத்தும் வீரகேசரிப் பிரசுரமாக வெளிவந்தன. பிரளயம் ஒரு சாதிய நாவலாகும். கணேசலிங்கன், டானியல் சார்ந்தோர் சாதியத்தின் அழிவிற்கு அல்லது சமூக மாற்றத்திற்குத் தமது நாவல்களில் சுட்டிக் காட்டிய வழிமுறை ஒரு சமூகப் புரட்சியாகும். செங்கைஆழியானின் சாதிய நாவல்களான பிரளயம், அக்கினி முதலியன யாழ்ப்பாணச் சமூகத்தின் பல்வேறு கொடுமைகளின் பல்வேறு வடிவங்களை தனது நாவல்களில் சித்திரிக்கின்ற அதேவேளை சமூக மாற்றமானது கல்வி, தொழில் மாற்றம், செல்வந்தேடல் என்பனமூலம் ஏற்படும் எனச் சித்திரித்துள்ளார். வாடைக்காற்று செங்கைஆழியானின் புகழ் பெற்ற நாவல் காட்டாறு, ஈழத்தின் தரமானதொரு நாவலாகக் கணிக்கப்படுகின்றது.

'காட்டாறு' நாவலில் பல்வேறு விதங்களில் சுரண்டலிற்கும் பாதிப்புக்கும் உள்ளான மக்கள் தமக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளுக்கு எதிராகப் போர்க்குணம் கொள்வது, சமுதாய இயல்பான விழிப்புணர்வுடன் கலையழகுடன் சித்திரிக்கப்பட்டுள்ளது. காட்டாறு நாவல் வன்னிப் பிரதேச நாவல் என்ற வரையறைக்குள் விமர்சகர்கள் அடக்கிவிடுகின்ற போதிலும் அதில் விபரிக்கப்படும் கதாமாந்தர்கள் அப்பிரதேசத்தில் ஆதிக்கமும் அதிகாரமும் செல்வமும் கொண்டவர்களால் எவ்வாறு அடக்கியொடுக்கப்படுகிறார்கள் என்பதையும், ஒரு கட்டத்தில் அந்த அடக்குமுறைச் சங்கிலி எவ்வாறு உடைக்கப்படுகிறது என்பதையும் விபரிக்கும் நாவலாகவுள்ளது.

சாதியத்துக்கு மிக்க அழுத்தம் கொடுத்து பல நாவல்களைப் படைத்துத் தந்தவர் டானியல் ஆவார். டானியல் மார்க்சிய கருத்துக்களுக்கு தன் நாவல்களில் முக்கியத்துவம் கொடுத்திருப்பதோடு சாதியத்தின் அழிவுக்கும் அடக்கியொடுக்கப்பட்ட மக்களின் விடிவுக்கும் சமூகப் புரட்சியொன்றின் மூலமே விடைகாணலாம் என நம்பினார். இவரது நாவல்களில் யாழ்ப்பாண சமூகத்தின் சாதிப் பிரச்சினைக் களங்கள் பொதுவாகச் சித்திரிக்கப் பட்டுள்ளன. கோயில்கள், பொதுக் கிணறுகள், பொது இடங்கள், பாடசாலைகள் தொழில் ஸ்தாபனங்கள் என்பவற்றில் பஞ்சமர்கள் அனுபவிக்கின்ற ஏற்றத் தாழ்வுகளையும் அவமானங்களையும் மனக்காயங்களையும் சமூக அநீதிகளையும் தனது நாவல்களில் காட்டியுள்ளார்..., டானியல் பஞ்சமர்களுக்கெதிராகத் தொழிற்பட்ட பாத்திரங்களை மட்டுமன்றி அப்பாத்திரங்கள் சம்பந்தப்பட்ட சமூகம் முழுவதையும் காறிஉமிழ்கிறார். இங்கு ஆக்கவிலக்கியகர்த்தாவுக்கு இருக்கவேண்டிய சமநிலைப்பார்வை அற்றுப்போய் அந்த சமூகத்தையே அழித்துவிட வேண்டுமென்ற போராட்டகுணம் காணப்படுகிறது. தலித் இலக்கியத்தின் பிதாமகர் என்று டானியல் கொள்ளப்படுவதற்கு அவர் தலித் சமூகத்தைச் சார்ந்தவர் என்பது மட்டுமன்றி தலித் பக்க நியாயங்களுக்கு அவர் கொடுத்திருக்கும் அழுத்தங்களும் காரணமாகின்றன. டானியலின் பஞ்சமர் நாவல்கள் ஒரு கால யாழ்ப்பாண சமூகத்தைப் படம்பிடித்துக் காட்டுவன. அவர் சித்திரிக்கின்ற பாத்திரங்கள், பேச்சு வழக்கு என்பன யதார்த்தமாகவுள்ளன. சமூகவியல் பண்பினவாகவுள்ளன.

**கலாநிதி செங்கைஆழியான்**
**க.குணராசா**

ஈழத்து நாவல்களுக்கு வயது வந்து விட்டது என்று 1973 களில் பலலையும் சொல்லவைத்த நாவல் க.அருள் சுப்பிரமணியத்தின் 'அவர்களுக்கு வயது வந்து விட்டது' என்பதாகும். அன்புமணியின் மலர் வெளியீடாக வெளியிடப்பட்டு வீரகேசரி ஸ்தாபனத்தினால் விநியோகிக்கப்பட்டது. பேராசிரியர் கா.சிவத்தம்பியின் விரிவான முன்னுரையைத் தாங்கி வெளிவந்தது. அருள் சுப்பிரமணியத்தின் அக்கரைகள் பச்சையில்லை என்ற நாவல் 'ஆனந்த விகடன்' நாவல் போட்டியில் முதற் பரிசைப் பெற்று ஈழத்துப்படைப் பாளிகளின் ஆற்றலை நிரூபித்தது.

*(தொடரும்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





யாழ். புன்னாலைக்கட்டுவன் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட ச.நவரத்தினராசா மங்கல விளக்கேற்றுவதையும் பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பித்த ஏ.இராஜேந்திரன் வெற்றிபெற்ற மாணவனுக்கு வெற்றிக் கேடயம் வழங்குவதையும் படங்களில் காணலாம்.
*(படங்கள்:-புன்னாலைக்கட்டுவன் செய்தியாளர்)*

# மனித உரிமை மீறல்கள் குறித்து ஆராய இலங்கை வருகிறார் நவநீதம்பிள்ளை



(கொழும்பு)

இலங்கையில் நடைபெற்றதாக கூறப்படும், போர்க் குற்றச்சாட்டுக்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் குறித்து இலங்கைக்கு வந்து நேரில் ஆராய்வதற்கு ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணைக் குழுவின் தலைவர் நவநீதம்பிள்ளையை அனுமதிப்பது என்று இலங்கை அரசு முடிவு செய்துள்ளது.

அதற்கிணங்க விரைவில் அவர் கொழும்பு வரவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இறுதிப் போரின் போது இடம்பெற்றதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள் தொடர்பிலான குற்றச்சாட்டுக்கள் அனைத்துலக விசாரணைக்கு உட்படுத்தப்பட வேண்டும் என்ற கருத்து வலுத்துவரும் நிலையில் இலங்கை அரசு இந்த முடிவுக்கு வந்துள்ளது. நெருக்கடிகளைச் சமாளிக்கும் நோக்குடன் அது இந்த நகர்வை மேற்கொண்டுள்ளதாக அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

போர்க் குற்றங்கள் குறித்து அனைத்துலக விசாரணையை வலியுறுத்துவதற்குப் பதிலாக உள்நாட்டில் இடம்பெற்று வரும் விசாரணைகள் குறித்து ஐ.நா மனித உரிமைகள் சபை அக்கறைசெலுத்த வேண்டும் என்றும் இலங்கை கேட்டுள்ளது.

ஐ.நா மனித உரிமைகள் சபையின் 16 ஆவது கூட்டத் தொடர் சுவிஸ் நாட்டின் தலைநகர் ஜெனீவாவில் நடைபெற்று வருகின்றது. இக்கூட்டத்தில் உரையாற்றிய இலங்கைப் பிரதிநிதி ஷேனுகா செனவிரத்ன, போர்க்குற்றச்சாட்டுக்கள் குறித்தும் கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு விசாரிக்கும் என்று தெரிவித்தார்.

விசாரணை ஆணைக் குழுக்கள் சட்டத்தின் கீழேயே நல்லிணக்க ஆணைக்குழு நியமிக்கப்பட்டுள்ளது என்பதால் போர்க் குற்றச்சாட்டுகள் குறித்தும் அது விசாரிக்கும் அதிகாரத்தைக் கொண்டிருக்கின்றது என்றும் அவர் கூறினார். எனினும், தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கான கால அவகாசத்தை ஐ.நா. மனித உரிமைகள் சபை வழங்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

அதேசமயம் ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவர் நவநீதம்பிள்ளை இலங்கைக்கு விரைவில் செல்ல இருக்கிறார் என்ற தகவலையும் அவர் அங்கு தெரிவித்தார். அவரை இலங்கைக்கு அழைப்பதற்கான நடவடிக்கைகளை அதிகாரிகள் ஆரம்பித்துள்ளனர் என்றும் அவர் கூறினார். (ஸ்ரீ-2)

## செஞ்சிலுவைச்சங்க தொண்டர்கள் கௌரவிப்பு

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க சண்டிலிப்பாய் பிரிவுக்கிளையின் தொண்டர்கள் கௌரவிப்பு விழா நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 10 மணிக்கு இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க சண்டிலிப்பாய் பிரிவு அலுவலகத்தில் பிரிவின் தலைவர் ந. இலங்கேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக சண்டிலிப்பாய் பிரதேச செயலக சமூக சேவை அதிகாரி வே.அருந்தவராஜா , சிறப்பு விருந்தினர்களாக இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். மாவட்டக் கிளையின் செயலாளரும் வடகிழக்கு இணைப்பாளருமான குலசேகரம் பிள்ளை பாலகிருஷ்ணன், அருட்கலாநிதி சவீந்திரா விக்னராஜா, ஓய்வு பெற்ற நீதிமன்றப் பதிவாளர் ம.செல்வரட்ணம் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

இதில் இலங்கை செஞ்சிலுவைச் சங்க சண்டிலிப்பாய்பிரிவில் கடந்த 1988 ஆம் ஆண்டு தொடக்கம் இன்றுவரை சேவையாற்றிய தொண்டர்கள் கௌரவிக்கப்படவுள்ளனர். (ஸ்ரீ-3-134)

## பூரணைவிழா

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் மேற்கு வேதபாராயண சனசமூக நிலையத்தில் பூரணை விழா இன்று சனிக்கிழமை மாலை 4.30 மணிக்கு நடைபெறும்.

இவ்விழாவில் சமயச் சொற்பொழிவும் கலைநிகழ்வுகளும் இடம்பெறும். (ஸ்ரீ-2)

# அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலைகள் 30 சதவீதத்தால் குறைவடையும்

## வர்த்தக அமைச்சு அறிவிப்பு

(கொழும்பு)

சிங்கள- தமிழ் புதுவருட பண்டிகை காலத்தில் அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலைகள் சுமார் 30 சதவீதத்தால் குறைவடையும் என்று வர்த்தக அமைச்சின் செயலாளர் சுனில் எஸ். சிரிவர்த்தன தெரிவித்துள்ளார்.

சீனி, கிழங்கு, வெங்காயம், பருப்பு, கோதுமை மா,கடலை,பயறு, நெத்தலி,ரின்மீன்,அரிசி உள்ளிட்ட உணவு வகைகள் சதொச மற்றும் கூட்டுறவுச் சங்க களஞ்சியசாலைகளில் சேமித்து வைக்கப்பட்டுள்ளதால் எதிர்காலத்தில் அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலைகள் குறைவடையும் என்று அவர் கூறியுள்ளார்.

35 ஆயிரம் மெட்ரிக் தொன் உள்ளூர் கிழங்கு ஊவா, பரணகம , வெலிமடை மற்றும் நுவரெலியா ஆகிய இடங்களில் இருந்து சந்தைக்கு விநியோகிக்கப்பட்டுள்ளன.

வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட கிழங்கும் தற்போது சந்தையில் உள்ளது என்று அவர் மேலும் கூறினார். அதேவேளை 5 ஆயிரம் மெற்றிக் தொன் அரிசியும் சந்தையில் விநியோகிக்கப்பட்டுள்ளது.

இதுமட்டுமன்றி, இறக்குமதியாகும் உணவுப் பொருட்கள் இலங்கைக்கு விரைவில் வந்து சேரவுள்ள நிலையில் உணவுப் பொருட்கள் பலவற்றின் விலைகள் ஏற்கனவே குறைந்துள்ளன. (ஸ்ரீ-2)

## 2011.03 19 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

★ *1279* -யாமென் என்ற இடத்தில் இடம்பெற்ற சமரில் மங்கோலியாவின் வெற்றியுடன் சீனாவில் சோங் அரச பரம்பரை முடிவுக்கு வந்தது.
★ *1861* -நியூசிலாந்தில் முதலாவது தரனாக்கி போர் முடிவுக்கு வந்தது.
★ *1915*- புளூட்டோவின் ஒளிப்படம் முதற் தடவையாக எடுக்கப்பட்டது. ஆனாலும் அது கோளாக கருதப்படவில்லை.
★ *1918*-நேரவலயங்களை ஐக்கிய அமெரிக்க காங்கிரஸ் நிறுவி பகலொளி சேமிப்பு நேரத்தை அங்கீகரித்தது.
★ *1932*- சிட்னி துறைமுகப் பாலம் திறந்து வைக்கப்பட்டது.
★ *1944*- இரண்டாம் உலகப் போர்: நாசி படைகள் ஹங்கேரியைக் கைப்பற்றின.
★ *1945*- இரண்டாம் உலகப் போர்: ஜப்பானில் யூஎஸ்எஸ் பிராங்கிளின் என்ற அமெரிக்க விமானம் தாங்கிக் கப்பல் தாக்கி மூழ்கடிக்கப்பட்டதில் 800 பேர் கொல்லப்பட்டனர்.
★ *1972*- இந்தியாவும் வங்காள தேசமும் நட்புறவு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டன.
★ *1982*-போக்லாந்து போர்: ஆர்ஜெண்டீனியர்கள் தெற்கு ஜோர்ஜியா தீவில் தரையிறங்கினர்.
★ *1988*- இந்திய அரசிடம் நீதி கோரி உண்ணா நோன்புப் போராட்டத்தை அன்னை பூபதி தொடங்கினார். நீதி வழங்காத நிலையில் ஏப்ரல்19 இல் சாவைத் தழுவினார்.
★ *2002*- ஐக்கிய அமெரிக்காவின் ஆப்கானிஸ்தான் மீதான படையெடுப்பு முடிவுக்கு வந்தது.

### பிறப்புக்கள்

★ *1883*-வால்டர் ஹவேர்த், நோபல்பரிசு பெற்ற பிரித்தானியர் (இ.1950)
★ *1900*-பிரெடெரிக் ஜோலியோட் , நோபல் பரிசு பெற்றவர் (இ.1958)
★ *1943*-மரீயோ மொலீனா , நோபல் பரிசு பெற்ற வேதியியலாளர்.

### இறப்புக்கள்


★ *1950*-எட்கார் பரோஸ், அமெரிக்க எழுத்தாளர் (பி.1875)
★ *2008*- ஆர்தர் சி. கிளார்க், அறிவியல் புதின எழுத்தாளர் (பி.1917)
★ *2008*-ரகுவரன், தென்னிந்தியத் திரைப்பட நடிகர் (பி.1948)



**2004 - தாய்வான் பிரதமர் சென் ஷூயி-பியான் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் படுகாயமடைந்தார்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜப்பானின் சோகம்... உலகத்துக்கே பாடம்...



புகுஷிமா நிலநடுக்கத்துக்கு முன்...




புகுஷிமா நிலநடுக்கத்துக்கு பின்...

கடந்த ஒரு வாரகாலமாக ஜப்பான் அடுத்தடுத்து எதிர்கொண்டு வரும் நிலநடுக்கங்கள், சுனாமி, கதிரியக்க அபாயங்கள் என ஜப்பானின் சோகம்... உலகத்துக்கே பாடம்.

ஜப்பானுக்கு நிலநடுக்கங்கள் புதிதல்ல. பூமிக்கு அடியில் யுரேஷியன், பசுபிக், பிலிப்பைன்ஸ் கண்டத்திட்டுகள் சேரும் இடத்தில் அமைந்திருக்கிறது டோக்கியோ. நிலநடுக்கங்கள் அதிகம் ஏற்படும் வாய்ப்பு உள்ள பிரதேசம். உலகிலேயே ஜப்பானில்தான் இதுவரை அதிக அளவு சுனாமி ஏற்பட்டு இருக்கிறது. சராசரியாக ஏழு ஆண்டுகளுக்கு ஒரு முறை சுனாமியை ஜப்பானியர்கள் எதிர்கொள்கிறார்கள்.

ஆனால், அந்தக் கறுப்பு வெள்ளியன்று ஏற்பட்ட நில நடுக்கமும் சுனாமியும், ஜப்பானியர்களைப் பல ஆண்டுகள் பின்னோக்கிப் பார்க்க வைத்திருக்கின்றன. சுமார் ஆயிரத்து 326 வருடங்களுக்கு முன் ஏற்பட்டதாகக் கூறப்படும் 'ஹகுவா மஹா' சுனாமிக் கதைகளையும், ஜப்பானின் மிக மோசமான நிலநடுக்கமான 1923 ஆம் வருடத்திய 'கான்டோ' நிலநடுக்க நினைவுகளையும் ஜப்பானியர்கள் அசை போடத் தொடங்கி இருக்கிறார்கள்.

ஜப்பான் வரலாற்றிலேயே மோசமான பேரழிவை ஏற்படுத்தியது கான்டோ நிலநடுக்கம். அப்போதைய பூகம்பமும் அதைத் தொடர்ந்த சுனாமியும் 1.43 இலட்சம் ஜப்பானியர்களைப் பலி கொண்டது. ஒப்பீட்டளவில் பார்த்தால், அந்த நிலநடுக்கம் ஏற்படுத்திய அதிர்வுகள் 7.9 ரிக்டர் அளவிலானதாம். ஆனால், இப்போதைய நிலநடுக்கம் 8.9 ரிக்டர் அளவு கொண்டது. உயிர்ச் சேதம் குறைவாக இருக்கலாம்... ஆனால், இயற்கைச் சீற்றத்தின் அளவு அதிகம்!



அபார இயற்கை வளங்கள் ஏதும் இல்லாத ஜப்பான், இரண்டாம் உலகப்போரின் மாபெரும் வீழ்ச்சிக்குப் பின் உலகின் பெரிய பொருளாதார வல்லரசுகளில் ஒன்றாக உயரக்காரணமே, அந்த நாட்டின் தொழில்துறை வளம்தான். அதன் உயிர்நாடி... மின்சாரம். ஆனால், நாட்டின் பெரும்பகுதி எரிசக்தித் தேவைக்கு இறக்குமதி பெற்றோலியப் பொருட்களையே ஜப்பான் நம்பி இருக்க வேண்டி இருந்தது. அனல் மின் நிலையங்களோ, புனல் மின் நிலையங்களோ அமைக்க போதிய வளங்கள் இல்லாத நிலையில், எந்த சக்தி தங்கள் நாட்டை அழித்ததோ... அந்த சக்தியையே ஆக்க சக்தியாகப் பயன்படுத்தினார்கள் ஜப்பானியர்கள். உலகின் மூன்றாவது பெரிய அணுசக்திப் பயனீட்டாளராக ஜப்பான் உருவெடுத்தது இப்படித்தான்!

ஏறத்தாழ 53 அணு மின் நிலையங்கள் ஜப்பானில் இருக்கின்றன. உலகையே உலுக்கிய செர்னோபில் அணு உலை விபத்தோ, த்ரீ மைல் தீவு அணு உலை விபத்தோ, ஜப்பானின் அணுசக்திக் கொள்கையில் எந்த மாற்றத்தையும் உருவாக்கவில்லை. அதே சமயம், நிலநடுக்க அபாயப் பகுதிக்குள் இருப்பதால், வேறு எந்த நாட்டையும் விடக்கூடுதல் பாதுகாப்பு ஏற்பாடுகளுடன் உருவாக்கப்பட்டவை ஜப்பானிய அணு உலைகள். இந்தச் சூழலில், தொழில் துறை சார்ந்த முன்னேறிய நாடு என்ற அந்தஸ்தினை எட்ட, அணுசக்தி எரிபொருள்தான் சரியான தீர்வு என்பதற்கு முன்னுதாரணமாக இருந்த ஜப்பானின் புகுஷிமா அணு உலை பற்றி எரிவது, உலகையே அச்சத்தில் ஆழ்த்தி இருக்கிறது. புகுஷிமா அணு உலைக்கு நேர்ந்திருக்கும் நிலை, இத்தனை நாட்கள் அணு சக்திக்கு ஆதரவாகப் பேசிக்கொண்டு இருந்தவர்கள் முகத்தில் கரியைப் பூசியுள்ளது. இதுவரை அணு உலைகள் அமைக்கப்பட்டுள்ள ஒவ்வொரு நாட்டின் வயிற்றிலும் புளியைக் கரைத்து உள்ளது!

# கச்சதீவு திருவிழா நாளை ஆரம்பம்

## பயண ஏற்பாடுகள் துரிதம்

கச்சதீவு புனித அந்தோனியார் ஆலயத் திருவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

இத்திருவிழாவில் பங்குபற்றுவதற்காக யாத்திரிகர்கள் இன்றும் நாளையும் காலை 4 மணியிலிருந்து மாலை 6 மணி வரை கச்சதீவுக்கான பயணத்தை மேற்கொள்ள முடியும் என யாழ். அரச அதிபர் அறிவித்துள்ளார். அத்துடன் இன்று சனிக்கிழமை இரவு கச்சதீவில் தங்கியிருந்து திருவிழாவில் பங்குபற்ற முடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் யாத்திரிகர்கள் பயணம் மேற்கொள்வதற்காக குருநகர், குறிகட்டுவான், நெடுந்தீவு, மண்கும்பான் ஆகிய துறைகள் ஊடாக படகுகள் செல்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

கச்சதீவில் யாத்திரிகர்களுக்கான உணவு கொள்முதலுக்காக ப.நோ.கூ. சங்கங்களின் உணவு கொள்முதல் மையங்கள் அமைக்கப்படவுள்ளன. அத்தோடு குடிநீர், மலசலகூட வசதிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இந்திய யாத்திரிகர்களின் தேவைகருதி பணப்பரிமாற்றலுக்காக இலங்கை வங்கியின் கிளையொன்றும் கச்சதீவில் இயங்கவுள்ளது.

அத்தோடு அவசர தேவைகருதி பயன்படுத்துவதற்காக கியூமெடிகா நிறுவனத்தின் அம்புலன்ஸ் படகு சேவையும் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. மேலும் யாத்திரிகர்கள் பொலித்தின் மற்றும் பிளாஸ்ரிக் பொருட்களை தம்முடன் எடுத்து வருதல் தவிர்க்கப்படவேண்டுமெனவும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

இவ் விழாவிற்கான ஏற்பாட்டினை கச்சதீவு பங்குத்தந்தை அருட்திரு. ஏ.அமல்ராஜ், மாவட்ட செயலகம் மற்றும் நெடுந்தீவு உ.அ. அதிபர் அலுவலகம், வேலணை பிர தேச செயலக அதிகாரிகள், கடற்படையினர், இராணுவத்தினர், பொலிஸ் பிரிவினர் ஆகியோர் இணைந்து மேற்கொண்டுள்ளனர். (ஸ்ரீ-3)

## 5 ஆவது வருடாந்த பொதுச்சபைக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வலி. தெற்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலக ஓய்வூதியர்களின் 5 ஆவது வருடாந்த பொதுச் சபைக் கூட்டம் எதிர்வரும் 25 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலக கேட்போர் கூட மண்டபத்தில் வை.செகராசசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் புதிய நிர்வாகிகள் தெரிவு செய்யப்படவுள்ளதால் சண்டிலிப்பாய் பிரதேச சகல ஓய்வூதியர்களையும் கலந்து கொள்ளுமாறு செயலாளர் கேட்டுள்ளார்.

(ஸ்ரீ-2)





ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாலயத்தில் கணனி அறை திறப்புவிழா அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்துவரப்படுவதையும் வடமாகாண கல்விப் பணிப்பாளர் பா.விக்னேஸ்வரன் கணனி அறைய நாடாவெட்டி திறந்து வைப்பதனையும் படங்களில் காணலாம். (படங்கள்: என்.குமார்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சி, கரைச்சி புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலய ஆண்டு உற்சவ பங்குனி உத்தரப் பொங்கல் விழா சிறப்புமலர் 19.03.2011

## ஆலய வரலாறு

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைப் பொன்னம் பலவன் ஞானகுரு வாணிபதம் நாடு.

புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலயத்தின் வரலாறு பழைமையானது, புதுமையானது, புனிதமானது. இற்றைக்கு கிட்டத்தட்ட 400 வருடங்களுக்கு முற்பட்ட காலத்தில் கரைச்சிப் பிரதேசத்தில் உள்ள புளியம்பொக் கணை கிராமத்தில் கொளுந்துப் புலவு என்ற சிற்றூரில் தான் இந்த அற்புதம் நடந்தது. இக்கிராமத்தில் உள் ளவர்கள் அனைவரும் மிகுந்த இறைபக்தியுடையவர்கள். சமய விதி முறைகள் தவறாது ஒழுகி நிற்பவர்கள்.

இவர்கள் வன்னிய வேளாளர்கள் அனைவருக்கும் முதல்வனாகி முதலியார் பட்டம்பெற்ற நீதிநாயக முதலி யார் என்பவர் வாழ்ந்து வந்தார். இவருக்கு அளவற்ற நெற் காணிகள் உட்பட சொல்லப்படுகின்ற பதினாறு செல் வங்களும் குவிந்து கிடந்தன. இவருக்கு கமலம் என்னும் பெயருடைய அழகான நற்பண்புகளையுடைய மனைவி யும் இருந்தாள். எவ்வளவு செல்வச் சிறப்போடு வாழ்ந்தா லும் அவர்களுக்கு பிள்ளைச் செல்வம் இல்லாதது பெரும் துன்பமாகவே இருந்தது.

இதனால் இவர்கள் தாங்கமுடியாத கவலையில் சிவபிரானிடம் தங்கள் கவலையை எடுத்துக் கூறி பற்பல விரதங்கள் அனுட்டித்து தரும தானங்கள் செய்து இடையறாது இறைவனை வணங்கி வந்தனர். கடவுளை நம்பினோர் கைவிடப்படார் என்பதற்கமைய கமலம் அம்மையார் கர்ப்பமுற்றார். இதன் பயனாக ஆண் குழந்தையொன்றைப் பெற்றெடுத்தனர். பிள்ளைக்கு சந்ததிப் பெயராக மாப்பாணமுதலியார் என்று பெயரிட்டு மகிழ்ந்து இன்புற்றிருந்தனர். இரண்டாவதாகவும் ஆண் மகன் பிறந்திட அவனுக்கு வவுனிய முதலியார் எனப் பெயர் சூட்டி தங்கள் இரு கண்கள் போல இரு புதல்வரை யும் திருவருள் பெற்று வளர்த்து வந்தனர்.

இக்காலத்தில் பெண் பிள்ளை இல்லையே என்று கவலை கொண்டிருந்த வேளை கர்ப்பமுற்றிருந்த கமலம் அம்மையார் சிவபெருமான் திருவருளால் பங்குனி மாதத்தில் உத்தர நட்சத்திரமும் பூரணையும் கூடிய சுப தினத்தில் ஓர் பெண் பிள்ளையுடன் பாம்பு ஒன்றையும் பெற்றெடுத்தார். உற்றார், உறவினர், ஊரவர் எல்லோரும் பலவாறு பேசிக் கொண்டாலும் சர்ப்ப குழந்தையையும் பிள்ளையாகவே வளர்த்து வந்தனர் பெற்றோர். பாம்பு வளர்ந்து தனது சகோதரர்களுடனும் பெற்றோருடனும் சேர்ந்து உறவாடி வந்தது. பெண் குழந்தைக்கு வள்ளி நாச் சன் என்றும் பாம்புக்கு தம்பிரான் என்றும் பெயர் இட்டனர்.

தந்தையார் நீதிநாயக முதலியார் தனது முதுமை நிலையை உணர்ந்து தனது அளவற்ற சொத்துக்களை பிள்ளைகள் மூவருக்கும் சம பங்காக பிரித்து சாதனம் எழுதி வைத்தார். இதனால் கோபம் கொண்ட பாம்பு



படத்தை விரித்து சீறித் தனது கோபத்தை வெளிப்படுத்தி உறுதிப் பத்திரம், எழுத்தாணி என்பவற்றை தன் வாயால் கொத்தி சிதறியது.

தனக்கும் பங்கு வேண்டும் என்பதை குறிப்பால் காட்டிட உணர்ந்த பெற்றோர் பாம்புக் குழந்தைக்கும் பங்கு காட்டி எழுதினர். அப்போது தம்பிரான் என்ற பாம்பு தனது பங் கையும் சகோதரி வள்ளி நாச்சன் பங்குடன் சேர்த்துவிட்டது. இதன்பின்பு பிள்ளைகள் மூவரும் மணம் முடித்து தனிக் குடித்தனம் நடத்திட பாம்பு பெற்றோருடன் வாழ்ந்து வந்தது. தானும் திருமணம் செய்தது போல மற்றைய பாம்புகளை யும் கூட்டி வந்து வீட்டில் தங்கி வந்தது.

ஒரு நாள் தாய் கமலம்மை முற்றம் கூட்டிக் கொண்டிருந்த வேளை பாம்பான தம்பிரான் விளக்குமாற்றில் ஏறியும் தாய் மீது ஏறியும் தொந்தரவு செய்தவேளை தாய் விளக்குமாறினால் தட்டினார். கோபம் கொண்ட பாம்பு தாயென நினைத்து கோப த்தை அடக்கி அந்தக் கணமே வீட்டை விட்டு போய்விட்டது.

பாம்பைக் காணாது தேடி அலைந்து நீதிநாயக முதலியாரும் கமலம் அம்மையாரும் மிகவும் கவலையுடன் இருந்தனர். நித்திரையில் கனவாகப் பட்டது. பாம்பு அரைந்து சென்ற பாதையும் அது சென்ற இடமும் அதன் படி சென்று பாம்பைக் கண்டு சகல வரிசை வாத்தியங்களுடன் அழைத்து வந்து கனவில் பட்ட அரச மரத்தின் கீழ் கோயில் அமைத்து வழிபாடாற்றிவந்துனர். அதன்பின்பு வருடந்தோறும் வரும் பங்குனி உத்தரத்தில் பெரும் பொங்கல் செய்து வழிபட்டு வருகின்றனர். நீதிநாயக முதலியார் மரபில் வந்தோர் பொங்கலுக்கு 8 நாட்கள் முன்பாக விளக்கு வைக்கின்ற வைபவம் நடந்து பண்ட வண்டியில் சென்று எம்பெருமா னின் மெய்யடியார்களின் நேர்த்திப் பொருட்களை ஏற்றி வந்து பொங்கல் செய்வது வழமையாகியது.

இதன்படி ஒரு முறை மீசாலை புத்தூர் சந்தியில் உள்ள பண்ட மரபடியில் இருந்து பண்ட வண்டிகள் புறப்பட்டு வந்து மடுக்கரை என்ற இடத்தில் தங்கி நின்று பூசைக் கான ஏற்பாடுகள் நடந்து கொண்டிருந்த வேளை ஒல்லாந்தர் இலங்கை நாட்டை ஆட்சி செய்த காலம் குதிரை மீது ஒல்லாந்த அதிகாரிகள் நாட்டைச் சுற்றி வருகின்ற போது இவர்களை கண்டுவிட்டனர். உடனே அவர்களை அழைத்து பயமூட்டி இந்த நாட்டில் கிறிஸ்தவ சமயத்தில் எல்லோரும் சேர வேண்டும். இப்படியான பேய் பிசாசுகள் என்ற தெய்வங்களை வைத்து வணங்கக் கூடாது. மீறி னால் சுட்டுக் கொன்றிடுவோம் என்று மிரட்டி உங்கள் தெய்வம் உண்மையானால் இப்பவே காட்டுங்கள் என்று பூசகரை கேட்டிட, பூசகர் இறைவா இது என்ன சோதனை? உன் திருவருளைக் காட்டு என்று வணங்கி அருகில் இருந்த நீர் நிலையில் நீராடி அனுட்டானங்கள் செய்து பூசைப் பொருட்களை வைத்து புதிய பானையொன்றிற்குள் எல்லோரும் காணும் பொருட்டு வெள்ளைத் துணியை முறுக்கி வைத்து இறைவனை வணங்கி நின்றார். எல்லோரது கண்களும் கூசும் படியாக வனத்தில் இருந்து 5 தலை நாகபாம்பு வெளிப்பட்டது. இதைக் கண்ட ஒல் லாந்தர் பயந்து தங்கள் தவறுக்கு மனம்வருந்தி வழிச் செல்ல அனுமதி கொடுத்துச் சென்றனர். பின்பு பொங்கல் தினத்தன்று தாங்கள் கண்டது போல வெளியால் பாம்புப் படம் செய்தும் கட்டட வேளை செய்தவதற்கும் பணமும் கொடுத்து சென்றார்கள் என்பது வரலாற்றில் அறிந்தவை.

இவ்வாறு இப்பவும் நடந்து வருகின்றது. அரசம் பொந்தில் பால் பழம் வைப்பதும் பாம்புத் தெய்வம் அருந்திச் செல்வதும் பல அடியவர்களின் கண்களுக்கு தெரிகின்ற உண்மை.

நாகதம்பிரானே! நாகராசவே என்று உச்சரித்த படி திரிகின்ற மெய்யடியார்களுக்கு என்றும் தன் திருவருளை கொடுத்தருளுவார்.

நன்நெறி யுலவும் நீதி நாயக முதலியாரின் பன்னி யின் கர்ப்பம் தன்னித் பாம்பரு வாகத் தோன்றி

பின்னை மிர் அன்பர் போற்றப் புளியம் பொக்கணையில் வைகி தன்னருள் புரியும் நாகதம்பிரான் தாளில் தாழ்வாம்.

நாகதம்பிரான் நல்லருள்
நாடெங்கும் பாலிக்குக.


சேரமான் அரிசி ஆலை
இல.365, ஸ்கந்தபுரம், கிளிநொச்சி.
10 Kg, 50 Kg பைக்கற்றுக்கள் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

பொன்னம்பலம் பல்வகை வாணிபம்
உள்ளூர் உற்பத்தி பொருட்கள் கொள்வனவு விற்பனையும் பல்வகை பொருட்களை மொத்த மாகவும் சில்லறையாகவும் பெற் றுக்கொள்ளலாம்.
ஏ-9வீதி, கரடிப்போக்கு, கிளிநொச்சி. 021 3208029

சிவனருட் செல்வன் அரிசி ஆலை
உருத்திரபுரம் றோட், கரடிப்போக்கு, கிளிநொச்சி.
அரிசி வகை அனைத்தையும் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

இன்சுரபி குளிரகமும் உணவகமும்
பழைய வைத்தியசாலை முன்பாக ஏ-9 சாலை, கிளிநொச்சி
குறைந்த கட்டணத்தில் காலை, மதியம், இரவு உணவுகளையும் குளிர்பானங்களை அருந்திடவும் நீங்கள் நாடவேண்டிய இடம்.

கல்பனா சைவ உணவகம்
கந்தசாமி கோவில் முன்பாக ஏ-9 வீதி, கிளிநொச்சி.


கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில்
நீல்கமால் தளபாடங்களுக்கான
ஏக விநியோகஸ்தர்கள்
எஸ்.வி.ஆர்.ட்ரேடர்ஸ்
துணை நிறுவனங்கள்:
எஸ்.வி.ஆர். என்ரபிறைஸ், சட்டவள நிலையம்
கண்டி வீதி, கிளிநொச்சி. தொ.பே: 021 228 5566

புத்தம் புதிய டிசைன்களில் ஆண், பெண் இருபாலாருக்குமான ஆடைகளை பெற்றுக்கொள்ள
கேசவன் சில்க்
மந்திகை, புலோலி தெற்கு, புலோலி.
கிளை சந்தை உட்புறம் நெல்லியடி.

அனைத்து வகையான புடைவைகள், அழகு சாதனப் பொருட்கள், பாடசாலை உபகரணங்கள் மற்றும் அனைத்து பத்திரிகைகளையும் பெற்றுக்கொள்ள
ஜெயச்சந்திரன் ரெக்ஸ்
சில்வா வீதி சந்தி, வட்டக்கச்சி.

கவிதீபன் அரைக்கும் ஆலை
257, சில்வா வீதி, வட்டக்கச்சி.
உரிமையாளர்: பொ.வேணுகோபால்

செல்லப்பிள்ளையார் அக்ரோ சென்ரர் ஹாட்வெயர்ஸ்
புளியம்பொக்கணை சந்தி, புளியம்பொக்கணை.
➤ விவசாய மருந்துகள்(கிருமிநாசினி) /உள்ளீடுகள்
➤ எரிபொருள் வகைகள்
➤ கட்டிடப் பொருட்கள்
➤ சைக்கிள்/ மோட்டார் சைக்கிள் உதிரிப் பாகங்கள்
➤ இரும்புப் பொருட்கள்
➤ வாட்டர்ப்பம் உதிரிப்பாகங்கள்
சகலவிதமான பொருட்களையும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

விவசாய உள்ளீடுகள், உபகர ணங்கள் நியாய விலைக்குப் பெற்றுக்கொள்ள நாடவேண் டிய இடம்.
வேலும் மயிலும் களஞ்சியம்
கண்டி றோட், கிளிநொச்சி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 11 ஆவது வீரர்களின் கிரிக்கெட் போர் ஸ்கந்தா மைதானத்தில் இன்று ஆரம்பம்

வீரர்களின் போர் (Battle of the Hero's) என வர்ணிக்கப்படும் சுன்னாகம் ஸ்கந்தவ ரோதயக் கல்லூரிக்கும் தெல்லிப் பழை மகாஜனாக்கல்லூரிக்கும் இடையிலான இரண்டு நாள் இன்னிங்ஸ் கிரிக்கெட் போட்டி இன்று ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகின்றது.

2001 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இவ்விரு கல்லூரிகளுக்கும் இடையிலான கிரிக்கெட் சமர் இம்முறை 11 ஆவது வருடமாக நடைபெறுகிறது.

இதுவரை நடைபெற்ற போட்டிகளில் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி 3 வெற்றிகளையும் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி ஒரு வெற்றியையும் பதிவு செய்துள்ளதுடன் 6 ஆட்டங்கள் வெற்றி தோல்வியின்றி முடிபடைந்துள்ளன.

இந்நிலையில் இன்று ஆரம்பமாகும் 11 ஆவது போட்டியில் வெற்றி பெறுவதற்கு இரு அணிகளும் தயாராகவுள்ளன.

இதில் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணிக்கு அனுபவ வீரர் கே.புருஷோத்மன் தலைமை வகிக்கிறார்.

கே.எஸ்.ஜசிகரன், ஆர்.தஜீகனின் இணைப் பயிற்றுவிப்பில் களமிறங்கும் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணியில் எஸ். சஞ்சயன், எல். குமுதன், ரி.நிறோசன், கே.றொபேட் நிஷான் என முன்னணி வீரர்களும் சகல துறையான ஆட்டத்தில் ஜொலிப்பவர்களும் உள்ளனர்.

இதில் தெல்லிப்பழை மகாஜனாக்கல்லூரி அணிக்கு மூத்தவீரர் எஸ். கோகிலன் தலைமை வகிக்கிறார்.


அத்துடன் எஸ்.சிறிதரன்-எம்.கஜதீபன் கூட்டணியின் பயிற்றுவிப்பில் களமிறங்கும் மகாஜனாக்கல்லூரி அணிக்கு அனுபவ வீரர் கே.கபிலன், எஸ்.மதுராங்கன், ஜே.பிரணவன், த.கஜேந்திரன், பா.சஞ்சேயன், சி.அனுராஜ் உள்ளிட்ட சகல துறை வீரர்கள் இருப்பது பலம்.

சமபலத்துடன் படை எடுக்கும் இரு அணிகளும் வெற்றிக்கு போராடுவார்கள் என்பதால் ஆட்டம் விறுவிறுப்பாக அமையும்.

இதேவேளை இன்று காலை 9 மணிக்கு ஆரம்பமாகும் இப்போட்டியில் வலிகாமம் வலயக்கல்விப் பணிப்பாளர் ஆர்.இராஜேந்திரன் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

*- மாவை நா.கஜேந்திரன்*

## சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி



இருப்பவர்கள் (இ-வ)

கே.எஸ்.ஜசிதரன் (பயிற்றுநர்), எம்.சிவானந்தன் (பொறுப்பாசிரியர்), ரி.சிவகுமார் (விளையாட்டுத்துறைப் பொறுப்பாசிரியர்), எஸ்.சஞ்சயன் ( உபதலைவர்), ஆறு.திருமுருகன் (கல்லூரி அதிபர்), கே.புருஷோத்மன் (அணித்தலைவர்), செல்வி. ரி.சங்கரப்பிள்ளை (பிரதி அதிபர்), என்.பவன் (உப அதிபர்), ஆர். தஜீகன் (உதவிப் பயிற்றுநர்)

நிற்பவர்கள் (இ-வ)

எல்.குமுதன், வி.லக்ஷன், ரி.நிறோஜன், கே.றொபேட்நிஷான், எஸ்.கோபிகாந், வி.ஜீவிசன், ரி.தாரணன், ரி.சிந்துஜன், கே.துவாரகன், கே.துமிசன்.

## தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி,



இருப்பவர்கள்:

சு.சயந்தன் (பிரதி அதிபர்), சி.சிறிதரன் (பயிற்றுநர்), ச.கோகிலன் (அணித்தலைவர்), திருமதி சி.அனந்தசயனன் (அதிபர்), க.கபிலன் (அணி உபதலைவர்), ம.கஜதீபன் (உதவிப் பயிற்றுநர்), க.மயில்வாகனம் (விளையாட்டுத்துறைத் தலைவர், அணிப் பொறுப்பாசிரியர்)


நிற்பவர்கள் 1ஆம் வரிசை இ- வ

ச.மதுராங்கன், ஜெ.பிரணவன், த.கஜேந்திரன், பா.சஞ்சேயன், சி.அனுராஜ்,

2ஆம் வரிசை: இ-வ: கி.திலக்சன், ஜெ.ஜெனந்தன், இ.மதுசன், கு.மோசிகீரன், கு.வைகுந்தன், சி.டிலக்சன், சூ.அஜித், த.டிலோசன்.

# யாழ். மண்ணில் புதுப்பொலிவுடன் ஒருநாள் கிரிக்கெட் போட்டி

## யாழ். சென்.ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் இன்று



யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்கும் சென்.ஜோன்ஸ் கல்லூரிக்குமிடையிலான 50 ஓவர்கள் மட்டுப்படுத்தப்பட்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டி இன்று சென். ஜோன்ஸ். கல்லூரி மைதானத்தில் புதுப்பொலிவுடன் நடைபெறவுள்ளது.

மேற்படி போட்டியில் யாழ். மாவட்டக் கிரிக்கெட் வரலாற்றில் முதன் முறையாக வெள்ளைப்பந்து பயன்படுத்தப்படவுள்ளது. வீரர்கள் தமது அணி சார்பான கலர் ஆடையும் பயன்படுத்தப்படவுள்ளது.

வழமையாக யாழ்.மாவட்டத்தில் நடத்தப்படும் கிரிக்கெட் போட்டிகள் சிவப்பு நிற பந்திலேயே நடத்தப்பட்டு வந்திருக்கின்றன.

சென். ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் இன்று நடைபெறும் மேற்படி போட்டியில் சைட் ஸ்கிறீனும் பயன்படுத்தப்படவுள்ளது. யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்கும் சென். ஜோன்ஸ் கல்லூரிக்கு மிடையிலான 50 ஓவர்கள் போட்டி இன்று 9 ஆவது போட்டியாக நடை பெறவுள்ளது. இதுவரையில் நடை பெற்ற போட்டிகளில் ஒவ்வொரு அணியும் தலா 4 போட்டிகளில் வெற்றி பெற்றுள்ளன.

# உள்ளூராட்சித் தேர்தலில் சட்டமீறல் சம்பவங்கள்

## ஜே.வி. பி.தெரிவிப்பு

(கொழும்பு)

நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் சட்ட மீறல்கள் இடம்பெற்றுள்ளதாக ஜே.வி.பி. அறிவித்துள்ளது. அநேகமான பிரதேசங்களில் ஆளும் கட்சி உறுப் பினர்கள் சட்ட மீறல்களில் ஈடுபட்டதாக ஜே.வி.பி. கட்சியின் பொதுச் செயலாளர் தெரிவித்துள்ளார் .

ஆளும் கட்சி உறுப்பினர்கள் வாக்குச் சாவடிகளுக்கு அருகாமையிலே பிரசாரங்களை மேற்கொண்டதாகவும் திஸ்ஸமஹாராம போன்ற பிரதேசங்களில் வாக்காளர்கள் அச்சுறுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார் .

இந்தத் தேர்தலை சுதந்திரமானதும் நியாயமானதுமான முறையில் நடைபெற்றதாக ஏற்றுக்கொள்ள முடியாது என அவர் குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ)

# உள்ளூராட்சித் தேர்தல் சுயாதீனமான முறையில் நடைபெறவில்லை

## கண்காணிப்புக்குழு தெரிவிப்பு

சுயாதீனமான முறையில் தேர்தல் நடைபெறவில்லை என தேர்தல் கண்காணிப்புக் குழுவொன்று அறிவித்துள்ளது.

நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தல் சுயாதீனமானதும், நியாயமானதுமான முறையில் நடைபெறவில்லை என மனித உரிமைகளுக்கான புத்திஜீவிகள் அமைப்பின் தேர்தல் கண்காணிப்பு வலையமைப்பு குற்றம் சுமத்தியுள்ளது.

தேர்தல் முடிவுகளுக்கு நேரடியாக தாக்கம் செலுத்தாத போதிலும் , தேர்தல் நடைபெற்ற நேற்று முன்தினத்திலும் வன்முறைச் சம்ப வங்கள் தொடர்பில் 117 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றதாகக் குறிப்பிடப்பட்கிறது.

ஒட்டுமொத்தமாக தேர்தல்கள் மிகவும் சுயாதீனமாக நடைபெற்றது என்பதனை உறுதிப்படுத்த முடியாது என அவ் அமைப்பு சுட்டிக் காட்டியுள்ளது. (ஸ்ரீ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களவினால் ஆன ஆக்கம் அளவிறந்து
ஆவது போலக் கெடும்.
-திருக்குறள்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# அதிகரித்துப் போயுள்ள சில்லறைக் களவுகள்

யுத்தத்திற்குப் பின்னர் இனந்தெரியாத விடயங்களும், கொள்ளை, களவு என்பனவும் அச்சம் தரும் காரணிகளில் முதன்மையான இடத்தைப் பெற்றிருந்தன.

எனினும், படையினரின் வீதிச் சோதனையை அடுத்து கொள்ளை, களவு என்பன கணிசமான அளவு குறைவடைந்துள்ளது என்பதை கூறித்தான் ஆகவேண்டும்.

வீதிச் சோதனை நடவடிக்கையின் போது கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபட்டவர்கள் எவரேனும் கைது செய்யப்பட்டார்களா? இல்லையா என்பது அறியப்படாமல் இருந்தாலும், கொள்ளைச் சம்பவங்களின் தாக்கம் குறைவடைந்தமை ஆறுதல் தரும் விடயம் என்றிருக்கையில், சில்லறைக் களவுகளின் அதிகரிப்பை நினைக்கும் போது எமக்கு நிம்மதியான வாழ்வு கடினமானதெனும் சிந்தனையே துலங்குகிறது.

ஆம், இப்போதெல்லாம் சில்லறைக் களவுகள் தாராளமாக அதிகரித்துவிட்டன.

பொது இடங்களில் துவிச்சக்கர வண்டிகளின் பூட்டுக்களை உடைத்து சைக்கிள்களைத் திருடுவது, ஹெல்மெட்டைக் களவாடுவது, வீதியால் செல்லும் பெண்களின் தங்கநகைகளை அறுத்தெடுப்பது, அவர்களை தள்ளிவிழுத்தி, காயப்படுத்துவது எனப் பெரும் அநியாயம் பரவலாக நடந்தேறுகின்றன.

இத்தகைய களவுகளில் ஈடுபடுபவர்கள் யார்? என்றகேள்விஎழுந்துள்ளநிலையில், அவைபற்றிய தேடல்கள் எதுவுமின்றி மௌன மாகிப் போகும் நிலைமையே இங்கு நிலவுகின்றது.

பொருளைக் களவு கொடுத்தாலும் பரவாயில்லை, வீண்சோலி நமக்க வேண்டாம் என்ற பயநிலை தமிழ் மக்களின் மனங்களில் நிலைபேறடைந்துவிட்டன.

இதனால் சில்லறைக் களவுகள் வேகமாக அதிகரித்து வருகின்றன.

இதுதொடர்பில் உரியபுலனாய்வுகள் மேற்கொள்ளப்படாவிட்டால், கௌரவமான தோற்றத்தில்- பெறுமதியான மோட்டார் சைக்கிள்களில் வருகின்றவர்களில் சிலர் செய்கின்ற களவுகள் வெளிப்படாமல் போக, யாழ்.குடாநாட்டின் எதிர்காலம் மிகப் பயங்கரமானதாக மாறுமென்பது நிறுத்திட்டமான உண்மை.

அதேநேரம் சில மாணவர்கள் கூட, சந்தர்ப்ப வசமான களவைச் செய்யும் நிலைமை உள்ளதாகப் பலரும் குறைபட்டுக் கொள்கின்றனர்.

எனவே இளம் சமூகம் பிறழ்வு நிலைக்கு தள்ளப்படாமல் இருப்பதை உறுதி செய்வதற்கு ஏற்ற வழிவகைகளை அமுல்படுத்துவது, தமிழ் இனத்தின் எதிர்கால ஆரோக்கியத்திற்கு அத்தியாவசியமாகும்.

# பிரணாப் நிதி அமைச்சரானதை அமெரிக்கா விரும்பவில்லை

## விக்கிலீக்ஸ் தகவல்



(புதுடில்லி)

காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்கு கூட்டணி 2 ஆவது முறையாக பதவியேற்கும் போது நிதி அமைச் சராக பிரணாப் முகர்ஜி நியமிக்கப்பட்டமை அமெரிக்காவுக்கு சில எரிச்சல்களை ஏற்படுத்தியது தெரிய வந்துள்ளது.

விக்கிலீக்ஸ் இணையத்தளம் வெளியிட்ட தகவலில் இது தெரிவிக்கப்பட்டுள்ளது. பிரணாப் நிதி அமைச்சராக நியமிக்கப்பட்டதும் அவரது பின்னணி மற்றும் அவர் எதற்கு முக்கியத்துவம் கொடுப்பார் என்பதையும் முழுமையாகக் கண்டறியுமாறு அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் ஹிலாரி கிளின்டன் கேட்டுள்ளார்.

முகர்ஜி நிதி அமைச்சரானால் நல்லது என எந்த தொழில் அமைப்பு அல்லது வர்த்தக நிறுவனம் விரும்பியது. அவரது கொள்கைகள் உதவி செய்யலாம் என யார் விரும்பியது. வரவிருக்கும் பட்ஜெட்டில் முகர்ஜியின் முன்னுரிமைகள் என்னென்ன? என டில்லியில் உள்ள அமெரிக்க தூதரகத்துக்கு செப்டெம்பர் 2009 இல் அனுப்பிய ஆவணத்தில் ஹிலாரி கேட்டுள்ளார்.

சிதம்பரமோ அலுவாலியாவோ அல்லாமல் பிரணாப் எதற்காக நிதி அமைச்சர் பதவிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டார் என்பதையும் ஹிலாரி அறிய விரும்பியுள்ளார்.

சிதம்பரமோ அலுவாலியாவோ இந்தியாவின் நிதியமைச்சராக இருந்தால் அமெரிக்காவுக்கு மிகவும் வசதியாக இருக்கும் என ஹிலாரி அனுப்பிய ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் முகர்ஜியின் பொருளாதார செயற்றிட்டத்தையும் பிரதமர் மன்மோகன் சிங்கின் பொருளாதார மறுசீரமைப்பு செயற்றிட்டம் குறித்து முகர்ஜியின் கருத்தையும் கண்டறியுமாறு அமெரிக்க தூதரகத்தை ஹிலாரி கேட்டுள்ளது விக்கிலீக்ஸ் வெளியிட்ட அமெரிக்க தூதரக ஆவணத்தின் மூலம் தெரியவந்துள்ளது. (ஶ்ரீ-2)

# அதிபர்களுக்கான கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளில் பாடசாலைத் தோட்டங்களை ஊக்குவித்தல் மற்றும் 500 மில்லியன் மரக்கன்றுகளை நடும் தேசிய வேலைத் திட்டத்தின் முன்னேற்றம் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 10 மணிக்கு யா/கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெறும்.

எனவே யாழ். வலயத்திலுள்ள சகல பாடசாலை அதிபர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு யாழ் . வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ. வேதநாயகம் அறிவித்துள்ளார். (ஶ்ரீ-2)

# ஜப்பான் பொருட்களா? அலறுகிறது சவுதி அரேபியா

(டுபாய்)

ஜப்பானில் அணு உலைகள் வெடித்து அவற்றில் இருந்து கதிர்வீச்சு பரவுவதால் அங்கிருந்து இறக்குமதி செய்யப்படும் நுகர்வோர் பொருட்களை முழுமையாக சோதனையிடும்படி சவுதி அரேபிய அரசு தனது துறைமுக அதிகாரிக்கு உத்தரவிட்டுள் ளது.

ஜப்பானில் ஏற்பட்ட நிலநடுக்கம் மற்றும் சுனாமி ஆகியவை காரணமாக அங்குள்ள அணு உலைகள் வெடித்து பெரும் விபரீதம் ஏற்பட்டுள்ளது. விபத்து ஏற்பட்ட அணு உலைகளில் இருந்து கசியும் கதிர்வீச்சு வேகமாக காற்றில் பரவி வருகிறது.

இந்தக் கதிர்வீச்சால் மிகப் பெரிய சுகா தாரக்கேடு ஏற்படும் என்ப தால் சர்வதேச நாடுகள் கவலையில் ஆழ்ந்துள்ளன.

இந்நிலையில் ஜப்பானில் இருந்து இறக் குமதி செய்யப்படும் நுகர்வோர் பொருட்கள் அனைத்தையும் ஆய்வகத்தில் முழுமையாக சோதனையிடும்படி அந்தப் பொருட்க ளில் அணு கதிர்வீச்சின் பாதிப்பு உள்ளதா என கண்டறியும்படி தனது நாட்டில் உள்ள துறைமுக அதிகாரிகளக்கு சவுதி அரேபிய அரசு உத்தரவிட்டுள்ளது.

இது தொடர்பாக வர்த்தக சங்கத்துக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. சோதனை செய்யப்படாத பொருட்களை சவுதி அரேபியாவுக்குள் அனுமதிக்க வேண்டாம் என்றும் அதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. (ஶ்ரீ-2)

# சுவாமி விவேகானந்தரின் அறிவுரைகள்



விழிமின், எழுமின் குறிக்கோளை அடையும்வரை நில்லாது உழைமின். கடவுள் இருந்தால் அவனை நாம் காண வேண்டும். ஆத்மா இருந்தால் அதனை நாம் உணர வேண்டும். அப்படியில்லையென்றால் நம்பிக்கை இல்லாமல் இருப்பது நன்று. பாசாங்கு போடுவதை விட நாத்திகனாக இருப்பதே மேல். உலகின் குறைகளை பற்றி பேசாதே. குறைகளை நோக்கி வருத்தப்படு, எங்கும் நீ குறைகளைக் காண்பாய். ஆனால் நீ உலகிற்கு உதவி செய்ய விரும்பினால் உலகை தூற்றாதே, குறை சொல்லாதே. குறை சொல்லி உலகை இன்னும் பலவீனப்படுத்தாதே, உலகின் குறைகள், குற்றங்கள் எல்லாம் அதன் பலவீனத்தால் விளைபவை அல்லவா?

செயல் நன்று, சிந்தித்து செயலாற்றுவதே நன்று: உனது மனதை உயர்ந்த இலட்சியங்களாலும் சிந்தனைகள்லும் நிரப்பு. அவற்றை ஒவ்வொரு நாளின் பகலிலும் ரவிலும் உன் முன் நிறுத்து; அதிலிருந்து நல் செயல்கள் விளையும்.

# ஆன்மீகத் தேடலை வழிப்படுத்தும் தவக்காலம்

## பகைவர்கள் மன்னிப்போம் பரமனின் பிள்ளைகளாவோம் (மத்5:43-48)

இங்கு நாம் பழைய ஏற்பாட்டுப் பகுதியில் ''பகைவனிடம் வெறுப்புக் கொள்வாயாக'' (வி.ப 21:24) புதிய ஏற்பாட்டுப் பகுதியில்'' உங்கள் பகைவரிடமும் அன்பு கூருங்கள். உங்களைத் துன்புறுத்துவோருக்காக இறைவனிடம் வேண்டுங்கள்'' :(மத் 5:44) ஒப்பிட்டால் இயேசுவின் போதனை அதன் உச்ச நிலையை அடைந்து மனிதத்தை தொடுகின்றது.

எங்கள் பகைவர் யார்? என்பதை மறைமுகமாகச் சுட்டிக்காட்டுகிறார். எங்களைத் துன்புறுத்தும் அனைவரும் எங்கள் பகைவர்கள். ஆகவே பகைவர்களை அன்பு செய்ய வேண்டும் என்னும் அழைப்பானது கடினம் என நினைத்தால், அதை எளிதாக்குவதற்கு இயேசுவே நல்லதொரு பரிந்துரையை முன்வைக்கிறார். '' உங்களைத் துன்புறுத்துவோருக்காக இறைவனிடம் வேண்டுங்கள்''. நல்லுறவு என்பது அன்பின் வெளிப்பாடு. அந்த நல்லுறவை யாருடனெல்லாம் நம் மால் மேற்கொள்ள முடியவில்லையோ, அவர்களுக்காக செபிப்பது என் பது அடுத்த வழி.

அன்பு கூர்வதும், இறைவனிடம் வேண்டுவதும் நம் பகைவருக்காக நாம் செய்ய வேண்டிய நற்செயல். இச் செயல்களைச்செய்யும் போது, நாம் நல்லோர் மேலும் தீயோர் மேலும் நம் கதிரவனை உதித்தெழச் செய்யும்.

இயேசு சிலுவையில் தொங்கிய பொழுது தன் பகையாளருக்காகப் பரிந்து பேசி செபித்து நமக்கெல்லாம் பாதை காட்டியிருக்கிறார். நாமும் அதைச்செய்யலாம். செய்ய வேண்டும் என்பதற்கு இத்தவக்காலம் பொருத்தமான காலம். எனவே, நமது துன்புறுத்துவோர் பட்டியலில் உள்ள ஒவ்வொருவரையும் நினைவுகூர்ந்து, அவர்களுக்காக இறைவனை மன்றாடுவோம். இறை தந்தையின் பிள்ளைகள் ஆவோம்.

ம. பிரான்சிஸ்,
கத்தோலிக்க சுதந்திர,
பத்திரிகையாளர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்துக்களின் கிரிக்கெட் போரில்

# பங்குஜன் சாதனைச் சதம்; உத்தமன் அபாரம்

## ★ கொக்குவில் இந்து வலுவான நிலையில் ★

(யாழ்ப்பாணம்)

இந்துக்களின் கிரிக்கெட் போரில் பங்குஜன்-உத்தமகுமரனின் அதிரடியான இணைப்பாட்டத்தின் மூலம் கொக்குவில் இந்துக்கல்லூரி அணி முதலாவது இன்னிங்ஸில் 9 விக்கெட்டுக்களையிழந்து 293 ஓட்டங்களைக் குவித்தது.

தொடர்ந்து முதலாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடி வரும் யாழ்.இந்துக் கல்லூரி அணி நேற்றைய முதல்நாள் ஆட்ட நேர முடிவில் 6 விக்கெட்டுக்களையிழந்து 82 ஓட்டங்களை எடுத்துள்ளது.

இந்துக்களின் கிரிக்கெட் போர் என வர்ணிக்கப்படும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்கும் கொக்குவில் இந்துக் கல்லூரிக்கும் இடையிலான 4ஆவது வருட இரண்டு நாள் இன்னிங்ஸ் கிரிக்கெட் போட்டி நேற்று யாழ் இந்துக்கல்லூரி மைதானத்தில் ஆரம்பமானது.

கோலாகலமான ஆரம்ப நிகழ்வுகளுடன் நேற்றுக்காலை 10 மணிக்கு ஆட்டம் ஆரம்பமானது. இதில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற யாழ்.இந்துக்கல்லூரி அணித்தலைவர் எஸ்.செந்தூரன் முதலில் களத்தடுப்பைத் தேர்வு செய்தார்.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய கொக்குவில் இந்துக் கல்லூரி அணிக்கு ஆரம்பம் சிறப்பாக அமையவில்லை. ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் கே.திவாகர் 9 பந்துகளில் 08 ஓட்டங்களை எடுத்து வாமனனின் பந்தில் டிலுக்ஷனிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

அடுந்துவந்த சங்கீத் பூச்சியத்துடன் ஆட்டமிழக்க கொக்குவில் இந்துக்கல்லூரி அணி 12 ஓட்டங்களை எடுத்து 2 விக்கெட்டுக்களையிழந்தது.

தொடர்ந்து களமிறங்கிய இராகுலன் 19 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து நிலைத்து நின்று ஆடத்தவறினார்.

எனினும் 4ஆவது விக்கெட்டுக்காக பங்குஜனுடன் ஜோடிசேர்ந்த அணித்தலைவர் உத்தமகுமரன் அற்புதமாக ஆடி நம்பிக்கை அளித்தார்.

இந்த ஜோடியின் சிறப்பான இணைப்பாட்டத்தின் மூலம் கொக்குவில் இந்துக்கல்லூரி அணி சரிவிலிருந்து மீண்டது.

இதில் பங்குஜன் அரைச்சதம் பெற கொக்குவில் இந்துக் கல்லூரி அணி 34 ஓவர்களில் 150 ஓட்டங்களை எட்டியது. மறுமுனையில் அணித்தலைவர் உத்தம குமரனும் அரைச் சதம் அடித்து அசத்தினார்.

இந்த ஜோடி 4ஆவது விக்கெட்டுக்காக 23.5 ஓவர்களில் 160 ஓட்டங்களை பகிர்ந்த போது அணித்தலைவர் உத்தமகுமரன் 72 பந்துகளில் (9 பவுண்டரிகள், 6 சிக்ஸர்கள் அடங்கலாக) 93 ஓட்டங்களைக் குவித்து மதுசனின் பந்தில் ஆட்டமிழந்து சதம்பெறும் வாய்ப்பை இழந்தார்.

தொடர்ந்து வந்த சிலோஜன் ஒரு ஓட்டத்துடனும் ஆதித்தன் 14 ஓட்டங்களுடனும் ஜனுதாஸ் 10 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர்.

எனினும் ஆரம்பம் முதல் களத்தில் நிலைத்து நின்று ஆடிய பங்குஜன் இந்துக்களின் போரில் முதலாவது சதத்தை பூர்த்தி செய்து சாதனை படைத்தார்.

இதில் பங்குஜன் 193 பந்துகளில் (7 பவுண்டரிகள் உட்பட) 101 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார்.

இந்நிலையில் கொக்குவில் இந்துக்கல்லூரி அணி 64.3 ஓவர்களில் 9 விக்கெட்டுக்களையிழந்து 293 ஓட்டங்களைக் குவித்து ஆட்டத்தை இடை நிறுத்தியது.இதில் சாம்பவன் 14 ஓட்டங்களை எடுத்தார்.

பந்துவீச்சில் ஜி.மதுஷன் 3 விக்கெட்டுக்களையும் வி.வாமனன், ஆர்.நிருஜன் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் வி.நிலாஜனன், ஆர்.அனோஜன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

தொடர்ந்து முதலாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய யாழ்.இந்துக்கல்லூரி அணிக்கு ஆரம்ப ஜோடிகள் ஏமாற்றினர்.

இதில் சந்ஜீகன் பூச்சியத்துடனும் நிருஜன் 04 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்க யாழ்.இந்துக்கல்லூரி அணி 16 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையிழந்தது.

அடுத்து மூன்றாவது விக்கெட்டுக்காக இணைந்த மதுஷன்-டிலக்ஷன் ஜோடி பொறுப்பான ஆட்டத்தை வழங்கி ஆறுதல் அளித்தனர்.

எனினும் கே.டிலக்ஷன் 10 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார். அடுத்து வாமணன் களமிறங்க மறுமுனையில் இ.மதுஷன் 41 பந்துகளில் (4 பவுண்டரிகள் உட்பட) 26 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து வாமணன் 04 ஓட்டங்களுடனும் பார்த்தீபன் 06 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்க யாழ்.இந்துக்கல்லூரி அணி 24 ஓவர்களில் 74 ஓட்டங்களை எடுத்து 6 விக்கெட்டுக்களையிழந்தது.

இந் நிலையில் நேற்றைய முதல் நாள் ஆட்டநேர முடிவில் யாழ்.இந்துக் கல்லூரி அணி முதலாவது இன்னிங்ஸில் 25 ஓவர்களில் 6 விக்கெட்டுக்களையிழந்து 82 ஓட்டங்களை எடுத்தது.

இதில் அணித்தலைவர் எஸ்.செந்தூரன் 26 ஓட்டங்களுடனும் நிலாஜனன் (தனது கணக்கை ஆரம்பிக்காமல்) ஆட்டமிழக்காமல் களத்தில் உள்ளனர்.

பந்துவீச்சில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணி சார்பாக பங்குஜன் 2 விக்கெட்டுக்களையும் இராகுலன், சுஜீதரன், உத்தமகுமரன், சாம்பவன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இப் போட்டியின் இரண்டாவது இறுதிநாள் ஆட்டம் இன்றாகும்.


**பங்குஜன் சாதனை**

இப்போட்டியில் சதமடித்த கொக்குவில் இந்துக் கல்லூரி வீரர் பங்குஜன் இந்துக்களின் கிரிக்கெட் போர் வரலாற்றில் முதலாவது சதத்தை பதிவு செய்து சாதனை படைத்துள்ளார்.










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகக் கிண்ண கிரிக்கெட் திருவிழா 2011
பெப்ரவரி 19 - ஏப்ரல் 02
ICC Cricket World Cup 2011

# சங்கக்கார சதம்; முரளி ஜாலம்

# நியூசிலாந்தை வீழ்த்தியது இலங்கை




(மும்பை)

அணித்தலைவர் சங்கக்கார சதமடித்துக் கைகொடுக்க, இலங்கை அணி 112 ஓட்டங்கள் வித்தியாசத்தில் நியூசிலாந்து அணியை வீழ்த்தியது.

இலங்கை, இந்தியா, பங்களாதேஷ் ஆகிய நாடுகளில் 10 ஆவது உலகக் கிண்ண கிரிக்கெட் தொடர் நடைபெற்று வருகிறது.

இதில் மும்பை வான்கடே மைதானத்தில் நேற்று நடைபெற்ற 38ஆவது லீக் போட்டியில் ஏ பிரிவைச் சேர்ந்த இலங்கை-நியூசிலாந்து அணிகள் மோதின.

இப் போட்டியில் இலங்கை அணியில் பெரேரா நீக்கப்பட்டு மென்டிஸ் சேர்த்துக்கொள்ளப்பட்டார். நியூசிலாந்து அணியில் மில்ஸ் நீக்கப்பட்டு பென்னட் இணைக் கப்பட்டார்.

இதில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை அணித் தலைவர் குமார் சங்கக்கார முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தார்.

இதனடிப்படையில் களமிறங்கிய இலங்கை அணிக்கு ஆரம்பம் மோசமாக அமைந்தது.

ஆரம்பத்துடுப்பாட்ட வீரர் களான தரங்க 03 ஓட்டங்களுடன் ரன் அவுட் முறையிலும் டில்சான் 03 ஓட்டங்களுடன் சௌத்தியின் பந்திலும் வெளியேற இலங்கை அணி 19 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டை இழந்தது.

எனினும் மூன்றாவது விக்கெட்டுக்காக இணைந்த சங்கக்கார-மஹேல ஜெயவர்த்தன ஜோடி பொறுப்பான இணைப்பாட்டத்தை வழங்க இலங்கை அணி சரிவிலிருந்து மீண்டது.

இந்த ஜோடியின் அனுபவ ஆட்டத்தின் முன் நியூசிலாந்து பந்து வீச்சாளர்களின் திறமை எடுபட வில்லை.

இதில் அணித்தலைவர் சங்கக்கார 77 பந்துகளில் அரைச்சதம் பெற இலங்கை அணி 25 ஓவர்களில் 100 ஓட்டங்களைத் தொட்டது.

மறுமுனையில் மஹேல ஜெயவர்த்தனவும் 74 பந்துகளில் அரைச்சதம் கடந்து நம்பிக்கை அளித்தார்.

இந்த ஜோடி 31.4 ஓவர்களில் 145 ஓட்டங்களை இணைப்பாட்டமாக பகிர்ந்தபோது மஹேல ஜெயவர்த்தனா 90 பந்துகளில் (6 பவுண்டரிகள் உட்பட) 66 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்து மத்யூஸ் களமிறங்க மறுமுனையில் அணித்தலைவர் குமார் சங்கக்கார 119 பந்துகளில் ஒரு நாள் அரங்கில் தனது 11 ஆவது சதத்தைப் பூர்த்திசெய்தார்.

எனினும் குமார் சங்கக்கார 128 பந்துகளில் (12 பவுண்டரிகள், 2 சிக்ஸர்கள் உட்பட) 111 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து வந்த சமரவீர 05, சாமரசில்வா 03 ஓட்டங்களுடனும் குலசேகர ஒரு ஓட்டத்துடனும் மலிங்க 06, முரளிதரன் 7 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து ஏமாற்றினார்.

எனினும் ஒரு முனையில் துணிச்சலாக ஆடிய மத்யூஸ்கை கொடுக்க இலங்கை அணி 50 ஓவர்களில் 09 விக்கெட்டுக்களை யிழந்து 265 ஓட்டங்களை எடுத்தது.

இதில் அஞ்சலோ மத்யூஸ் ஆட்டமிழக்காமல் 35 பந்துகளில் (4 பவுண்டரிகள் உட்பட) 41 ஓட்டங்களை எடுத்தார்.

பந்து வீச்சில் சௌத்தி 3 விக்கெட்டுக்களையும் மைக்குலம் 2 விக்கெட்டுக்களையும் ஓரம் ஸ்ரைரிஸ் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு 50 ஓவர்களில் 266 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற எட்டக் கூடிய இலக்குடன் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணிக்கு பிரன்டன் மைக்குலம் 14, குப்தில் 13 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து சொதப்பலான ஆரம் பத்தை வழங்கினர்.

அடுத்து இணைந்த ரைடர், ரெய்லர் ஜோடி பொறுப்புடன் ஆடி நம்பிக்கை அளித்தனர். இதில் ரைடர் 19 ஓட்டங்களுடன் மென்டிஸின் சுழலில் ஆட்டமிழந்தார்.

**முரளிதரன் அசத்தல்**

அடுத்து வந்த வில்லியம்ஸன் 05 ஓட்டங்களை எடுத்து முரளிதனின் சுழலில் விக்கெட் காப்பாளர் சங்கக்காராவின் சுப்பர் ஸ்ரொம்பில் வெளியேறினார்.

தொடர்ந்து அணித்தலைவர் ரோஸ்ரெய்லர்33ஓட்டங்களுடன்முரளிதரனின் சுழலில் ஆட்டமிழந்தார்.

அடுத்து களமிறங்கிய ரைரிஸ் இனையும் 06 ஓட்டங்களுடன் முரளிதரன் வெளியேற்ற நியூசிலாந்து அணி 23.5 ஓவர்களில் 102 ஓட்டங்களை எடுத்து 6 விக்கெட்டுக்களை பறிகொடுத்தது.

பின்வரிசையில் பிராங்க்லின், ஓரம் தமது பங்கிற்குத் தலா 20 ஓட்டங்களைப்பெற நியூசிலாந்து அணி 35 ஓவர்களில் 153 ஓட்டங்களை மாத்திரமெடுத்து சகல விக்கெட்டுக்களையுமிழந்தது.

இதன் மூலம் 112 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றஇலங்கை அணிதொடரில்9புள்ளிகளைப்பெற்று ஏ பிரிவில் முன்னிலைபெற்றது.

பந்துவீச்சில் முத்தையா முரளிதரன் 8 ஓவர்கள் பந்துவீசி 25 ஓட்டங்களைக் கொடுத்து 4 விக்கெட்டுக்களையும் மென்டிஸ் 2 விக்கெட்டுக்களையும் மலிங்க, குலசேகர, மத்யூஸ், டில்சான் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் சாய்த்தனர்.




இப் போட்டியில் இலங்கை அணியின் வெற்றிக்கு அடித்தளம் அமைத்த அணித்தலைவர் சங்கக்கார ஆட்டநாயகனாகத் தெரிவு செய்யப்பட்டார்.

**சங்கக்கார அபாரம்**

இப் போட்டியில் சிறப்பான ஆட்டத்தை வழங்கிய இலங்கை அணித் தலைவர் குமார் சங்கக்கார 111 ஓட்டங்கள் எடுத்தார்.

இதன் மூலம் உலகக்கிண்ண அரங்கில் தனது முதலாவது சதத்தைப் பூர்த்திசெய்தார்.

அத்துடன் இப் போட்டியில் குமார் சங்கக்கார 49 ஓட்டங்கள் எடுத்த போது சர்வதேச ஒருநாள் போட்டி அரங்கில் 9ஆயிரம் ஓட்டங்கள் என்ற புதிய மைல் கல்லை எட்டினார்.

இதன் மூலம் இலங்கை சார்பில் 9ஆயிரம் ஓட்டங்களைக் கடந்த 4 ஆவது இலங்கை வீரர் என்ற பெருமையையும் பெற்றார்.

## புள்ளிப் பட்டியல்

### பிரிவு A

| அணிகள் | போட்டி | வெற்றி | தோல்வி | சமனிலை | முடிபில்லை | புள்ளிகள் | நிகர ஓட்ட எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|
| இலங்கை | 6 | 4 | 1 | 0 | 1 | 9 | +2.582 |
| அவுஸ்திரேலியா | 5 | 4 | 0 | 0 | 1 | 9 | +1.693 |
| நியூசிலாந்து | 6 | 4 | 2 | 0 | 0 | 8 | +1.135 |
| பாகிஸ்தான் | 5 | 4 | 1 | 0 | 0 | 8 | +0.729 |
| சிம்பாவே | 5 | 1 | 4 | 0 | 0 | 2 | -0.669 |
| கனடா | 6 | 1 | 5 | 0 | 0 | 2 | -1.987 |
| கென்யா | 5 | 0 | 5 | 0 | 0 | 0 | -3.005 |

### பிரிவு B

| அணிகள் | போட்டி | வெற்றி | தோல்வி | சமனிலை | முடிபில்லை | புள்ளிகள் | நிகர ஓட்ட எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|
| தென்னாபிரிக்கா | 5 | 4 | 1 | 0 | 0 | 8 | +1.606 |
| இந்தியா | 5 | 3 | 1 | 1 | 0 | 7 | +0.768 |
| இங்கிலாந்து | 6 | 3 | 2 | 1 | 0 | 7 | +0.072 |
| மேற்கிந்தியத் தீவுகள் | 5 | 3 | 2 | 0 | 0 | 6 | +1.650 |
| பங்களாதேஷ் | 5 | 3 | 2 | 0 | 0 | 6 | -0.765 |
| அயர்லாந்து | 6 | 2 | 4 | 0 | 0 | 4 | -0.896 |
| நெதர்லாந்து | 6 | 0 | 6 | 0 | 0 | 0 | [illegible] |

# அயர்லாந்து வெற்றி; நெதர்லாந்து சோகம்

(கொல்கத்தா)

ஸ்ரிர்லிங்கின் அதிரடிச்சதத்தின் மூலம் அயர்லாந்து அணி 6 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் நெதர்லாந்து அணியை வீழ்த்தியது.

உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரில் கொல்கத்தாவில் நேற்று நடைபெற்று 37ஆவது லீக்போட்டியில் பி பிரிவைச் சேர்ந்த அயர்லாந்து-நெதர்லாந்து அணிகள் மோதின இப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற அயர்லாந்து அணித்தலைவர் போர்டர் பீல்ட் முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தார்.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய நெதர்லாந்து அணி டோஸ்சற்றின் சிறப்பான சதத்தின் மூலம் 50 ஓவர்களில் 306 ஓட்டங்களை எடுத்து சகல விக்கெட்டுக்களையுமிழந்தது.

இதில் டோஸ்சற் 108 பந்துகளில் 13 பவுண்டரிகள் ஒரு சிக்ஸர் உட்பட 106 ஓட்டங்களையும் அணித் தலைவர் யேர்ரன் 82 பந்துகளிலும் (10 பவுண்டரிகள் உட்பட) 84 ஓட்டங்களையும் பாரேசி 44 ஓட்டங்களையும் எடுத்தனர். பந்துவீச்சில் மோனி, ஸ்ரிர்லிங் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

இதனடிப்படையில் பதிலுக்கு இமாலய இலக்கை விரட்டிய அயர்லாந்து அணி ஸ்ரிர்லிங்கின் அதிரடிச்சதத்தின் மூலம் 47.4 ஓவர்



களில் 4 விக்கெட்டுக்களை மாத்திரமிழந்து 307 ஓட்டங்களை குவித்து 6 விக்கெட்டுக்களால் அபாரவெற்றி பெற்றது. இதன் மூலம் அயர்லாந்து அணி தொடரில் 2ஆவது வெற்றியைப் பெற்று ஆறுதல் அடைந்தது.

துடுப்பாட்டத்தில் ஸ்ரிர்லிங் 72 பந்துகளில் (4 பவுண்டரிகள், 2 சிக்ஸர்கள் உட்பட 101 ஓட்டங்களையும் அணித்தலைவர் போர்டர் பீல்ட் 68 ஓட்டங்களையும் நெய்ல் ஓ பிரையன் ஆட்டமிழக்காமல் 57 ஓட்டங்களை எடுத்தனர்.

பந்துவீச்சில் கூப்பர் 2 விக்கெட்டை சாய்த்தார். இப் போட்டியின் ஆட்டநாயகனாக அயர்லாந்து அணியின் ஸ்ரிர்லிங் தெரிவானார்.

இதேவேளை நெதர்லாந்து அணி தான் விளையாடிய 6 லீக் போட்டிகளிலும் தோல்வியடைந்து தொடரிலிருந்து விடைபெற்றது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'போர்க் குற்றம்' ஆதாரம்...

வன்னி இறுதிக் கட்டப் போரின் போது யுத்த வலயங்களில் வாழ்ந்த மக்கள் மற்றும் அங்கிருந்து எடுக்கப்பட்ட காணொளி மற்றும் புகைப்பட ஆதாரங்கள் என்பன மூலமாக அவை உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக ஐக்கிய நாடுகள் சபையின் நிபுணர் குழுவுக்கு நெருக்கமான வட்டாரங்களை மேற்கோள்காட்டி செய்திகள் தெரிவிக்கின்றன.

படைத்தரப்பினர் மட்டுமின்றி தமிழீழ விடுதலைப்புலிகளும் போர்க் குற்றங்களில் ஈடுபட்டுள்ளதாயினும், தற்போதைய நிலையில் தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பு செயற்படாத காரணத்தால் அரசாங்கத்திற்கு எதிராக மட்டுமே நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளதாக தெரியவருகின்றது.

ஐக்கிய நாடுகள் சபையின் நிபுணர் குழுவின் அறிக்கை கொழும்பிடம் கையளிக்கப்பட்டதன் பின் அரசாங்கம் அது தொடர்பில் திருப்திகரமான நடவடிக்கைகளை மேற்கொள்ளாத பட்சத்தில் அடுத்து எடுக்கவேண்டிய இராஜதந்திர நடவடிக்கைகள் குறித்து தற்போது முக்கிய வட்டாரங்களில் ஆலோசிக்கப்பட்டு வருவதாகவும் அவ் வட்டாரங்கள் மேலும் குறிப்பிட்டுள்ளன.

(ந-5)

# கடாபி பயந்தார்;...

களுக்கு எதிராக கடும் நடவடிக்கை மேற்கொள்ளப் போவதாக கடாபி அறிவித்திருந்தார்.

ஆனால் ஐ.நா. பாதுகாப்புச்சபை தீர்மானத்தின் பின்னர் நேற்று தலைநகர் திரிபோலியில் செய்தியாளர்களை சந்தித்த லிபிய வெளிவிவகார அமைச்சர் மௌஸா கௌஸா அனைத்து இராணுவ நடவடிக்கைகளையும் நிறுத்துவதற்கு லிபியா தீர்மானித்துள்ளதாக தெரிவித்தார்.

ஐ.நா. பாதுகாப்புச் சபையின் தீர்மானத்தை லிபியா ஏற்றுக்கொள்வதாகவும் சர்வதேச சமூகத்துடனான பேச்சுவார்த்தைக்கான அனைத்து மார்க்கங்களையும் லிபியா ஊக்குவிப்பதாகவும் அவர் தெரிவித்தார். விமானப் பறப்பு படை வலயத்தை லிபியா மதித்து நடக்கும் என அவர் கூறினார்.

(ந-5)

# போர்க்குற்ற விசாரணை...

போர்க்குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் அமெரிக்க செனட் சபை, தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான அமெரிக்காவின் துணை இராஜாங்க அமைச்சர் றொபர்ட் ஓ பிளேக் வெளியிட்ட கருத்துக்களை சுட்டிக் காட்டியே லீ ஸ்கோர்ட், போர்க்குற்றங்கள் தொடர்பில் அரசாங்கத்தின் உண்மைகளைக் கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக்குழு சர்வதேச நியமங்களுக்கு ஏற்றவகையில் இவ் விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளார்.

இப் போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் சர்வதேச நியமங்களுக்கு ஏற்றவகையில் விசாரணைகள் மேற்கொள்ளப்படாத பட்சத்தில் பொருளாதார தடைகளை எதிர்கொள்வதற்கு நிர்ப்பந்திக்கப்படும் எனவும் இவ்வறிக்கையில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஈழத்தமிழ் மக்கள் தமது அரசியல் உரிமைகளையும் நீதியையும் பெற்றுக்கொள்வதற்கு நீண்டகாலம் காத்திருப்பதாக இவ்வறிக்கையில் குறிப்பிட்டுள்ள லீ ஸ்கோர்ட் தமிழ் மக்களின் வாழ்வாதார நிலைமைகள் மேலும் மோசமடைந்து செல்வதாகவும் தெரிவித்துள்ளார்.

அத்துடன் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சியில் தமிழ் மக்கள் மட்டுமல்ல; சிங்கள புத்திஜீவிகள், ஊடகவியலாளர்கள் மற்றும் மனித உரிமை செயற்பாட்டாளர்களும் பெரும் அச்சுறுத்தலுக்குள்ளாகி வருவதாகவும் கொன்சவேர்ட்டிவ் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் லீ ஸ்கோர்ட் சுட்டிக் காட்டியுள்ளார்.

(ந-5)

# உள்ளூராட்சி சபைத் தேர்தல்...

மன்றமான திஸ்ஸமஹாராமை பிரதேச சபையையும் இழந்துள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கைப்பற்றிய உள்ளூராட்சி சபைகள் உட்பட வடக்குக் கிழக்கு சபைகளின் தேர்தல் முடிபுகள் வருமாறு,

**முல்லைத்தீவு மாவட்டம்**

**மாந்தை கிழக்கு பிரதேசசபை**

இ.த.க-1223 வாக்குகள் -6 ஆசனங்கள், ஐ.ம.சு.மு.-920 வாக்குகள் -3 ஆசனங்கள்.

**வவுனியா மாவட்டம்**

**வவுனியா வடக்கு பிரதேசசபை**

இ.த.க-2253 வாக்குகள் -8 ஆசனங்கள், ஐ.ம.சு.மு.-1463 வாக்குகள் -4 ஆசனங்கள், ஐ.தே.க.-608 வாக்குகள் -1 ஆசனம்.

**வவுனியா தெற்கு (தமிழ்) பிரதேசசபை**

இ.த.க- 11,878 வாக்குகள்- 07 ஆசனங்கள், ஐ.ம.சு.மு- 5,488- வாக்குகள்-02 ஆசனங்கள், ஐ.தே.க- 1420 வாக்குகள்- 01 ஆசனம்.

**வவுனியா தெற்கு(சிங்கள) பிரதேசசபை**

ஐ.ம.சு.மு- 4382 வாக்குகள்-07 ஆசனங்கள், ஐ.தே.க-985 வாக்குகள்- 01 ஆசனங்கள், சுயேட்சைக் குழு1-694 வாக்குகள்- 01 ஆசனம்.

**வெண்கலச்செட்டிக்குளம்பிரதேசசபை**

இ.த.க.- 3578 வாக்குகள்- 05 ஆசனங்கள், ஐ.ம.சு.மு- 2295 வாக்குகள்-02 ஆசனங்கள், சி.மு.கா- 1587 வாக்குகள்- 02 ஆசனங்கள்.

**மன்னார் மாவட்டம்**

**மன்னார் பிரதேசசபை**

இ.த.க.- 5061 வாக்குகள்-05 ஆசனங்கள், ஐ.ம.சு.மு-4619 வாக்குகள்-02 ஆசனங்கள், சி.மு.கா- 3906 வாக்குகள்- 02 ஆசனங்கள்.

**மன்னார் நகரசபை**

இ.த.க.-4757 வாக்குகள்- 05 ஆசனங்கள், ஐ.ம.சு.மு - 2848 வாக்குகள்- 02 ஆசனங்கள்.

**மாந்தை மேற்கு பிரதேசசபை**

இ.த.க.- 3898 வாக்குகள்- 07 ஆசனங்கள், ஐ.ம.சு.மு- 3185 வாக்குகள்- 04 ஆசனங்கள், சி.மு.கா- 1336 வாக்குகள்- 01 ஆசனம்.

**நானாட்டான் பிரதேசசபை**

இ.த.க.- 5845 வாக்குகள்- 06 ஆசனங்கள், ஐ.ம.சு.மு- 3270 வாக்குகள்- 03 ஆசனங்கள்.

**முசலி பிரதேசசபை**

ஐ.ம.சு.மு.- 5052 வாக்குகள்- 06 ஆசனங்கள், சி.மு.கா-2202 வாக்குகள்- 02 ஆசனங்கள், இ.த.க.- 872 வாக்குகள்- 01 ஆசனம்.

**திருகோணமலை மாவட்டம்**

**திருமலை நகரசபை**

இ.த.க.- 11601 வாக்குகள் -8 ஆசனங்கள், ஐ.ம.சு.மு.4137 வாக்குகள் -2 ஆசனங்கள், ஐ.தே.க. 2044 வாக்குகள் -1 ஆசனம், ஜே.வி.பி.- 519 வாக்குகள் -1 ஆசனம்.

**வெருகல் பிரதேசசபை**

இ.த.க.-2197 வாக்குகள் -5 ஆசனங்கள், ஐ.ம.சு.மு.-984 வாக்குகள் -1 ஆசனம், த.ம.வி.பு-527 வாக்குகள் -1 ஆசனம்.

**கோமரங்கடவெல பிரதேசசபை**

ஐ.ம.சு.மு.-3674 வாக்குகள் -8 ஆசனங்கள், ஐ.தே.க. -482 வாக்குகள் -1 ஆசனம்.

**கிண்ணியா பிரதேசசபை**

ஐ.ம.சு.மு.-6471 வாக்குகள் - 5 ஆசனங்கள், ஐ.தே.க. -3579 வாக்குகள் -2 ஆசனங்கள்.

**மொறவெவ பிரதேசசபை**

ஐ.ம.சு.மு.-2288 வாக்குகள் - 6 ஆசனங்கள், ஐ.தே.க. -1528 வாக்குகள் -3 ஆசனங்கள்.

**பதவிசிறிபுர பிரதேசசபை**

ஐ.ம.சு.மு.-3682 வாக்குகள் - 6 ஆசனங்கள், சுயேட்சை குழு 2- 1018 வாக்குகள் -1 ஆசனம், ஐ.தே.க. -922 வாக்குகள் -1 ஆசனம், சுயேட்சைக் குழு 1 -506 வாக்குகள் -1 ஆசனம்.

**தம்பலகாமம் பிரதேசசபை**

ஐ.ம.சு.மு.-6174 வாக்குகள் - 6 ஆசனங்கள், ஐ.தே.க. -4737 வாக்குகள் -3 ஆசனங்கள்.

**மூதூர் பிரதேசசபை**

ஐ.ம.சு.மு.-12739 வாக்குகள் - 7 ஆசனங்கள், இ.த.க. -6918 வாக்குகள் -3 ஆசனங்கள், ஐ.தே. க.- 2586 வாக்குகள் -1 ஆசனம்.

**கிண்ணியா நகரசபை**

ஐ.ம.சு.மு.-6876 வாக்குகள் - 5 ஆசனங்கள், ஐ.தே.க. -3727 வாக்குகள் -1 ஆசனம். சுயேட்சைக் குழு1-3285 வாக்குகள் -1 ஆசனம், இ.த.க.-704 வாக்குகள் -0 ஆசனம்

**அம்பாறை மாவட்டம்:**

**நாவிதன்வெளி பிரதேசசபை**

இ.த.க-3186 வாக்குகள் -4 ஆசனங்கள், சி.மு.கா-2037 வாக்குகள்-1 ஆசனம், த.ம.வி.பு.-1769 வாக்குகள் -1 ஆசனம், ஐ.ம.சு.மு.- 1075 வாக்குகள் -1 ஆசனம்.

**ஆலையடிவேம்பு பிரதேசசபை**

இ.த.க-4700 வாக்குகள் -5 ஆசனங்கள், ஐ.ம.சு.மு.-1960 வாக்குகள் -2 ஆசனங்கள், சுயேட்சைக்குழு 1- 1909 வாக்குகள் -1 ஆசனம், த.ம.வி.பு.-859 வாக்குகள்-1 ஆசனம்.

**தெகியத்தகண்டிய பிரதேசசபை**

ஐ.ம.சு.மு.-14448 வாக்குகள் -12 ஆசனங்கள், ஐ.தே.க.-10685 வாக்குகள் -7 ஆசனங்கள், சுயேட்சைக்குழு 1 -2096 வாக்குகள் -2 ஆசனங்கள்.

**பதியத்தலாவ பிரதேசசபை**

ஐ.ம.சு.மு.-5003 வாக்குகள் -7 ஆசனங்கள், ஐ.தே.க.-2748 வாக்குகள் -3 ஆசனங்கள். ஜே.வி.பி. -477 வாக்குகள் -1 ஆசனம்.

**பொத்துவில் பிரதேசசபை**

சி.மு.கா.-7457 வாக்குகள்.-6 ஆசனங்கள், ஐ.ம.சு.மு.-3031 வாக்குகள் -2 ஆசனங்கள், இ.த.க.-1161 வாக்குகள் -1 ஆசனம்.

**உகண பிரதேசசபை**

ஐ.ம.சு.மு.-15823 வாக்குகள் - 9 ஆசனங்கள், ஐ.தே.க.-10007 வாக்குகள்-5 ஆசனங்கள், சுயேட்சைக் குழு 2-1405 வாக்குகள் -1 ஆசனம்.

**அட்டாளைச்சேனை பிரதேசசபை**

சி.மு.கா.-12512 வாக்குகள் -7 ஆசனம், ஐ.ம.சு.மு.-4991 வாக்குகள் -2 ஆசனங்கள்.

**அக்கரைப்பற்று பிரதேசசபை**

தே.கா. -2261 வாக்குகள் -6 ஆசனங்கள் .சி.மு.கா. -775 வாக்குகள் -1 ஆசனம்.

**அம்பாறை நகரசபை**

ஐ.ம.சு.மு.-5649 வாக்குகள் - 6 ஆசனங்கள், ஐ.தே.க.-4159 வாக்குகள் -3 ஆசனங்கள்.

**தமண பிரதேசசபை**

ஐ.ம.சு.மு.-10960 வாக்குகள் -7 ஆசனங்கள், ஐ.தே.க.-4986 வாக்குகள் -2 ஆசனங்கள்.

**இறக்காமம் பிரதேசசபை**

சி.மு.கா.-3196 வாக்குகள் -5 ஆசனங்கள், ஐ.ம.சு.மு.-2952 வாக்குகள் -2 ஆசனங்கள்.

**மகாஓயா பிரதேசசபை**

ஐ.ம.சு.மு.-5501 வாக்குகள் - 7 ஆசனங்கள், ஐ.தே.க.-2866 வாக்குகள் -3 ஆசனங்கள்.

**நாமல்ஓயா பிரதேசசபை**

ஐ.ம.சு.மு.-6369 வாக்குகள் - 6 ஆசனங்கள், ஐ.தே.க.-4460 வாக்குகள் -3 ஆசனங்கள்.

**நிந்தவூர் பிரதேசசபை**

சி.மு.கா. 10355 வாக்குகள் -6 ஆசனங்கள், ஐ.ம.சு.மு.-2468 வாக்குகள் -1 ஆசனம்.

**மட்டக்களப்பு மாவட்டம்:**

**ஏறாவூர் பிரதேசசபை**

ஐ.ம.சு.மு. -6593 வாக்குகள் - 6 ஆசனங்கள், சி.மு.கா. -3453 -2 ஆசனங்கள், சுயேட்சைக்குழு 3 -1693 வாக்குகள்-1 ஆசனம்.

**காத்தான்குடி பிரதேசசபை**

ஐ.ம.சு.மு. -10357 வாக்குகள் -6 ஆசனங்கள், சுயேட்சைக்குழு 1 -6809 வாக்குகள்-2 ஆசனம். சி.மு.கா.-1429 வாக்குகள்-1 ஆசனம்.

**கோறளைப்பற்று மேற்கு பிரதேசசபை**

ஐ.ம.சு.மு. -8816 வாக்குகள் -7 ஆசனங்கள், ஐ.தே.க. -1581 வாக்குகள் -1 ஆசனம், சி.மு.கா.-966 வாக்குகள் -1 ஆசனம், த.ம. வி.பு.- 491 வாக்குகள் -0 ஆசனம். இ.த.க. -329 வாக்குகள் -0 ஆசனம். (ந-5)


## மலேசியாவில் UK Degrees

Legenda Education Group

25 வருடகால அனுபவம் கொண்ட
5 மூன்றாம்நிலைக் கல்வி நிறுவனங்கள்
40 நாடுகள் – 5,000 நண்பர்கள்

Edexcel International - UK, University of East London - UK, Coventry University - UK மற்றும் Thompson Rivers University of Canada ஆகிய நிறுவனங்களுடன் இணைந்து, சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்ட பாடநெறிகளையும், பட்டக்கல்வியையும் வழங்கி வரும், மலேசிய அரசாங்கத்தின் அங்கீகாரம் பெற்ற தனியார் மூன்றாம்நிலைக் கல்வி நிறுவனம்.

64க்கும் மேற்பட்ட Foundation, Diploma, HND, Degree & Masters Programs

- Engineering: Civil Engineering, Electrical & Electronic Engineering, Mechatronic Engineering, Mechanical Engineering, Mechanical Engineering Design, Software Engineering
- Computer Science & Information Technology: Computing, Information Technology, Business Information Systems, Software Engineering, Mobile Communication
- Quantity Surveying & Construction Management: Quantity Surveying, Construction Management
- Architecture: Architecture, Architectural Design
- Medical Science: Nursing
- Business: Business, Management, Business & Finance
- Visual Arts: 3D Design, Graphic Design, Photography, Animation, Fashion & Textiles, Product Design
- Accounting & Finance: Finance, Accounting



குறைந்த செலவு ! இலகுவில் விசா!! IELTS அவசியமில்லை!!!
படிக்கும்போதே / படித்து முடித்ததும் UK செல்லும் வாய்ப்பு

இலவச கருத்தரங்கு & நேரடிச் சந்திப்பு
பல்கலைக்கழக நேரடிப் பிரதிநிதி சஜீப்

மார்ச் 21,22 திங்கள், செவ்வாய் பிற்பகல் 2 மணி
இடம்: தியாகி அறக்கொடை நிலையம் 527, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்

மார்ச் 22 செவ். 10 மணி
இடம்: சிகரம் ஊடக இல்லம்

Mr.Sajeeb
Director (Sales & Marketing)
Legenda Education Group
Mobile: +6016-235 5640
Email: sajeebv@legendagroup.edu.my

★ Spot Admission ★ O/L , A/L உடன் UK Degree

Legenda Education Group Persiaran UTI, Bandar Universiti Teknologi Legenda (BUTL), Batu 12,71700, Mantin, Negeri Sembilan, Darul Khusus, West Malaysia. Tel: +606-758 6909 Fax: +606-758 2150 Web: www.juti.edu.my

வட மாகாணத்துக்கான ஏக முகவர்கள்:
சிகரம் ஊடக இல்லம்
221, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்
முன் பதிவுகளுக்கு : 021-300 80 60, 0773 616 798
MEDIA

இருக்கும் பணத்துடன் இங்கிலாந்துப் பட்டம் & பயணம்


## எழுத்தாளர்களுடனான சந்திப்பு

தமிழ் மக்களின் இன்றைய தேவையை மையப்படுத்திய ஆக்க இலக்கியப் படைப்புக்கள் மற்றும் சமூக, பொருளாதார, அறிவியல் படைப்புகள் என்பவற்றுக்கான களம் அமைக்கும் நோக்குடன் எழுத்தாளர்களுடனான சந்திப்பொன்றை உங்கள் வலம்புரி நாளிதழ் ஏற்பாடு செய்துள்ளது.

இச் சந்திப்பை ஒழுங்குபடுத்துவதற்கு வசதியாக கலந்து கொள்ளவிருக்கும் எழுத்தாளர்களின் பெயர் விபரங்களை வலம்புரியின் எழுத்தாளர் அவை பதிவுசெய்யவுள்ளது. எனவே எழுத்தாளர்கள் (இளம் எழுத்தாளர்கள் உட்பட) தங்கள் முழுப் பெயர், தபால் முகவரி, தொலைபேசி இலக்கம் என்பன அடங்கிய விபரங்களை,

"எழுத்தாளர் அவை"
வலம்புரி
இல.3, 2ஆம் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

என்னும் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

எழுத்தாளர் அவை,
வலம்புரி.


## O/L Day CLASS

பிரிவு- 1- ஆரம்பம்: 21.03.2011
திங்கள் காலை 8.00 மணி

* புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன.

நாவலர்
ஆனைப்பந்தி சந்தி, யாழ்ப்பாணம்
(அ-2731)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 19.03.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org